பொ. 258

PRESENTED BY
V. PR. PL. M. KASIVISVANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI.

PRESENTED BY:
V. PR. PL. M.
KASIVISVANATHAN CHETTIAR
PAGANERI.

மகாமகோபாத்தியாய

டாக்டர் உ. வே. சாமிநாதையர்

பாகனேரி.

பங்கிம் சந்த்ரர் அரிய நாவல்கள்

1. விஷ விருக்ஷம்
2. ஆனந்த மடம்
3. துர்க்கேசநந்தினி
4. மாதங்கினி
5. தேவி சௌதுராணி
6. இந்திரா
7. ரஜனி
8. கிருஷ்ணகாந்தன் உயில்
9. கபாலகுண்டலா
10. ஹிரண்மயி
11. ராதா ராணி
12. மிருணாளினி
13. சந்திரசேகரன்
14. ராஜஸிம்ஹன்
15. சீதாராம்
16. கமலகாந்தன் தினக்குறிப்பு
17. பங்கிம் சந்த்ரர் - வாழ்க்கை வரலாறும் மேதையும்

3342

மகாமகோபாத்தியாய

டாக்டர் உ. வே. சாமிநாதையர்

'சுதேச மித்திரன்' உதவி ஆசிரியர்

கே. சுந்தரராகவன், பி. ஏ.,

எழுதியது

மஹாகனம்

வி. எஸ். ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார்

முன்னுரையும்

மகாமகோபாத்தியாய பண்டிதமணி

மு. கதிரேசச் செட்டியார்

சிறப்புரையும் கொண்டது

அல்லயன்ஸ் கம்பெனி

மயிலாப்பூர் :: சென்னை

காபிரைட்]

[ரூ. 1-4-0

பெரியார் சரிதைகள்

1. கவி ரவீந்திரநாத டாகுர்
2. ஜே. என். டாடா
3. பண்டித ஜவாஹர்லால்நேரு
4. பண்டித மோதிலால் நேரு
5. மஹாத்மா காந்தி
6. பண்டித மாளவ்யா
7. லாலா லஜபதிராய்
8. ஜான்ஸி ராணி லக்ஷ்மீபாய்
9. சுவாமி ராமதீர்த்தர்
10. ஸ்ரீ அரவிந்த யோகி
11. புதுமைக்கவி பாரதியார்
12. தீனபந்து ஆண்ட்ரூஸ்
13. புக்கர் வாஷிங்டன்
14. லோகமான்ய திலகர்
15. சுபாஷ் போஸ்
16. எல்லைகாந்தி கப்பார்கான்
17. மௌலானா அபுல் கலாம் ஆஸாத்
18. விட்டல்பாய் படேல்
19. ராஜாஜி

சாது அச்சுக்கூடம்,

சென்னை - (1942731221)

3342

பொருளடக்கம்

			பக்கம்
	முகவுரை	...	v
	முன்னுரை	...	vii
	சிறப்புரை	...	xiii
1.	பீடிகை	...	1
2.	இளமைப் பருவம்	...	6
3.	தமிழ்ப் பயிற்சி	...	14
4.	பதவி கிடைத்தது	...	22
5.	ஆராய்ச்சி	...	29
6.	பிரஸிடென்ஸி காலேஜ்	...	43
7.	புகழும் புத்தகங்களும்	...	57
8.	தினசரி அலுவல்	...	75
9.	நோக்கங்கள்	...	82
	அனுபந்தம்	..	93

படங்கள்

என் உடல், பொருள், ஆவி

மூன்றுக்கும் உரியவர்களான என் அருமைத்

தாய்தந்தையர்க்கு

ஸமர்ப்பணம்.

முகவுரை

சுமார் பன்னிரண்டு வருஷங்களுக்கு முன்பு, கலா ரஸிகர் ஸ்ரீமான் வி. வி. ஸ்ரீநிவாஸையங்கார், மஹாமஹோபாத்தியாயருக்கு என்னை அறிமுகமாக்கி வைத்தார். அதற்கப்புறம் அனேக தடவைகள் நான் அப்பெரியாரைக் கண்டு அவருடைய அமுத மொழிகளை ஆனந்தத்துடன் பருகியதுண்டு. அவர் என்னிடம் காட்டிய ப்ரீதியும் அன்பும் என்னை அவரிடம் ஆகர்ஷித்தன. அவருடைய அருமை பெருமைகளைத் தமிழ்நாடு நன்கு அறியச் செய்யவேண்டும் என்ற அபிலாஷையும் எனக்கு அதிகரித்து வரலாயிற்று; அவர் ஆற்றிவந்த தொண்டின் அளவிட முடியாத மதிப்பை என்னால் இயன்ற அளவு தமிழர் உணரும்படிப் பண்ண வேண்டும் என்ற எண்ணமும் உள்ளத்தில் மேலோங்கி வந்தது. அப்பெரியாரின் சதாபிஷேகம் கொண்டாடப்பட்ட சமயம் நான் 'சுதேசமித்திர'னில் அவரைப் பாராட்டி எழுதி யிருந்தேன். அதற்கப்புறம் நான் அவரைத் தரிசிக்கப் போயிருந்த போது அவர் என்னுடைய முயற்சியைப் பாராட்டினார். பின்பு அவர் சமீபத்தில் சிவபதமடைந்த போது, 'சுதேசமித்திரன் வாரப் பதிப்பி'ல் அவரது வாழ்க்கையின் உயர்வை விஸ்தரித்திருந்தேன். அதைப் படித்த பல அன்பர்கள் அதைப் புத்தக ரூபமாகப் பிரசுரிக்கவேண்டும் என்று விரும்பினர். இவர்களுள்

என் ஆப்தரும், அல்லயன்ஸ் கம்பெனியின் சொந்தக் காரருமான ஸ்ரீ குப்புஸாமி ஐயரின் சிரத்தையும், பெரியாரின் பாராட்டுமே நான் இப்போது இந்தப் புத்தகத்தை எழுதத் துணிந்ததற்குக் காரணங்கள். குறைகள் பல இருக்கக்கூடும். அவற்றை அறிஞர்கள் மன்னிப்பார்கள் என்று நம்புகிறேன்.

இச்சிறு நூலுக்கு முன்னுரை உதவிய மஹா கனம் வி. எஸ். ஸ்ரீநிவாஸ சாஸ்திரியாருக்கு நான் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன். தமது தேக அசௌகரியத்தையும் பொருட்படுத்தாது, என்பால் ப்ரீதி பூண்டு அவர் எழுதியிருக்கும் குண சித்திரம் இப்புத்தகத்திற்குத் தனிச் சிறப்பை அளித்திருக்கிறது.

மகாமகோபாத்தியாய முதுபெரும் புலவர் பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் உவந்தளித்திருக்கும் சிறப்புரையினுல் இப்புத்தகம் அதிக சோபை அடைந்திருக்கிறது. இது அவரிடம் என்னை க்ருதஜ்ஞதை உள்ளவனுக ஆக்குகிறது.

என் அன்பார்ந்த தலைவர், 'சுதேசமித்திரன்' ஆசிரியர் ஸ்ரீமான் ஸி. ஆர். ஸ்ரீநிவாஸையங்காரின் ஆதரவும் இங்கே குறிப்பிடவேண்டியதாகும்.

இந்தச் சரித்திரத்தை வெகு நேர்த்தியான முறையில் வெளியிட்டிருக்கும் அல்லயன்ஸ் கம்பெனி சொந்தக்காரரையும் நான் என் மனமாரப் பாராட்டுவது மிகப் பொருத்தமாகும்.

"பரோடா ஹவுஸ்",
மயிலாப்பூர்.

கி. சு.

முன்னுரை

மஹாகனம்

வி. எஸ். ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார் அவர்கள்

ஸ்ரீமான் சுந்தரராகவன் இயற்றிய புத்தகத்திற்கு முன்னுரையாகச் சில வரிகளை எழுத ஒப்புக்கொண்டிருக்கிறேன். எனக்குத் தமிழில் தக்க பயிற்சியும் இல்லை; மஹாமஹோபாத்தியாயரின் பெருமையை முற்றும் அறியவாகிலும் எடுத்துரைக்கவாகிலும் தக்க வலிமையும் இல்லை. இப்புத்தகம் சிறியதுதான்; ஆனால் வெகு திறமையுடனும் விஷய பக்தியுடனும் எழுதப்பட்டது. எளிய நடை; சுவை மலர்ந்த சொற்கள்; மேலான கொள்கைகள்; இவை, படிப்போர்க்குத் தமிழ்ப் பாஷையில் மிகுந்த சிரத்தையையும் ருசியையும் ஊட்டுகின்றன. புத்தகத்தின் முடிவில் பண்டித சாமிநாதையரவர்கள் செய்திருக்கும் தொண்டுகளும், எழுதியிருக்கும் நூல்களும் வியாஸங்களும், கோவையாகக் கணக்கிடப்பட்டிருக்கின்றன. அவை மலை போன்ற பெருமையும் உயர்வும் கொண்டவை.

தமிழுலகில் இவருக்குச் சரியானவர் என்றோ, இவர் அருகில் நெருங்கக் கூடியவர் என்றோ கூறக் கூடிய புலவர் ஒருவரும் இல்லை. அவரே வெளியிட்

டிருக்கும் தம் வரலாற்றினால் இந்த உண்மை நன்கு தெரிகிறது. ஸ்ரீ சுந்தரராகவன் இந்த வரலாற்றைச் செவ்வையாக ஆராய்ந்து உபயோகப்படுத்தியது தவிர, வேறு சிலருடைய அனுபவங்களையும் இச்சிறு புத்தகத்தில் அதி சாமர்த்தியமாக அமைத்திருக்கிறார். சிறிது நேரத்திற்குள், பெரிய பொருளைப்பற்றி, ஓடும் ஓட்டத்திலேயே தெரிந்துகொள்ள வேண்டும் என்ற இக்காலத்திய முறை கொண்டவர்களுக்கு ஸ்ரீ சுந்தரராகவன் பேருதவி புரிந்திருக்கிறார்.

தென்னாட்டில் தற்காலத்தில் பிறந்து வளர்ந்தவர்களுள், சாமிநாதையரவர்களின் மேன்மையைக் கேட்டுக்களித்தவர் கொடுத்து வைத்தவர் ஆவார். அவரை நேரில் கண்டு கொஞ்சமாவது கூடிப் பேசியவர் உத்தமர் ஆவார். எனக்கு அந்தப் பாக்கியம் ஓர் அளவு உண்டு. கும்பகோணம் காலேஜில் அவர் தமிழ் ஆசிரியராக இருந்தபோது நான் 'எப். ஏ.', 'பி. ஏ.' வகுப்புக்களில் படித்தேன். ஆனால் நான் ஸம்ஸ்கிருத வர்க்கத்தைச் சேர்ந்தவன். எங்களுக்கு உபாத்தியாயர் பெரும் புகழ்பெற்ற மஹாமஹோபாத்தியாய பெருக வாழ்ந்தான் ரங்காசாரியார். அவருக்கும் சாமிநாதையரவர்களுக்கும் பரஸ்பர நன்மதிப்பும் நட்பும் உண்டு. பாடம் நடக்காதபோது, இருவரும் அடிக்கடி வராந்தாவில் காவேரியை நோக்கி நின்றுகொண்டு பேசக் கண்டிருக்கிறேன். இப்போதும் படம் பிடித்தாற்போல் என் கண்முன் நிற்கிறார்கள்.

ரங்காசாரியார் குள்ளம்; வேஷ்டி சட்டை எல்லாம் சுமாராய்த்தான் இருக்கும். ஐயரவர்கள் தக்க உயரமும் நாகரிக உடையும் உள்ளவர். ஐம்பத்தைந்து வருஷங்களுக்கு முன் கர்நாடக கும்ப

கோணத்தில், இஸ்திரி நலுங்காமல் சட்டை போட்டவரைக்காண்பது அரிது! மற்ற நடையிலும் பேச்சிலும் அவ்வாறே ஸம்ஸ்கிருதம் தணிந்தும் தமிழ் தூக்கியும் நிற்கும். சாமிநாதையரவர்களின் குரல் இனிப்புள்ளது; சற்றுப் பாட்டுப் பயிற்சியும் பெற்றது; நாசூக்காய், நன்கு கற்றவர் நற்சபையில் பேசும் சொல்லாக இருக்கும்; கடினமின்றி மேன்மை கொண்டது. எங்கள் ஐயாவோ நாடோடியாய் வீடுகளில் பேசுவது போலத்தான் பேசுவார்; முழுப் பட்டவர்த்தனம்; ஸம்ஸ்கிருத வகுப்பில் பிள்ளைகளைப் பார்த்துத் தம் வீட்டுக் குழந்தைகளைப் போலத்தான் பேசுவார். அடிக்கடி "அடா" போடுவார். சாமிநாதையரவர்களோ மாணவர்களை "வாரும்", "போம்" என்றுதான் சொல்லுவார்.

தமிழ் வகுப்பு அநேகமாய், இங்கிலீஷ் வகுப்புப் போல் சந்தடி இல்லாமலும், பாடத்தில் செலுத்திய கவனமாயும் இருக்கும். ஸம்ஸ்கிருத ஐயா உத்ஸாகமாகப் பாடம் சொல்லும்போது, காலேஜ் முழுதும் கேட்கும்; தமிழ்ப் பாடமோ வகுப்பு நிறைந்திருக்குமே தவிர வெளிவராது. எங்கள் ஐயா சுலோகம் படித்தால், ஏதோ "திவஸ மந்திரம்" போலத்தான் இருக்கும். தமிழ் உபாத்தியாயர் செய்யுள் படிக்கும்போது, வெளியே நின்று கேட்போருக்கும் ஆனந்தமாய் இருக்கும்; நீட்டிப் பாடாவிடினும், மோஹனம், காம்போதி என்று அறியும்படி அழகாகச் சாயை காட்டுவார்.

இலக்கிய இலக்கணங்களிலும் சாஸ்திரங்களிலும் அவர்களைப்போல் பயின்றவர்கள் இல்லை; புலியும் சிங்கமும் என்றே கூற வேண்டும். அவர்களிடம் படித்த எங்களுக்குப் பக்தியும் ப்ரீதியும் பிற்காலத்தில்

கூடக் கொஞ்சமேனும் குன்றவில்லை. ஸம்ஸ்கிருத வர்க்கத்தில் சிரத்தையாகப் படிப்பவன் என்று நான் பெயர்பெற்றதால் சாமிநாதையரவர்களுக்குக்கூட என் பேரில் ஒரு கண் உண்டு ; எங்கே கண்டாலும் க்ஷேமம் விசாரிப்பார்.

நாங்கள் இருவரும் சென்னையில் வேலையாக இருந்தபோது அடிக்கடி சந்திப்பது உண்டு ; யோக க்ஷேமத்தைப் பரஸ்பரம் வெகு ப்ரீதியுடன் விசாரித்துக்கொள்வோம். ஐயரவர்களின் பேச்சு, மிகுந்த நிதானம், மரியாதை ஆகியவை இரண்டும் பொருந்தியது. ஸ்தோத்திரச் சொற்கள் அளவுக்கு மிகுந்தே இருக்கும் ; பெரும்பாலும் சிலேடையும் இருக்கும். கவனித்துக் கேட்காவிட்டால் பொருளைக் காணமுடியாது. தமது மனத்தை நாம் அறிந்துகொள்ள வில்லை என்று அவர் சந்தேகித்தால் தயவுகூர்ந்து இரண்டாம் முறை விளங்கச் சொல்வார். சிற்சில வேளைகளில் மனிதர்களைப் பற்றியோ, நிகழ்ச்சிகளைப் பற்றியோ, கடுமையான அபிப்பிராயங்களை வெளியிடுவார் ; ஆனால் குரல் மிருதுவாகவே இருக்கும்; முக ஜாடையும் கடுப்புக் காட்டாது. எனக்கு மட்டும், "ஏன் இவ்வளவு சுற்றிப் பேச வேண்டும்? வெட்டொன்று, துண்டிரண்டு என்று சொல்லக் கூடாதா ?" என்று ஒவ்வொரு சமயம் தோன்றியதுண்டு. நான் இதை வெளியிடாவிடினும், வெகு கூர்மையான அறிவுள்ள ஐயரவர்களுக்கு இது புலப்பட்டிருக்கும் !

சாமான்ய முன்ஷி - பண்டித கோஷ்டியில் இவரைச் சேர்க்க முடியாது. கம்பீர நடையும், உதாரப் போக்கும், நுட்ப சம்பாஷணமும், லௌகிக ஞானமும், பழைய ஒழுக்கமும் எப்படியோ அவரிடம் ஒன்றுகூடி,

எல்லோர் மனத்தையும் கவர்ந்து, சென்ற இடமெல்லாம் அவருக்குச் சிறப்பை விளைவித்தன. புதுப் பழக்கம் உள்ளவர் போலவே பிரசங்கங்களுக்கும், கோஷ்டிகளுக்கும், வேடிக்கை விளையாட்டுக்களுக்கும் வருவார்; நெருங்கியும் பழகுவார். திருவல்லிக்கேணி அர்பன் கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ் இப்பொழுது சென்னை முழுதும் பரவிக் கீர்த்தியுடன் விளங்குகிறது. இதை நாற்பது வருஷங்களுக்கு முன்னர்த் துவக்கிய பன்னிரண்டு கனவான்களில் இவரும் ஒருவர். இப்பொழுது புரொபஸர் டி. எஸ். சுப்ரமண்ய ஐயரும் நானுந்தான் இவர்களில் பாக்கி.

இவை தவிர, இரண்டு சம்பவங்கள் இன்றும் என் நினைவில் ஊன்றி யிருக்கின்றன. ஹிந்து ஹைஸ்கூல் தலைமை உபாத்தியாயராக நான் இருந்த காலத்தில், பிள்ளைகளைக் கொண்டு "கொரியோலேனஸ்" என்ற இங்கிலீஷ் நாடகத்தில் சில காட்சிகளை நடத்திக்காட்டினேன். ஸ்ரீநிவாசன் என்ற பிள்ளை பெண் வேஷம் பூண்டான்; அவன் தோற்றமும், பாவனைகளும், குரலும் பெண் போலவே இருந்து, அன்றைய நிகழ்ச்சியைச் சிறப்பித்தன. இறுதியில், ஐயரவர்கள் சற்று நேரம் தங்கியிருந்து, கதா பாத்திரங்களை மேற்கொண்ட மாணவர்களுக்குப் புகழ் வார்த்தைகள் சிலவற்றைச் சொல்லி, என்னிடம் தனிமையாக மெலிந்த குரலில், "பெண் வேஷம் மட்டும் இவ்வளவு நன்ருய்ப் பலிக்கக் கூடாது" என்ருர். நான் உபாத்தியாயர் வேலையைத் துறந்து இந்திய ஊழியர் சங்கத்தில் சேரும்போது, எனக்கு விடையளித்த பெரிய சபையில், "யம் பாலயஸி தர்மம்" என்று தொடங்கும் வால்மீகி வசனத்தை

எடுத்துரைத்தேன். கவிகளின் கருத்து, அருமை ஆகிய வற்றை நன்கு அறிந்த நம் ஐயரவர்கள், 'அது சந்தர்ப் பத்திற்குப் பெரிதும் ஏற்றபடி இருந்ததைக் கண்டு, சபை கலைந்தவுடன் என்னிடம் வந்து, "ஆதி கவியின் பெரும் கருத்தை எடுத்துப் பொருத்தத்தைக் காட்டியது வெகு நேர்த்தியாய் இருந்தது. இது எந்நாளும் என் உள்ளத்தை விட்டகலாது" என்று சிலாகித்தார். நானும் அன்றுமுதல் இதை மறவாது, நான் பெற்ற பெருமைகளில் ஒன்ருகக் கொண்டாடிவருகிறேன்.

கோயமுத்தூர்
20—7—42

வ. ச. ஸ்ரீநிவாஸன்.

சிறப்புரை

மகாமகோபாத்தியாய பண்டிதமணி

மு. கதிரேசச் செட்டியார் அவர்கள்

மகாமகோபாத்தியாய, தாக்ஷிணாத்ய கலாநிதி, டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களுடைய வரலாற்றுச் சுருக்கத்தைப் பார்த்தேன். ஐயரவர்களுடைய சரித்திரம் மிக விரிவாக 'ஆனந்தவிகட'னில் அவர்களால் எழுதப்பட்டு முடிவடையாத நிலையில் உள்ளதைத் தமிழன்பர்கள் அறிவர். அத்துணை விரிவைப் பொறுமையோடு படித்தல் வேண்டும். அதற்குத் தோற்றுவாயாக இவ்வரலாற்றுச் சுருக்கம், 'சுதேசமித்திரன்' உதவியாசிரியர் திரு. கே. சுந்தரராகவன், பி. ஏ. அவர்களால் எழுதப்பட்டு, மயிலாப்பூர், அல்லயன்ஸ் கம்பெனியாரால் அழகுற அச்சிட்டு வெளிப்படுத்தப்படுகிறது.

தமிழன்னையின் தலைமகனும், பத்துப்பாட்டு முதலிய சங்க இலக்கியங்களையும், சிலப்பதிகாரம் முதலிய பெருங் காப்பியங்களையும் சிறந்த முறையில் ஆராய்ந்து முகவுரை, ஆராய்ச்சிக் குறிப்பு முதலியவற்றால் அணிசெய்து தமிழுலகுக்கு உபகரித்தவர்களும், நெடுங்காலம் சிறந்த கல்லூரிகளில் தமிழ்ப் பேராசிரியராக இருந்து மாணவர்களுக்குத் தமிழ்

அறிவூட்டியவர்களும் ஆகிய ஐயரவர்கள் வரலாறு, தமிழன்பர்கள் எல்லோரும் படித்து இன்புறத்தக்கது. ஐயரவர்கள் உயர்ந்த கல்வியும், சிறந்த ஒழுக்கமும், கடவுட்பத்தியும், உலகியலறிவும் நிரம்பப் பெற்றவர்கள்.

உலகிற்குப் பயன்படும் பணி செய்வதில் இடையறு முயற்சியுடைய மகனே தெய்விக ஆற்றல் படைத்தவனுவான் என்பது பெரியார் கண்டது. ஐயரவர்களுடைய இடையறுத உழைப்பை நோக்குங்கால் இதற்கு முற்றும் இலக்காக விளங்கிய கர்மயோகி என்று இவர்களைக் கூறலாம். இவர்கள் அரிய வரலாற்றைப் படிப்பதால் நல்லாசிரியர் பண்பும், மாணவர்களை அடக்கியாளும் முறையும், பலதிறத்து மக்களையும் அவரவர் தகுதிக்கேற்பப் பேசி மகிழ்விக்குங் குணமும், செய்தொழிலைப் பயனுறுவுரைக்கும் திறனும், அரிய நூல்களைச் சிறந்த முறையில் ஆராய்ந்து தெளிவுறுத்தும் இயல்பும் ஆகிய இன்னோரன்ன உயர்ந்த குணம் செயல்களை அறிந்து நலம் எய்துதல் கூடும்.

இவ்வரலாற்றுச் சுருக்கத்தில், இடையிடையே ஐயரவர்கள் எழுதிய சரிதப் பகுதிகள் சில எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. படிப்பார்க்கு அவை உவகையளிப்பன. ஒரு விரிந்த வரலாற்றைச் சில மணி நேரத்தில் படித்தறியும்படி வெளிப்படுத்திய அல்லயன்ஸ் கம்பெனியார் உதவி பாராட்டத்தக்கது.

இத்தகைய பெரியார் வரலாற்று வெளியீடுகள் கல்வியாளர்க்கும், மற்றவர்களுக்கும் நற்பயன் அளிப்

பனவாம். பிழையில்லாத எளிய நடையில் இவ் வரலாறு எழுதப்பட்டிருப்பதால் இஃது எல்லோரும் படித்து இன்புறத்தக்கது. இதனைத் தமிழ் நாட்டிற் பரப்பவேண்டுமென்று வெளியிடும் அல்லயன்ஸ் கம்பெனியார் நன்னோக்கம் இனிதின் நிறைவேறுக.

மகிபாலன்பட்டி
22—7—1942

மு. கதிரேசன்.



மஹாமஹோபாத்தியாய

டாக்டர் உ. வே. சாமிநாதையர்

1

பீடிகை

"சென்ற ஐம்பது வருஷங்களில் இம்மாகாணத்தில் விளங்கிய பெரியார்கள் ஒவ்வொருவரையும் அநேகமாக எனக்குத் தெரியும். ஆனால் அறிவாற்றலில் சிறந்து முழுமனத்துடன் கல்விக்காகப் பாடுபட்டதில் மஹாமஹோபாத்தியாய சாமிநாதையருக்கு ஈடாக வேறு யாரையும் நான் அறியேன். 'அதிவேகமாய்ச் சென்றுகொண்டிருக்கும் காலம்

ஒருநாளும் திரும்பிவராது' என்னும் உண்மையை நன்குணர்ந்து அவரைப்போல் ஒவ்வொரு நிமிஷத்தையும் நற்பயன்படுத்தி வருபவர்களையும் நான் பார்த்ததில்லை. கலைஞர்களாகக் கருதப்படுவோர் தங்கள் தங்கள் கலைகளிடத்தில் கொள்ளக்கூடிய சிரத்தா பக்தியில் இப்பெரியாரைப் போல் சிறந்தவர் தென்னிந்தியாவில் - ஏன் இந்தியாவில்கூட - இல்லையென்றே அச்சமின்றிச் சொல்லுவேன்." - இவ்விதம் மஹாமஹோபாத்தியாயரின் சதாபிஷேக சமயத்தில் ஸ்ரீ. வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் எழுதினர்.

மஹாமஹோபாத்தியாயர் இணையற்றவர் ; தமிழ்த்தாயின் அருந்தவப் புதல்வர் ; தாய் மொழிக்கு அருந் தொண்டாற்றியவர் ; இவர் நிறைவேற்றி வைத்த பணி நிகரிலாச் சிறப்பு வாய்ந்தது. இம்மஹா புருஷரின் கிருஹம் கலைமகள் நிலையமாகத் திகழ்கிறது. இப்பெரியாருடைய புகழ், தமிழ் மணக்கும் இடங்களில் எல்லாம் பரவி விளங்குகிறது. தம் ஆயுட்காலம் முழுமையும் கல்வி அபிவிருத்திக்காகவும் ஆராய்ச்சியின் மேம்பாட்டிற்காகவும் உழைத்தார். ஏடு காத்த இப்பெருங் கிழவர் தம் அந்தியகாலம் வரையிலும் பழஞ்சுவடிகளைப் புரட்டிப் படித்து, பிறருக்கும் அவை பயன்பெறும் வழியையே நாடி வந்தார். தமிழ்மொழி மறுபடியும் தழைத்தோங்க உதவினர். வடமொழிக்குச் சம

மான ஸ்தானத்தைத் தென்மொழிக்கும் தேடிக் கொடுத்தார். தமிழ்ப் பாஷையில் இருந்த விலை யற்ற மாணிக்கங்களைக் கண்டெடுத்த பெருமை ஐயரவர்களையே சார்ந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக நம் தமிழ் தனிமதிப்புப் பொருந்தியது என்பதை நிரூபித்தவர் இவரே.

ஸ்ரீ சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் கூறியதுபோல், "ஸ்ரீசாமிநாதையரின் கல்வி, கடலைப் போன்றது. மெய்வருத்தம் பாராத அவருடைய முயற்சியுடன் தேனீயும் எறும்புமே போட்டியிட லாம். தாய்மொழியின் தொண்டிலும் கல்வி முயற் சியிலும் அவருடன் நாம் போட்டியிட முடியாதாயி னும் அவருடைய அடக்க குணத்தையாவது நாம் கற்றுக்கொள்ள வேண்டும்". இத்தகைய குண விசேஷங்கள் அமைந்து, அணுகுவோர் அனைவரா லும் ஒருமுகமாகப் பாராட்டப்பட்டு வந்த மஹா மஹோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையர் சமீபத்தில் திருக்கழுக் குன்றத்தில் 1942-ஆம்ௗ ஏப்ரல்மீ 28உ தேக வியோகமானது, முக்கியமாய் நம் தமிழ் நாட்டிற் கும், பொதுவாகக் கல்வி உலகிற்கும் அளவிட முடியாத நஷ்டமாகும்.

ஆயிரம் பிறை கண்ட ஐயரவர்கள் "வேத நூற் பிராயம் நூறு" வரை ஜீவந்தர்களாயிருந்து தாம் மேற்கொண்ட பணியை மேலும் மேலும்

தொடர்ந்து நடத்தி வருவார் என்று தமிழ் நாடு ஆவலுடன் எதிர் பார்த்தது; ஆசை நிராசை யாகிவிட்டது; தமிழர் இன்று துக்க சாகரத்தில் ஆழ்ந்திருக்கின்றனர். நம்மை விட்டுப் பிரிந்து சென்ற இவ்வுத்தமர் சில தினங்களுக்குமுன் கால் எலும்பு அகஸ்மாத்தாய் முறிந்துவிட்டது காரணமாகப் படுத்த படுக்கையாகவே இருந்து வந்தார். நம் நகர நிலைமை கேவலமாகிவிட்டதை யொட்டித் திருக்கழுக்குன்றத்தில் உள்ள திருவா வடுதுறை மடத்திற்குச் சென்ருர். தேகத்தளர்ச்சி யும் தள்ளாத வயதும் ஐயரவர்கள் திடீரென வியோகமாகியதற்குக் காரணமாயின.

நம்மோடு அன்புடன் பேசி, தமது கலைச் செல்வத்திலிருந்து நமக்கும் ஒரு பங்கு அளித்த தாக்ஷிண்ணுத்ய கலாநிதி இப்போது மறைந்து விட்டார்! ஆயினும் இவரது பேச்சின் இனிமை யையும், சாதுர்யமான ஸ்வபாவத்தையும், இளையவர் களிடம் காட்டிய விசுவாஸத்தையும், கலாபிவிருத்தி யில் கொண்ட ஆர்வத்தையும், கடமையில் ஊன்றிய கருத்தோடு கஷ்டத்தைக் கவனியாமல் உழைத்த உழைப்பையும் எவர் மறுக்கமுடியும்? தமிழ்ப் பெரியாருடன் நெருங்கிப் பழகிய எவர்தாம் தம் தாய்ப் பாஷையிடம் புத்துணர்ச்சியையும் மட் டில்லா மகிழ்ச்சியையும் வற்ருத ஊற்றுப்போன்ற உத்ஸாகத்தையும் கொள்ளாமல் இருக்கமுடியும்?

பீடிகை

இப்போது தமிழர் நாகரிகம், அதன் பழமை ஆகியவற்றைப்பற்றி யெல்லாம் பிரஸ்தாபம் அதிகரித்து வருகிறது. சாமிநாதையரவர்களின் சேவையின்றேல் இப்பேச்சுக்களுக்கு இடமேயிருந்திராது. ஐயரவர்கள் ஓர் உன்னதமான கலைவீரர். தமிழணங்கு தன் ஆபரணங்களை இழந்து ஆதரிப்போரின்றி அவதியுறுவதை இவர் பார்த்தார். இவர் உடனே அத்தேவிக்கு உதவி புரிய விரைந்தார். ஒரு கலா ரஸிகர் பல வருஷங்களுக்கு முன்னர் எழுதியதுபோல், அவள் இழந்த ஐந்து ஆபரணங்களுள் மூன்றைக் கண்டெடுத்து அவற்றால் அவளை அலங்கரித்துள்ளார். சிந்தாமணியால் அவளது சிரஸுக்குச் சோபை யளித்து, மணிமேகலையினால் அவளது அழகிய இடையைச் சிங்காரித்து, சிலப்பதிகாரத்தினால் அவளது இருபாதங்களுக்குத் திரும்பவும் இனிய ஓசை ஒலிக்கும் சதங்கையை அணிவித்திருக்கிறார். "கைவளையலாகிய வளையாபதியையும் காதணியாகிய குண்டலகேசியையும் கண்டெடுத்து அவளது காந்தி அதிகரிப்பதையே அவர் எதிர்பார்க்கிறார்" என்றார் அந்த அபிமானி. உத்க்ருஷ்டமான பணி; உத்ஸாகமளிக்கும் பணி; உயர்வு காட்டும் பணி; ஐயரவர்களின் பணி இவ்விதமானது.

2

இளமைப் பருவம்

மஹாமஹோபாத்யாயர் கும்பகோணத்திற்கு அருகிலுள்ள சூரியமூலை என்னுமோர் கிராமத்தில் 1855-ஆம் வருஷம் பிப்ரவரி மாதம் 19-ந் தேதி பிறந்தார். பிதாவின் பெயர் வேங்கடசுப்பையர்; சொந்த ஊர் உத்தமதானபுரம்.

"இப்போது உள்ள உத்தமதானபுரத்துக்கும் 'எங்கள் ஊர்' என்று பெருமையோடு நான் எண்ணும் உத்தமதானபுரத்துக்கும் எவ்வளவோ வேறுபாடு உண்டு. இந்தக் காலத்தில் உள்ள பல சௌகரியமான அமைப்புக்கள் அந்தக் காலத்தில் இல்லை; ரோடுகள் இல்லை; கடைகள் இல்லை; உத்தியோகஸ்தர்கள் இல்லை; ரயிலின் சப்தம் இல்லை. ஆனாலும் அழகு இருந்தது; அமைதி இருந்தது; ஜனங்களிடத்தில் திருப்தி இருந்தது; பக்தி இருந்தது. அவர்கள் முகத்தில் மகிழ்ச்சி நிலவியது; வீடுகளில் லக்ஷ்மீகரம் விளங்கியது."

[— என் சரித்திரம், முதல் அத்தியாயம்]

இவர் பிறந்த வருஷத்தைப் பற்றி ஒரு குறிப்பை இங்கு எடுத்துக்காட்டுவது உசிதமாகும்.

"ஒவ்வொரு தாயும் தன்னுடைய குழந்தையை அதிருஷ்டசாலியாகக் கருதுவது வழக்கம். தங்களுக்குக் கிடைத்த லாபங்களை யெல்லாம் அக் குழந்தையின் அதிருஷ்ட பலனாகவே பாராட்டுவாள். என்னுடைய அன்னையாரும் அவ்வாறு சொல்வதுண்டு. நான் பிறந்த வருஷத்தில் எங்களுக்கென்று அரியிலூரில் ஒரு வீடு ஏற்பட்டது என் அதிருஷ்டத்தின் பலன் என்றே நம்பினார். அதுமட்டுமன்றி, அந்தப் பக்கத்திலிருந்த ஒரு சந்நியாசி இறக்கும்போது, 'ஆனந்த வருஷத்தில் இங்கே ஓர் அதிசயம் நடக்கப் போகிறது. அதைக் காணாமல் போகிறேன்' என்று சொல்லி உயிர் நீத்தாராம். இந்த நாட்டிற்கு முதல் முதலாக ரயிலும் தந்தியும் வந்தமையே அவர் கூறிய அதிசயம் என்று எல்லோரும் கருதினார்கள். அந்த அதிசயம் நிகழ்ந்த வருஷத்தில் நான் பிறந்ததும் ஓர் அதிசயம் என்றே என் தாயாரின் உள்ளத்தில் ஒரு சந்தோஷ உணர்ச்சி உண்டாகி யிருக்கக்கூடும். ஆனால் அதை வெளிப்படையாகச் சொல்வதில்லை. 'இப்படி ஒரு சந்நியாசி சொன்னாராம். அந்த வருஷத்தில்தான் நீ பிறந்தாய்' என்று பிற்காலத்தில் என் அருமை அன்னையார் அன்புடன் கூறியிருக்கிறார்."

[— என் சரித்திரம், அத்தியாயம் 8]

வேங்கடசுப்பையர் நல்ல சிவபக்தர். சில காலம் உடையார்பாளையம் ஜமீனில் சங்கீத வித்வாளுக இருந்தவர். ஜமீன் கடனில் மூழ்கி விடவே அவர் அந்த வேலையை விட்டு, ஜீவனத்திற்கு வேறு உபாயம் தேட வேண்டியதாகியது. கிராமங்களில் புராண கதா காலக்ஷேபங்கள் நடத்தி, தமது வாழ்க்கையைக் கழிக்கலானுர் அவர். தந்தையார் தமது சிரமத்தைப் பாராட்டாமல் தம் குமாரருக்குத் தகுந்த வித்தியாப்யாசம் அளிக்கத்தீர்மானித்தார். பால்யத்திலேயே இவருக்குத் தமிழிலும் சங்கீதத்திலும் மிகுந்த விருப்பம் ஏற்பட்டுவிட்டது. தகப்பனுரே இவருக்கு முதலில் தமிழாசிரியராக இருந்து, நிகண்டு, சதகம் முதலிய கருவி நூல்களைக் கற்பித்தார்.

ஐயரவர்கள் ஆரம்பத்தில் திண்ணைப் பள்ளிக் கூடத்தில் படித்தார். அங்கு இவர் கல்வி பயின்ற முறை, மிகவும் ரஸமானது.

> "கிராமத்துப் பள்ளிக்கூடங்களைத் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் என்றும் சொல்வார்கள். அந்தப் பள்ளிக்கூடங்களில் மாணவர்கள் பயிலும் முறையே வேறு. இப்போது அதனை எங்கும் பார்க்க முடியாது. பிள்ளைகள் யாவரும் விடியற்காலையில் ஐந்து மணிக்கே எழுந்து சுவடித்தூக்கோடு பள்ளிக்கூடத்திற்கு வந்துவிடவேண்டும். சுவடிகளை யெல்லாம் வைத்துத் தூக்கிச் செல்லும் கயிறுகள் சேர்ந்த

பலகைக்கு சுவடித்தூக்கென்று பெயர். அந்தத் தூக்கு ஒருவகை உறியைப்போல் இருக்கும். தூக்கைப் பள்ளிக்கூடத்தில் ஓரிடத்தில் மாட்டி விட்டுப் பிள்ளைகள் முறைப்படி இருந்து முதல்நாள் நடந்த பாடங்களைப் பாராமல் ஒப்பிக்க வேண்டும். அதற்கு முறை சொல்லுதல் என்று பெயர். அப்போது உபாத்தியாயர் வீட்டிற்குள் படுத்துக்கொண்டிருப்பார் ; அல்லது வேறு ஏதேனும் செய்துகொண்டிருப்பார். அவரை எதிர்பாராமல் பிள்ளைகள் பாடங்களை முறை சொல்லவேண்டும். அதை அவர் உள்ளே இருந்தபடியே கவனிப்பார். பெரும்பாலும் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் உபாத்தியாயரது வீட்டுத் திண்ணையிலேயே இருக்கும்.

"ஆறுமணிக்குமேல் பிள்ளைகளெல்லாம் வாய்க்கால் அல்லது குளம் முதலியஇடங்களுக்குப் போய்த் தந்தசுத்தி செய்து தங்கள் தங்கள் குலத்திற்கேற்ற சின்னங்களைத் தரித்துக்கொண்டுஸந்தியாவந்தனமோ வேறு அனுஷ்டானமோ செய்வார்கள். பிறகு தங்கள் வஸ்திரங்களில் மணலை எடுத்துக்கொண்டு மூஷிக வாகனம், ஸரஸ்வதி ஸ்தோத்திரம் முதலியவற்றைச் சொல்லிக்கொண்டே பள்ளிக்கூடத்திற்கு வருவார்கள். முன்பிருந்த பழைய மணலை அகற்றிவிட்டுப் புதிய மணலைப் பரப்புவார்கள். எழுதுவதற்குரியவர்கள் அதில் எழுதுவார்கள் ; மற்றவர்கள் தங்கள் பாடங்களைப் படிப்பார்கள்.

"ஒன்பது மணிக்குப் பிள்ளைகளைப் பழையது (பழைய அமுது) சாப்பிடுவதற்கு விடுவது வழக்கம். அப்பொழுது உபாத்தியாயர் ஒரு பக்கத்தில் வீற்றிருந்து ஒவ்வொரு பிள்ளையின் கையிலும் பிரம்பால் அடித்தனுப்புவார். பழைய சோற்று ருசியில் பள்ளிக்கூட ஞாபகம் மறக்கக் கூடாதென்பதற்காக அங்ஙனம் செய்வார்போலும்!

"பிள்ளைகளுக்குள்ளே கெட்டிக்காரனாகவும் பலசாலியாகவுமிருப்பவனை உபாத்தியாயர் சட்டாம் பிள்ளையாக நியமிப்பார். அவன் புத்திசாலியாக இராவிட்டாலும் பலசாலியாக இருக்கவேண்டியது அவசியம். உபாத்தியாயருக்குப் பிரதிநிதியாகப் பிள்ளைகளை அடக்கியாள்வதும் பாடம் ஒப்பிக்கக் கேட்பதும் அவன் வேலைகள். அவனிடம் எல்லோரும் அடங்கி நடக்கவேண்டும். சில பிள்ளைகள் அவனுக்கு வேண்டிய தின்பண்டங்களைக் கொடுத்துத் தம்வசப் படுத்தி உபாத்தியாயருடைய பிரியத்தையும் அவன் மூலமாகச் சம்பாதிப்பார்கள். சில சமயங்கள் உபாத்தியாயரது கடுமையைக் காட்டிலும் சட்டாம்பிள்ளையின் கடுமை அதிகமாயிருக்கும்.

"மாணாக்கர்களுள் பழையவர்கள் புதியவர்களுக்குக் கற்பிப்பதும் பள்ளிக்கூட வழக்கங்களுள் ஒன்று.

"பன்னிரண்டு மணிக்குமேல் மத்தியான்னச் சாப்பாட்டுக்குப் பிள்ளைகள் வீட்டுக்குச் செல்வார்கள். பிறகு மூன்றுமணிக்கு மீண்டும் பாடம்

தொடங்கப்படும். இரவு ஏழுமணிவரையில்கூட பள்ளிக்கூடம் நடைபெறுவதுண்டு.

"ஒவ்வொரு நாளும் பாடங்கள் முடிந்தவுடன் பிள்ளைகளை வீட்டுக்கு அனுப்பும்போது அவர்களது ஞாபகசக்தியை விருத்தி செய்வதற்காக ஒவ்வொரு வருக்கும் பூ, மிருகம், பட்சி, ஊர், இவற்றின் பெயர் களில் வகைக்கு ஒவ்வொன்றை உபாத்தியாயர் சொல்லி அனுப்புவார். அந்தப் பெயர்களை மறவா மல் மறுநாள் வந்து சொல்லவேண்டும். 'மறந்து போய்விடுவோமோ' என்ற பயத்தால் சில பிள்ளை கள் வீடு சென்றவுடன், தமக்கு உபாத்தியாயர் சொன்ன பொருள்களின் பெயர்களைத் தம் தாய் தகப்பனுரிடம் சொல்லி விடுவார்கள். மறுநாள் விடியற்காலையில் அவர்களிடம் அவற்றைக் கேட்டுத் தெரிந்துகொண்டுவந்து சொல்வார்கள்."

[— என் சரித்திரம், அத்தியாயம் 10]

அந்த நாளில் சிலேட்டுக்கிடையாது; மணல்தான் அதன் ஸ்தானத்தில் இருந்தது. புத்தகம் கிடை யாது; பனையேடுதான் அதற்குப்பதில். பேனு கிடை யாது ; எழுத்தாணியைத்தான் உபயோகிக்கவேண் டும். ஒவ்வொரு பிள்ளையும் தினந்தோறும் உபாத்தி யாயருக்கு ஏதாவது ஒருவஸ்துவைக் கொண்டுவந்து கொடுப்பது வழக்கம். மாதம் கால் ரூபாய் சம்பளம் ஒவ்வொருவனும் அவருக்குத் தருவான். பணக் காரர் வீட்டிலிருந்து சாப்பாட்டுக்கு நெல் வந்து விடும். உபாத்தியாயருக்கு இருந்த மதிப்புக்கும்

அளவு கிடையாது. விஷமப் பிள்ளைகளை அடக்கியாள அவரையே அனைவரும் அந்நாளில் அண்டினர்.

"பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயர் செய்விக்கும் தண்டனைகள் மிகக் கடுமையானவை. அவரது பிரம்படி ஒன்றினாலேயே மாணாக்கர்கள் கதி கலங்குவார்கள். விட்டத்தில் கயிற்றைக் கட்டி அதைப் பிடித்துத் தொங்கிக்கொண்டு சிலநேரம் இருக்கும்படிச் செய்வது ஒரு தண்டனை. அதைக் கோதண்டம் என்று கூறுவர். அப்படிப் பையன் தொங்கும்போது கீழிருந்து உபாத்தியாயர் அவனது காலில் அடிப்பதும் உண்டு. நான் ஒருமுறை இந்தத் தண்டனையைப் பெற்றிருக்கிறேன். பாடம் நன்றாகச் சொன்னவனைச் சொல்லாதவன் முதுகில் ஏறச்செய்து பிற்பகலில் பிள்ளைகளைச் சுற்றிவரச்செய்வது வழக்கம். அதற்குக் குதிரையேற்றம் என்று பெயர். அவ்விதம் நான் ஒருமுறை சவாரி செய்திருக்கிறேன்."

[— என் சரித்திரம், அத்தியாயம் 10]

இந்தப் படிப்புமுறை இப்போது கண்டிக்கப்படுகிறதாயினும், அக்காலத்தில் அடிக்குப் பயந்து பிள்ளைகள் படித்து வந்ததுடன் லாபமும் அடைந்தனர் என்பதை ஆட்சேபிக்க முடியாது. அந்த நாளில் கிராமங்களுக்கு இங்கிலீஷ் படிப்புவரவில்லை. நகரங்களில் சில இடங்களில் மட்டுமே இப்படிப்பு அளிக்கப்பட்டது.

இதற்கப்புறம் சிலரிடம் தமிழ்படித்த ஐயரவர்கள் அரியிலூர்ச் சடகோபையங்காரிடம் பாடம் கேட்டார்.

"சடகோபையங்காரிடம் என்று நான் மாணாக்கனாகப் புகுந்தேனோ அன்றே தமிழ்த்தாயின் அருட்பரப்பிற் புகுந்தவனானேன். எனக்குத் தமிழில் சுவை உண்டாகும் வண்ணம் கற்பித்த முதற்குரு சடகோபையங்காரே. பொம்மைகளைக் காட்டிக் குழந்தைகளைக் கவர்வதுபோல, தமிழ்ச் செய்யுட்களின் நயத்தை எடுத்துக் காட்டி, என் உள்ளத்திற்குள் அந்த இளம் பருவத்தில் தமிழ் விதையை விதைத்தவர் அவரே."

[— என் சரித்திரம், அத்தியாயம் 13]

பிறகு மற்றும் சில வித்வான்களிடமும், செங்கணம் என்னும் ஊரிலிருந்த விருத்தாசல ரெட்டியார் என்ற கனவானிடமும் இவர் படித்துத் தமிழ் நூல்களின் பரப்பை அறிந்து கொண்டதன்றி, மேலும் மேலும் பல நூல்களில் பயில வேண்டுமென்னும் விருப்பத்தை அதிகமாக மேற்கொண்டார். ஆகவே இவருடைய ஆசிரியர்கள் அனைவரும் இவர் திருவாவடுதுறை யாதீனத்து மஹா வித்வான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடந்தான் இனிமேல் பாடம் கேட்க வேண்டுமென்று தெரிவித்துவிட்டார்கள். அப்போது இவருக்குப் பிராயம் பதினேழு.

3

தமிழ்ப் பயிற்சி

ஒருபுறம் மஹாவித்வானைக் கண்டு மனச் சாந்தி அடைய ஆவல்! மற்றொருபுறம் ஒரு நல்ல காரியத்திற்கு ஏற்படும் தடைகள்!! இளமையிலிருந்தே இவருக்குத் தமிழில் பக்திசிரத்தை உதயமாகிவிட்டது. இந்த நிலைமையில் சிலர் இவர் தமிழ் கற்று வித்வான் ஆகவேண்டுமென்றனர்; மற்றும் சிலர் சங்கீதத் துறையைச் சுட்டிக் காட்டினர்; இன்னும் சிலர் இங்கிலீஷ்ப் படிப்பின் அவசியத்தை வற்புறுத்தினர். ஆயினும் பிள்ளையவர்களின் மாணாக்கராக இருப்பதையே இவர் பெரிதும் எதிர்பார்த்து நின்றார். 1871-ஆம் வருஷம் ஏப்ரல் மாதம் இவருடைய தந்தையார் இவரை மாயூரத்திலிருந்த மஹாவித்வானிடம் அழைத்துச் சென்றார். அப்போது இவர் இருந்த நிலையைப் பின்கண்ட வாக்கியங்கள் புலப்படுத்தும்.

"பல காலமாகத் தவம்புரிந்து ஒரு தெய்வ தரிசனத்திற்குக் காத்திருக்கும் உபாஸகனைப்போல நான் இருந்தேன்; அவனுக்குக் காட்சியளிக்கும் அத்தெய்வம்போல் அவர் (பிள்ளையவர்கள்) வந்தார். என் கண்கள் அவரிடத்தே சென்றன. என் மனத்தில் உத்ஸாகம் பொங்கி அலையெழுந்தது. அதன் விளைவாக ஆனந்தக் கண்ணீர் துளித்தது."

[— என் சரித்திரம், அத்தியாயம் 27]

அச்சமயம் அப்பெரியார் கேட்ட சில கேள்விகளுக்கு ஐயரவர்கள் அளித்த பதில் அவருடைய அன்பை உடனே அள்ளிக்கொண்டது. சிறுவனைத் தம்மிடம் குருகுலவாஸம் பண்ணும்படி அவர் ஆக்ஞாபித்தார்; அதன் அவசியத்தையும் அவர் உணர்த்தினர். பிள்ளையை விட்டுப் பிரிகையில் பிதாவின் கண்களிலிருந்து சில நீர்த்துளிகள் கீழே உதிர்ந்தனவாம்.

மஹா வித்வானை ஆச்ரயித்த பின்பு இவரது தமிழ்ஞானம் அளவுகடந்து விஸ்தரித்து விட்டது. தமிழையே தாம் தொழும் தெய்வமாகக் கொண்டார். பிள்ளையவர்கள் பாடஞ் சொல்வது நிதிக் குவியல்களை வாரிவாரி வழங்குவதுபோல் இருக்குமாம்; அவர் அளித்தது தங்கநாணயம் போல் இருந்ததாம். "வாரிக்கொள்பவர்களுடைய அதிருஷ்டம்போல் லாபம் கிடைக்கும். எவ்வளவுக் கெவ்வளவு ஆசை அதிகமாக இருக்கிறதோ

அவ்வளவுக்கவ்வளவு வாரிச் சேமித்துக்கொள்ள லாம். பஞ்சம் என்பது அங்கே இல்லை." தமிழ் நாட்டின் அதிருஷ்டம் ஐயரவர்களின் அதிருஷ்ட மாகவும் மாறியது. தமிழ்ப்பசியும் தணிந்தது. கலைச் செல்வமும் சேர்ந்து சோபித்தது.

அக்காலத்தில் மடங்கள் தமிழ் மொழிக்குச் சர்வ கலாசாலைகள்போல் திகழ்ந்தன. கலைமகள் களிநடம் புரியும் திருக்கோயில்களாகவே அவை விளங்கின. இவற்றுள் பிரசித்திபெற்ற திருவாவடு துறை ஆதீனகர்த்தரின் அத்தியந்தப் பிரியராயிருந் தார் மஹா வித்வான். அந்நாளில் மடாதிபதிகளான மேலகரம் ஸ்ரீ சுப்ரமணிய தேசிகர் மஹா வித்வா னிடம் அன்புடன் உறவாடினர். ஐயரவர்களது இயல்பும் அத்தகைய அன்பையே கவர்ந்தது.

மாயூரத்தில் ஆரம்பத்தில் ஸ்ரீகோபாலகிருஷ்ண பாரதியாரிடம் இவர் பெற்றுவந்த இசைப் பயிற்சி, சிறிது காலத்திற்கப்புறம் மஹா வித்வானின் உத்தரவு காரணமாகப் பங்கமடைந்தது. இவரது பெயர் மாறியதற்கும் மஹா வித்வானுன மீனுட்சி சுந்தரம் பிள்ளையவர்களே காரணம்.

"என்னுடைய இயற்பெயர் வேங்கடராமன் என்பது. அதுவே சர்மா நாமம். இவரிடம் என் தந்தையார் சொல்லியதும் வேங்கடராமன் என்பதே. அப்பெயராலேயே என்னை அழைத்துவந்த இவர் சில தினங்களுக்குப் பின் ஒரு நாள் என்னை நோக்கி

"வீட்டார் உம்மை அழைப்பது இந்தப் பெயரா லேயா? அன்றி உமக்கு வேறு பெயருண்டோ?" என்று கேட்டார். நான், "வேங்கடராமன் என்பது மூதாதையின் பெயராதலின் தாய்தந்தையர் அவ் வாறு அழையாமல் சாமிநாதன் என்பதன் திரிபாகிய 'சாமா' என்று அழைப்பார்கள்" என்றேன். "சாமிநாதன் என்ற பெயரே நன்றாயிருக்கிறது. இனி அப்பெயராலேயே உம்மை அழைக்கிறேன்" என்று கூறி அன்று முதல் அப்பெயராலேயே அழைத்து வருவாராயினர். இவருடைய விருப்பத் தின்படி பிறரும் அங்ஙனமே செய்துவந்தனர்."

[— ஸ்ரீ மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் சரித்திரம், இரண்டாம் பாகம், பக்கம் 18]

அவரது விருப்பத்தினால் அப்பெயரே சாசுவத மாக நிலைபெற்றுவிட்டது.

இக்காலம்போ லில்லாத முந்திய நாட்களில் ஏட்டுச்சுவடிகளைக் கூர்ந்து கவனிப்பதும் அவற் றைக் கஷ்டப்பட்டுப் படித்து ஆராய்வதுந்தான் முக்கியமானவை. அச்சுப்பிரதிகள் அந்நாளில் அவ்வளவாகக் கிடையா. புலப்படாதவற்றின் விளக்கத்தை வினயத்துடன் வித்வான்களிடம் விசாரித்து வித்தியாதனத்தை இவர் சம்பாதித்து வந்தனர். வித்தியாபி விருத்திக்கு இன்றியமையாத தான வினயம் நம் ஐயரவர்களிடம் சிறப்பாக

இருந்தது; அதனால் இவர் தமிழ்ப் புலமையின் உச்சியை எட்டிவிட்டார்.

ஐயரவர்கள் தம் குருவின் சரித்திரத்தை மிகவும் விஸ்தாரமாக எழுதியிருக்கிறார். நம் மஹா மஹோபாத்யாயருக்கும் அந்த மஹா வித்வானுக்கும் இருந்த நெருங்கிய சம்பந்தம் அப்புத்தகத்தின் இரண்டாம் பாகத்தில் மிகவும் விரிவாக விவரிக்கப்பட்டிருப்பது நம் பாக்கியமாகும். அந்த மஹா வித்வானின் சரித்திரம் தமிழகத்திற்குப் பெருமையளிப்பதாகும். சரியான காலக் குறிப்புகள், சுற்றுப் புறமுள்ள ஸ்திதி விளக்கம், பெரியாரின் நூல் ஆராய்ச்சி, இவற்றை இவ்வுத்தம நூலில் வாசகர்கள் காணலாம். மஹாவித்வானின் பெருமைக்குரிய காரணங்களையும் இவர் குறிப்பிட்டிருப்பது தமிழ் நாட்டினர் இவருக்குக் கிருதக்ஞர்களாக இருக்கும்படிச் செய்கிறது. இப்புத்தகத்தைப் பூர்த்தி செய்விப்பதற்கு இவருக்கு 45 வருஷ காலப் பிரயாசை ஏற்பட்டது. இது 1933-ல் பிரசுரமாகியது. இப் புவியில் தமிழ் உலாவிவரும் பரியந்தம் இச்சரித்திரம் ஜீவித்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

ஐயரவர்கள் மாயூரத்தில் மஹா வித்வானிடம் இருந்து வருங்காலை கும்பகோணம் கலாசாலைத் தமிழ்ப் பண்டிதர் தியாகராஜ செட்டியாரும் அடிக்கடி அங்கு வருவதுண்டு. இதனால் இவருக்கும்

அவரிடம் அதிகப் பரிசயம் ஏற்பட்டது. பிற்காலத்தில் இது பயனையும் அளித்தது.

பிள்ளையவர்களிடம் இருந்து படித்து வரும் போதே இவருக்கு உத்தியோகம் ஏற்று, குடும்பத்திற்கிருந்த கஷ்டத்தை நிவர்த்தி செய்துகொள்ள ஆசை பிறந்தது. இவர் செட்டியாரிடமும் இதைப் பற்றிப் பிரஸ்தாபித்திருந்தார். 1873-ஆம் வருஷ மத்தியில் ஒருநாள் திடீரென்று செட்டியார் இவரிடம் வந்தார். கும்பகோணத்தில் ராவ்பகதூர் அப்பு சாஸ்திரிகளும் வேறு இருவரும் நேடிவ் ஸ்கூலை ஆரம்பிக்கப் போவதாகவும், ஒரு தமிழ்ப் பண்டிதரைப் பொறுக்கித் தரும்படித் தம்மைக் கேட்டதாகவும், முதலில் 15 ரூபா சம்பளந்தான் எனினும் பிறகு காலக்கிரமத்தில் அது உயருமென்றும், இதை ஒப்புக்கொள்ளலாம் என்றும் இவரிடம் அவர் தெரிவித்தார்.

கைக் கெட்டியது வாய்க் கெட்டவில்லை. பிள்ளையவர்களிடம் இவ்விஷயம் தெரிவிக்கப் பட்டதும், அவர் இதற்கு அங்கீகாரம் அளிக்க மறுத்துவிட்டார். இன்னும் சிலகாலம் கல்வி பயில்வதே தகும் என்று கூறிவிட்டார் அவர். இந்த உத்தரவுக்கு இவர் அடங்கிவிட்டபோதிலும் குடும்பத் தொல்லை இவரது உள்ளத்தை மிகவும் உருக்கிவந்தது. கடைசியில் பிதா கூறியபடி

புராணப் பிரசங்கத் தொழிலைச் சிறிதுகாலம் மேற்கொண்டார். அக்காலத்தில் இவரது காலக்ஷேபத்தைக் கேட்டவர் யாவரும் இன்புற்றனர். கஷ்டத்தைக் கடக்கும் நிலையும் வந்தது. பத்துமாத காலத்திற்கப்புறம் மறுபடியும் தம் ஆசிரியரையே இவர் நாடினார். 1876-ல் அப்பேராசிரியர் சிவபதம் அடைந்தார்.

இதனால் இவர் அடைந்த துக்கத்தைப் பார்த்த மடாதிபதிகளான ஸ்ரீ சுப்ரமணிய தேசிகர் இவரிடம் பரிவு பூண்டார். "நடந்த காரியத்தை நினைத்து வருந்துவதில் லாபம் இல்லை. பிள்ளையவர்கள் இல்லை என்ற குறையைத் தவிர இங்கே ஒரு குறைவும் இராது" என்று அவர் கூறி இவரைத் தம்மிடம் பாடம் கேட்கும்படி ஆக்ஞாபித்தார். அவர் அளித்த அபயமும் ஆறுதலும் இவருக்கு ஊக்கத்தை உண்டாக்கின. ஸ்ரீ சுப்ரமண்ய தேசிகரிடம் படித்த நேரம் போக, மிகுதியான காலத்தில் வேறு சில மாணவர்களுக்கு இவர் பாடம் சொல்லி வரலானார். இவ்விதம் வாழ்க்கையில் ஒரு புதிய நிலை ஆரம்பமாகியது. வேணுவனலிங்கத் தம்பிரான் விரும்பிய விதம் ஒரு பாடல் தொகுதியை இவர் அச்சிட்டுப் பிரசுரித்தார். இதுதான் இவர் முதல் முதல் பதிப்பித்த புத்தகம்.

ஸ்ரீ சுப்ரமண்ய தேசிகர் இவரை மதுரையில் நடந்த கும்பாபிஷேகத்திற்குத் தம்முடன் அழைத்

துச் சென்றார். அங்கிருந்த பண்டித சமூகத்தில் இவர் புகழைப் பரப்பினார்.

திருவாவடுதுறையில் இவரது பொழுது போக்கு மிக்க இன்பமுடையதாக இருந்தது. பாடம் சொல்லுவதும், படிப்பதும், படித்தவர்களோடு பழகுவதும் நாள்தோறும் நடைபெற்றன. இந்தக் காலத்தில் செய்யுள் இயற்றும் முயற்சியையும் இவர் விடவில்லை. இவர் இயற்றியவை ஸ்ரீ சுப்ர மண்ய தேசிகருக்கு மட்டிலா மகிழ்ச்சியைத் தந்தன.

4

பதவி கிடைத்தது

1880-ஆம் வருஷ ஆரம்பத்தில் தியாகராஜ செட்டியார் கும்பகோணம் கலாசாலையிலிருந்து விலகிக்கொள்ள முடிவு செய்தார். அப்போது பிரின்ஸிபால் ராய்பஹதூர் டி. கோபால ராவ் புதிய பண்டிதரை நியமிக்கும் பொறுப்பைச் செட்டியாரிடமே விட்டு விட்டார். செட்டியாருக்கு ஸதா சாமிநாதையர் ஞாபகந்தான். ஆதலால் அவர் உடனே அவசரம் அவசரமாகத் திருவாவடு துறைக்கு வந்துசேர்ந்தார். தாம் வந்த நோக்கத்தை மடாதிபதிகளிடம் தாமதமின்றித் தெரிவித்தார். அப்போது ஸ்ரீ தேசிகர் ஐயரவர்களை விட்டுப்பிரிய இஷ்டப்படவில்லை. செட்டியாருக்குத் தாம் எடுத்த காரியத்தை முடித்துக்கொள்ளாமல் போக மன மில்லை. ஆகவே இரண்டு தினங்கள் அவ்விடத்தி லேயே தங்கியிருந்து அவர் தமது இஷ்டத்தைப் பூர்த்தி செய்துகொண்டார். கடைசியில் ஆதீன

கர்த்தரவர்கள் இவருக்குப் பின்கண்ட யோக்கியதா பத்திரத்தை மனமுவந்து அளித்தார் :

" இந்தப் பத்திரிகையி லெழுதப்பட்டிருக்கிற சாமிநாதையர் நமது ஆதீன வித்துவான் மீனுக்ஷி சுந்தரம் பிள்ளையவர்களிடத்தில் ஆறு வருஷகாலம் இலக்கண இலக்கியங்கள் நன்ருய் வாசித்தது மன்றி நம்மிடத்திலும் நான்கு வருஷ காலமாக வாசித்துக் கொண்டிருக்கிருர் இலக்கண இலக்கி யங்களைத் தெளிவாய்ப் போதிக்கிற விஷயத்தில் நல்ல சமர்த்தர் நல்ல நடையுள்ளவர் ".

குறிப்பிட்டதினம் இவர் கும்பகோணம் போய்ச் சேர்ந்தார். பிறகு செட்டியார் இவரைக் கலா சாலைக்கு அழைத்துக்கொண்டுபோய் அங்கிருந்த பிரதான ஆசிரியர்களுக்கு முதலில் அறிமுகமாக்கி ஞர். ஐந்து நிமிஷ நேரத்திற்குள் ஒரு குறிப்பிட்ட கருத்தை அமைத்து ஒரு செய்யுளை அமைக்கும்படி ஸ்ரீ ஆர். வி. ஸ்ரீநிவாஸையர் அன்று இவரைக் கேட்டுக்கொண்டார். இவரும் காலதாமதமின்றி அக்கருத்துக்கொத்தபடி ஒரு பாடலைப் பாடிஞர். அது வருமாறு:—

" வாய்ந்தபுகழ் படைத்திலங்கு மீனுட்சி
சுந்தரநா வலவன் பாலே
ஏய்ந்ததமிழ் ஆய்ந்தமுறைக் கியைவுறநீ
இதுகாறும் இனிதின் மேய

ஆய்ந்தவள் நகர்க்குடந்தைக் காலேஜில்
நின்னிடமெற் களித்தல் நன்றே
வேய்ந்ததமிழ் முதற்புலமைத் தியாகரா
சப்பெயர்கொண் மேன்மை யோனே.''

இதைக் கேட்டதும் செட்டியார், "என் வயிற்றில் பாலே வார்த்தீரையா!" என்று கூறி மிக்க சந்தோஷ மடைந்தார். மற்றவர்களும் மிகவும் பாராட்டினர். ஐயரவர்களுக்குப் பதவி உடனே அளிக்கப்பட்டது. இது நடந்தது 1880-ஆம் வருஷம் பிப்ரவரிமாதத்தில்.

முதல் நாள் இவர் பாடஞ் சொல்வதைக் கேட்க, எதிரே இருந்த பெஞ்சில் ஸ்ரீமான்கள் பி. ஹநுமந்தராவ், ஆர். வி. ஸ்ரீநிவாஸையர், தியாகராஜசெட்டியார் ஆகியோரும், அச்சமயம் ஓய்வுள்ள வேறு சில ஆசிரியர்களும் வந்து உட்கார்ந்து கொண்டனர். இவர் தைரியமாகவே வகுப்பில் பாடம் சொன்னார். முதல் நாளே, இவர் திறம்பட நடப்பார் என்ற நம்பிக்கை எல்லோர் உள்ளத்திலும் ஊன்றிக்கொண்டது. இதற்குப்பின் பன்முறை ராய்பகதூர் டி. கோபால ராவும் இவரது வகுப்பில் வந்து உட்கார்ந்து,இவரது பாடபோதனையில் லயித்திருப்பது வழக்கம். இதற்குப் பின்பு கலாசாலைத் தலைமை வகித்தவர் ஒவ்வொருவரும், ஆங்கிலேயர் உள்பட, இவரிடம் நட்புக்கொண்டு

இவரை ஆதரித்தனர். தியாகராஜசெட்டியார் சிறிது காலம் குடந்தையில் தங்கியிருந்து இவருக்கு அடிக்கடி உத்ஸாகமளித்து வந்தார். அவர் கடைசியாக ஊரை விட்டுப் புறப்படுவதற்கு முன்பு அவருக்குப் பெரிய உபசார வைபவம் நடந்தது. அப்போது ஐயரவர்கள் அவரை வாழ்த்திப் பாடிய பாடல் களுள் பின்வருவது ஒன்று:

" வருந்தியருந் தமிழ்நமக்கு யார்புகல்வா
ரென்றேங்கும் மனத்தி னோர்கள்
திருந்தியசெந் தமிழ்ச்செல்வன் தியாகரா
சப்புலவர் திலகன் றன்பாற்
பொருந்தியவன் விளங்கவெடுத் துரைத்திடுநல்
லுரைகளைத்தம் புந்தி வைப்பின்
மருந்தியலைந் தியலுணர்வார் கவிபுகல்வார்
பிரசங்கம் வகுப்பார் மன்னோ."

தம்மிடம் யாவரும் வைத்த நம்பிக்கை நியாயமானது என்பதை இவர் காலதாமதமின்றி நிரூபித்து விட்டார். வெகு சீக்கிரத்திலேயே மாணவர்களது விசுவாஸத்தைக் கவர்ந்துகொண்டார். இதற்குக் காரணம் இவர் தமக்கும் அவர்களுக்குமிடையே எத்தகைய தொடர்பு இருக்கவேண்டும் என்பதை நன்குணர்ந்து நடந்துகொண்டதுதான்.

" ஒரு கலாசாலையில் வேலைபார்ப்பது எளிதான காரியமன்று. உபாத்தியாயருக்கு அடிக்கடி கோபம் வரும்படி மாணவர்கள் நடப்பார்கள். பாடம்

சொல்லும் முறை, அடக்கியாளும் முறை, இரண்டிலும் நல்ல பழக்கம் இருந்தாலன்றி ஒரு கலாசாலையில் காலந்தள்ள முடியாது. ஆசிரியர்களிடத்திலுள்ள குறைபாடுகளையெல்லாம் விளம்பரப் படுத்துவதில் மாணுக்கர்களுக்கு ஒரு தனி ஊக்கம் இருக்கும். ஆனல் தம்முடைய ஆசிரியர் சிறந்தவர் என்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்பட்டுவிட்டால் அவர்களுக்கு உண்டாகும் அன்பு வேறு விதமாகவே இருக்கும். தங்கள் வாழ்நாள் முழுதும் தங்கள் ஆசிரியர்களை அவர்கள் போற்றிவருவார்கள். அத்தகைய மாணுக்கர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையே உண்டாகும் அன்பு மிக உயர்ந்தது. ஆசிரியராக இருக்கும் கால முழுவதும் இன்பமாக இருப்பதற்கு அவ்வன்பே உதவி செய்யும். இல்லையெனில் ஏதோ கடமைக்கு வேலை பார்த்ததாகத் தான் முடியும்,''

[— நல்லுரைக்கோவை, மூன்றும் பாகம், பக்கங்கள் 37 - 38]

சிலர் இவரது வீட்டிற்குப் போய்த் தனியாகப் பாடம் கேட்டும் வந்தனர். ஊரிலுள்ள வேறு சிலரும் இவரிடம் வந்து சில நூல்களைப் பயின்றனர். இந்தக் காலத்தில் இவருக்கு ஸீமந்த புத்திரன் பிறந்தான்.

''நான் ஒரு குழந்தைக்குத் தந்தை என்னும் நிலையை அடைந்தும் குடும்பப் பாதுகாப்பில் நான்

குழந்தையாகவே இருந்தேன். நான் உண்டு, என் வேலை உண்டு, என் புஸ்தகங்கள் உண்டு, இவ்வளவோடு நான் நின்றேன். குடும்பப் பாதுகாப்பைப் பற்றியோ, வரவு செலவைப் பற்றியோ, விசேஷங்களைப் பற்றியோ, நான் கவலைகொள்வதில்லை. அவற்றைக் கவனிக்கும் பொறுப்பு முழுவதையும் என் தந்தையாரே மேற்கொண்டார்.சம்பளம் வந்தவுடன் அதை அவர் கையில் கொடுத்து விடுவேன். ஒரு பைசா வேண்டுமானாலும் அவரிடமிருந்து பெற்றே செலவிடுவேன். இந்த நிலைமையில் எவ்வளவோ சௌகரிய மிருப்பதை அனுபவத்தில் நான் உணர்ந்தேன். உப்பில்லை, புளியில்லை என்ற குறை காதில் விழாதிருப்பதைப் போன்ற சுகம் வேறு இல்லை. குடும்பப் பாதுகாப்பு விஷயத்தில் அவசியமான செலவை முன்பே யோசித்துச் செட்டாகச் செய்யும் கடமையை என் தந்தையார் ஏற்றுக்கொண்டார். இல்லையேல், ஒரு நாளில் பாதி நேரம் அதிலேயே எனக்குச் சென்றிருக்கும். என் தந்தையார் இளமை முதல் எனக்கு உதவிபுரிந்தாலும், குடும்பச் சுமையை என் தலைமேல் வைக்காமல் யான் கவலையின்றி வாழும்படிச் செய்த உபகாரத்தை நான் என்றும் மறக்க முடியாது. தமிழுக்கும் எனக்குமுள்ள தொடர்பு வரவரப் பெருகி வளர்வதற்கு அந்த உபகாரமே காரணமாயிற்று.''

[— என் சரித்திரம், அத்தியாயம் 87]

செட்டியார் தமக்குச் செய்த உதவியை ஐயரவர்கள் சிறிதாவது மறந்துவிடவில்லை.

இறுதிக் காலத்திலும் அன்பும் மதிப்பும் அவர்பால் கொண்டிருந்தாரென்பது அடியிற் கண்ட வாக்கியங்களில் காணப்படும் :

" இவர் என் ஆசிரியரிடம் எனக்கு முன் படித்தவராதலின் எனக்கு முன்னவர். என்பால் அன்பு வைத்துப் பழகியமையின் என் நண்பர். இன்ன இன்ன படி மாணுக்கர்களிடம் நடந்து வரவேண்டுமென்பதையும் சில நூற்பொருள்களையும் வேறு விஷயங்களையும் எனக்கு அறிவுறுத்தியமையின் என் ஆசிரியர்களுள் ஒருவர். எனக்குத் தம் உத்தியோகத்தை அளித்துப் பிறர் கையை எதிர்பாராத நிலையைச் செய்துவந்தமையின் வள்ளல். தியாகராசன் என்று இவருக்கு வாய்ந்த பெயர் என்னளவில் பொருளுடையதாகவே நிற்கின்றது. இவரை நான் மறவேன். காலேஜில் தம் இடத்தை எனக்கு உதவிய இவர் பெயரை நான் தங்கியிருக்கும் இடத்திற்கு வைத்து அதில் வாழ்ந்து வருகிறேன். ' தியாகராஜ விலாசம் ' இவருக்கும் எனக்கும் உள்ள அன்புப் பிணைப்புக்குரிய ஓர் அடையாளமாக நிற்கிறது."

[— கலைமகள், 1941 பிப்ரவரி இதழ்]

5

ஆ ர ா ய் ச் சி

பண்டை நூல்களைக் கண்டெடுத்து அவற்றை ஆராய்ச்சி செய்து தமிழுலகிற்குப் பேருதவி புரிந்த இப்பெரியாரைப் போற்றுதார் யார்? குடந்தையில் முன்சீப்பாக இருந்த சேலம் ஸ்ரீ ராமசாமி முதலியார் இவரது பெருமையைப் பற்றிக் கேள்விப்பட்டு, 'சீவகசிந்தாமணி'ப் பிரதியொன்றை இவரிடம் ஒருநாள் கொடுத்து, அதைத் தமக்கு விளக்க வேண்டும் என விரும்பினுர். பின்னர்ப் பிழையின்றி அதை அச்சிட்டுப் பதிப்பிக்கத் தாம் உதவுவதாகவும் கூறிஞர். அன்று ஆரம்பித்தது இம்மஹத்தான தொண்டு. உடலில் ஆவி இருக்கும் வரையில் தளர்வின்றி நிறைவேறிவந்தது.

குன்ருத ஊக்கம், வெறுப்புருத விசுவாஸம் இவைதாம் இவர் தமிழை வளம்படுத்தும் தொண்டில் முனைந்ததற்கு உதவின. சுவடிகளைக் கண்டு பிடிக்கவும் அவற்றைச்சம்பாதிக்கவும் இவர் சளைக்க-

வில்லை; சிரமத்தால் சோர்வடையவில்லை; தேடி அலைந்ததற்கும் குறைவில்லை. சதா சர்வ காலமும் ஆராய்ச்சி; எப்போதும் 'சிந்தாமணி'யைப்பற்றியே நினைவு; மனத்தை வேறு எதிலும் இவர் விடவில்லை. கடைசியில் கிட்டுதற்கரிய காரியமும் கைகூடியது. 'சிந்தாமணி' 1887-ஆம் வருஷம் அக்டோபர் மாதம் வெளிவந்தது. உயர்தரமான பதிப்பு என்று பலரும் பாராட்டிப் பேசினர். தமிழகத்தில் இவரைக் கொண்டாடாதவரே இல்லை. தக்கோர் சிநேகமும் இதனுல் கிட்டியது. இவர் புகழ் கடல்கடந்து பரவவும் இது உதவியது.

திருத்தக்கதேவரால் இயற்றப்பட்ட இந்த நூல் ஜைனர்களால் பாராயண நூலாகப் போற்றப்பட்டு வருகிறது. "சிந்தாமணியே என்னுடைய தமிழ் நூற்பதிப்பில் முதல் அரும்பு. தமிழ்த் தொண்டினுல் இன்பம் உண்டென்னும் உண்மையை எனக்கு முதல் முதல் வெளிப்படுத்தியது அந்த நூலே" என்ருர் ஐயரவர்கள் பின்பொரு சமயம். சீவகன் என்னும் அரசன் பிறந்தது முதல் வீடு பெற்றதுவரை இக்காப்பியம் விவரிக்கிறது. இதன் முகவுரையில் இவருக்கு ஏற்பட்ட சிரமத்தைப்பற்றி நாம் படிக்கலாம்.

"எழுத்தும் சொல்லும் மிகுந்தும் குறைந்தும் பிறழ்ந்தும் திரிந்தும் பலவாறு வேறுபட்டுக் கில முற்றிருந்த இந்நூலுரைப் பழைய பிரதிகள் பல

வற்றையும் பலகால் ஒப்புநோக்கி இடையருத பரிசோதனை செய்துவந்தபோது, கவிகளின் சுத்த வடிவத்தையும் உரையின் சுத்த வடிவத்தையும் கண்டுபிடித்தற்கும், உரையினுள் விசேஷ உரை யின்னது பொழிப்புரை யின்னதென்று பிரித்தறிதற்கும், மேற்கோள்களின் முதலிறுதிகளைத் தெரிந்து கோடற்கும், பொழிப்புரையை மூலத்தோடு இயைத்துப் பார்த்தற்கும், பிழையைப் பிழையென நிச்சயித்துப் பரிகரித்தற்கும் பொருள் கோடற்கும் எடுத்துக் கொண்ட முயற்சியும் அடைந்த வருத்தமும் பல.''

ஐயரவர்கள் பிரதிதினமும் மனஞ்சலிக்காமல் ஏட்டுச் சுவடிகளைப் படித்தாராய்ந்து வந்ததைக் கண்டு அநேகர் இவரிடம் அனுதாபம் காட்டினர். கும்பகோணத்தில் இருக்கையில் ஒருநாள் ஒரு கனவான் இவரது கிருஹத்திற்கு வந்துசேர்ந்தார். உடனே இவருக்கு ஹிதோபதேசம் பண்ண ஆரம்பித்துவிட்டார். "இம்மாதிரி மணிக்கணக்கில் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருப்பது தகாது" என்றார்; "கண் பார்வை கெடுவதுடன் தேகத்திற்கும் சிரமம் ஏற்படும்" எனவும் வற்புறுத்திச் சொன்னார். ஐயரவர்கள் இவற்றை மிகுந்த பொறுமையுடன் கேட்டிருந்து முடிவில் அதற்காகத் தமது வந்தனத்தையும் அவரிடம் தெரிவித்தார். வந்தவருக்கோ ஐயரவர்கள் மேற்கொண்டு நடத்திவரும் பணியின்

மேன்மை கொஞ்சமும் தெரியாது. அதை அவரிடம் சொல்லிப்பார்ப்பது பயன்படாது என்பது ஐயரவர்களுக்கு நன்கு தெரியும். ஆகவே விஷயத்தை அதனுடன் நிறுத்தி, அவரை மனச்சந்துஷ்டியுடன் அனுப்பிவிட்டார். தாம் நடத்திவந்த காரியத்தைத் தொடர்ந்து நடத்தலானார். மூன்று வருஷங்கள் கழித்து அதே கனவான் மறுபடியும் ஐயரவர்களின் வீட்டிற்கு வந்து குசலப்ரச்னம் பண்ணினார். "அந்தத் 'தொடிசை' இப்பொழுது வைத்துக் கொள்ள வில்லையே?" என்று மிகுந்த உற்சாகத்துடன் அவர் வினவினார். இதைக் கேட்டு ஐயரவர்கள் சற்றுப் புன்னகை பூத்தனர். பக்கத்தில் அச்சமயம் இருந்தவர்களுக்கு அவர் குறிப்பிட்ட 'தொடிசு' என்பது என்னவென்று விளங்கவில்லை. அவர் வெளியே போனபிறகு இவர் அங்கிருந்தவர்களிடம் அவர் ஏட்டுச் சுவடிகளைப் பற்றித்தான் அவ்விதம் பிரஸ்தாபித்தார் என்று சொன்னார்.

தமிழ் ஆராய்ச்சியில் ஈடுபட்ட பிறகு தமிழ் ஏட்டுச் சுவடிகளைத் தேடுவது இவரது வாழ்க்கையில் ஒரு முக்கியமான வேலை ஆகிவிட்டது. அச்சிட்ட புத்தகமோ, அச்சிடாததோ, எதுவானாலும் சுவடியின் உருவத்தில் காணும்போது ஏதோ தெய்வத்தின் உருவத்தைக் காண்பதுபோலவே ஐயரவர்கள் எண்ணுவது வழக்கமாம். சுவடிகளைத்

தேடி அவை இருக்குமிடம் சென்று மூலை முடுக்கு களிற் கிடக்கும் அவற்றைத் தொகுத்துஆராய்வதில் இவரது உள்ளம் ஒருதனி இன்பத்தை அடைந்து வந்தது. சுவடிகளைத் தேடிவருவதே பல வருஷங்கள் வரை தமக்குத் தீர்த்த யாத்திரையாகவும் தல யாத்திரையாகவும் இருந்துவந்தது என்று ஐயர வர்கள் பன்முறை கூறியிருக்கிறார்.

" சுவடி தேடுங்காலங்களில் நான் பலவிதமான துன்பங்களை அடைந்தவன். பலவிடங்களில் சுவடிக் குரியவர்களைத் தேடிச் சென்று அலைந்து கால் கள் தேய்ந்து போயின. சிலர் வீட்டில் இருந்து கொண்டே இல்லையென்று சொல்லியனுப்பி விடு வார்கள். சிலர் பலமுறை வரச்சொல்லி அலைக் கழிப்பார்கள். சிலரிடம் எவ்வளவோ நயந்து கெஞ் சிப் பிணை கொடுத்துச் சுவடிகளைப் பெறவேண்டி யிருக்கும். சிலரிடம் அவமதிப்புக்கூட அடைந்திருக் கின்றேன். குழந்தையைப் பெறும்போது படுந் துன்பமெல்லாம் அக்குழந்தையைக் கண்ட காலத் திலே மறைந்துவிட, தாய் பெரிய இன்பத்தை அடை கின்றாள். அதுபோலவே சுவடிகளுக்காகப் படும் சிரமங்களெல்லாம் அவற்றைப் பெற்றவுடன் மாறி விடுகின்றன ; என் உள்ளம் பெருமகிழ்ச்சியை அடைகின்றது."

[— நல்லுரைக்கோவை, மூன்றாம் பாகம், பக்கம் 159]

டாக்டர் உ. வே. சாமிநாதையர்

மஹாமஹோபாத்யாயர் 1927-ஆம் வருஷ இறுதியில் சென்னைச் சர்வகலாசாலையார் விரும்பிய படி, "சங்கத்தமிழும் பிற்காலத்தமிழும்" என்ற தலைப்பின்கீழ்ப் பத்துப் பிரசங்கங்களைப் புரிந்தார். புத்தக ரூபத்தில் வெளிவந்த அதில் காணப்படும் ஒரு பகுதி இவர் ஆராய்ச்சியின்போது மேற் கொண்ட சிரமத்தைச் சுட்டிக்காட்டுகிறது.

> "ஆராய்ச்சி அனுபவத்தைப்பொறுத்தது. சுவடி களைப் பிரதிசெய்வித்து ஒப்புநோக்கி ஒழுங்கு செய்தல் முதலியனவும் ஆராய்ச்சியில் அடங்கும்... ஒரு நூலை அப்படியே பிரதிசெய்விக்கக் கூடியவர் கள் இந்நாளில் இல்லை. சுவடியைக் கண்டால் இக்காலத்தில் ஓட்டம் எடுக்கிறார்கள்...அன்புடை யவர்களுக்கே அவ்வேலையைச் செய்வது சாத்தியம். ஒப்புநோக்கும்போது சரியாக இருக்கிறதா என்று கேட்டால் அன்பில்லாதவர்கள் சரியென்று சொல்லி விடுவார்கள். சிந்தாமணியைப் பரிசோதிக்கையில் நான் படித்த ஒவ்வொரு வரியும் பாட்டும் சரியாக உள்ளன என்றே ஓய்வில்லாமல் ஒருவர் சொல்லிக் கொண்டிருந்தார். அவர்பால் ஐயமுற்றுச் சிந்தா மணியில் இராத வேறு நூலிலுள்ள பாட்டொன் றைச் சொல்லிச் சரியாக இருக்கிறதா என்று கேட் டேன். அவர் சரியென்று மிகத் துணிவாகச் சொன் னார். அதன்பின் அவரை மெல்ல விலக்கிவிட்டேன்."
>
> [— பக்கம் 135]

உழைப்பை வெளியிடும் மற்ருேர் உதாரணத்தையும் எடுத்துக்காட்டலாம்.

"சிந்தாமணி உரையில் ஓரிடத்திற் பஞ்சாட்சரம் உபதேசிக்கப்பட்டதாக எழுதியிருந்தது. சிந்தாமணியோ சைனர்களுடைய நூல். இறக்கும் நிலையிலிருந்த ஒரு நாயின் காதில் மந்திரம் உபதேசிக்கப் பட்டதென்பது சந்தர்ப்பம். உரையைப் பிரதி செய்தவர் உரையாசிரியர் எழுதியிருந்த 'பஞ்ச நமஸ்காரம்' என்பதைப் 'பஞ்சாட்சரம்' என்று எண்ணிவிட்டாரென்று தோன்றியது."

[— பக்கம் 137]

"சிந்தாமணி"யின் இரண்டாம் பதிப்பு 1907-இலும் மூன்ரும் பதிப்பு 1922-இலும் வெளிவந்தன. பின்வந்த ஒவ்வொரு பதிப்பும் முந்தியதைவிட விசேஷமாகச் சோபித்தது. அவற்றில் ஞானப் பரப்பு மேலும் பிரகாசிக்கிறது. இவ்வளவு கஷ்டப் பட்டுப் பதிப்பித்தும் இதில் பல குறைகளைக் காண முற்பட்டனர் சில விஷமிகள். கெட்ட நோக்கத்துடன் கண்டனம் எழுதினர். அவர்கள் இவரது மதிப்பை மங்கச் செய்ய முயன்றனர். கடைசியில் ஒன்றும் பலிக்கவில்லை. இவரது பெருமை மேலும் பன்மடங்கு அதிகரித்தது.

"சிந்தாமணியைப்" பதிப்பித்து வரும்போதே "சிலப்பதிகாரம்", "மணிமேகலை", "வளையாபதி"

"குண்டலகேசி" என்பவற்றைப்பற்றி இவர் அறிந்துகொண்டார். இந்தப் பதிப்பு நிறைவேறிய வுடன் மணிமேகலை ஆராய்ச்சியில் இவர் கருத்தைச் செலுத்தினர். "பத்துப்பாட்டு" நச்சினர்க்கினியர் உரையுடன், பல இடையூறுகளைக் கடந்து 1888-இல் வெளிவந்தது. இத்தகைய பண்டை நூல்களை யெல்லாம் பதிப்பிக்கும்படி தமிழ் நாட்டார் இவரிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

1892-இல் மற்ருெரு சிறந்த நூல் பிரசுரமாகியது. 'சிலப்பதிகாரம்' தமிழருக்குத் தங்கள் பாஷையின் மேன்மையையும் வளத்தையும் புலப்படுத்தியது. இது சுமார் பதினேழு நூற்ருண்டுகளுக்கு முன் இயற்றப்பட்டது. காவிரிப்பூம்பட்டினத்தில் பல பாஷைகளைப் பேசும் பல தேசத்து மக்கள் மனம் கலந்து இனிது வாழ்ந்துவந்தனர் என்பதை இது தெரிவிக்கிறது. இளங்கோவடிகள் இயற்றிய இந்தக் கோவலன் - கண்ணகி கதை தமிழரின் செல்வங்களுள் சிறந்தது.

இது வெளிவருவதற்குச் சிறிதுகாலம் முன்பு பதிப்புத்துறையில் இவரைப் புகுத்திய சேலம் ராமசாமி முதலியார் காலமானுர். பழந்தமிழ் நூல் ஆராய்ச்சியில் தாம் ஈடுபடுவதற்குக் காரணபூதரான அந்தப் பெரியாரைப்பற்றி, "ஊர்க்குழைப்பான்", "தமிழெனு முந்நீர்க் குழைப்பான்" என்று இவர் எழுதினுர். சோகத்தின் வேகம் செய்யுள்வடிவத்தில்

வெளிவந்தது அச்சமயம். 1894-இல் சங்க நூலான "புறநானூறு" வெளிவந்தது. இதற்கிடையில் ஐயரவர்களின் பிதாவும், ராவ்பகதூர் பி. ரங்கநாத முதலியாரும் உலகவாழ்வை நீத்தனர். இதனால் இவர் மிகுந்த மனவருத்த முற்றபோதிலும், கடமையை விட்டு வழுவவில்லை.

"மணிமேகலை" 1898-இல் பதிப்பித்து நிறை வேறியது. "சிலப்பதிகார"க் கதையைத் தொடர்ந்து கூறும் "மணிமேகலை"யில் புதிய புதிய கருத்துக் களும் புதிய புதிய தத்துவங்களும் அதிகமாய்க் குவிந்திருந்தன. இதன் பிரதி யொன்றை ஐயரவர்க ளிடம் கொடுத்தவர் சேலம் ஸ்ரீ ராமசாமி முதலி யார்தான். கும்பகோணத்தில் கலாசாலையிலும் ஓய்வு நேரங்களில் இவர் இந்தப் பிரதியை மிகுந்த கவனத் துடன் படித்து வருவது வழக்கம். எவ்வளவு முறை படித்துப் பார்த்தாலும் எல்லாம் புதிர்போல் இருக்கும். ஒருநாள் மற்றோர் ஆசிரியர் இவரிடம் வந்து,சதா அந்தப் பிரதியிலேயே இவர் கருத்தூன்றி யிருப்பதன் காரணத்தை விசாரித்தார். அப்போது இவர் தமக்கு விளங்காத சில கடின பதங்களை எடுத் துச் சொன்னார். அறையில் வேறு ஒரு கோடியில் உட்கார்ந்து ஏதோ புத்தகத்தைப் படித்துக்கொண் டிருந்த ராவ்பஹதூர் எம். ரங்காச்சாரியார் இவர் சொன்னதைக் கேட்டு, சந்தேகத்தைத் தீர்க்க முன் வந்தார். அது பௌத்த நூல் என்பது உடனே

தெரியவந்தது. அது முதற்கொண்டு புரொபஸர் ரங்காச்சாரியார் ஐயரவர்களுக்கு இப்புத்தகப் பதிப்பு விஷயமாக அரிய உதவி புரிந்தார். இதன் முகவுரையில் புரொபஸர் ராவ்பஹதூர் எம். ரங்காச்சாரியார் செய்த மகோபகாரம் குறிப்பிடப் பட்டிருக்கிறது.

" தமிழ் மகள் தன் மணிமேகலையை இழந்திருந் தாள் ; அதனைக் கண்டெடுக்கும் பேறு எனக்கு வாய்த்தது. ஆயினும் அதில் பதித்திருக்கின்ற ரத்தினங்களின் தன்மை இன்னதென்று முதலில் எனக்குத் தெரியவில்லை. அதனை ரங்காசாரியார் அறிவித்தார். மணிமேகலை மீட்டும் துலக்கப் பெற்றுத் தமிழ் மகளின் இடையை அலங்கரித்து நிற்கிறது "

[— நினைவுமஞ்சரி, பக்கம் 28]

பழைய பிரதிகளின் இயல்பையும், அவற்றைப் பரிசோதிக்கும்போது ஏற்பட்ட கஷ்டத்தையும் உணர்ந்தவர்களே இவர் தமிழகத்திற்கு ஆற்றிய தொண்டின் அளவை அறிந்து பாராட்ட இயலும்.

"பழைய பிரதிகளுட் பல, இனி வழுப்பட வேண்டு மென்பதற்கு இடமில்லாமற் பிழை பொதிந்து அநேக வருடங்களாகத் தம்மைப் படிப்போரும் படிப்பிப்போரும் இல்லை என்பதை யும், நூல்களைப் பெயர்த்தெழுதித் தொகுத்து வைத்தலையே விரதமாகக்கொண்ட சில புண்ணிய

சாலிகளாலேயே தாம் உருக்கொண்டிருத்தலையும் நன்கு புலப்படுத்தின. ஒன்றோடொன்று ஒவ்வாது பிறழ்ந்து குறைவுற்றுப் பழுதுபட்டுப் பொருட்டொடர்பின்றிக் கிடந்த இப்பிரதிகளைப் பரிசோதித்த துன்பத்தை உள்ளுங்கால் உள்ளம் உருகும்"

[— சிலப்பதிகாரம், முகவுரை]

நாம் அதிருஷ்டசாலிகள் ; ஐயரவர்களது உழைப்பினால் பலனடைந்தவர்கள் நாமே. இவருக்கு ஏற்பட்ட மனக்கலக்கமும் தேகசிரமமும் தமிழ் இலக்கியத்திற்கு மதிப்பு மிகுந்த மாணிக்கங்களை மீட்டுக்கொடுத்தன.

சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன் இயற்றப்பட்ட சங்க நூல்கள் சில இன்று நமக்குக் கிடைத்திருக்கின்றன. அவை முழுவதும் நமக்குக் கிடைக்கவில்லையாயினும் கிடைத்தவற்றைக் கொண்டு நாம் பெருமை யுறலாம்.

"உரையில்லாத மூலங்கள் எழுத்துஞ் சொல்லும் மிகுந்தும் குறைந்தும் பிறழ்ந்தும் திரிந்தும் பலவாறு வேறுபட்டிருந்ததன்றி இவற்றில் சில பாடல்களின்பின் திணை எழுதப்படாமலும், சிலவற்றின்பின் துறை யெழுதப்படாமலும், சிலவற்றின் பின் இரண்டு மெழுதப்படாமலும், சிலவற்றின் பின் பாடினோர் பெயர் சிதைந்தும், சிலவற்றின் பின் பாடப்பட்டோர் பெயர் சிதைந்தும், சிலவற்றின் பின்

இருவர் பெயருமே சிதைந்தும், சில பாடல்கள் இரண்டிடத்து எழுதப்பட்டு இரண்டெண்களையேற்றும், வேறு வேறு இடத்தில் இருத்தற்குரிய இரண்டு பாடல்கள் ஒருங்கு எழுதப்பட்டு ஓரெண்ணையேற்றும், சில முதற்பாகங்கள் குறைந்தும், சில இடைப்பாகங்குறைந்தும், சில கடைப்பாகங் குறைந்தும், சில முற்றுமின்றியும், ஒரு பாடலின் அடிகளுள் ஒன்றும் சிலவும் வேறு சில பாடல்களின் அடிகளோடு கலந்தும், ஓரடியே ஒரு பாட்டுட் சிலவிடத்து வரப்பெற்றும், பொருளுண்மை காணாதவண்ணம் இன்னும் பலவகைப்பட மாறியும் கையெழுத்துப் பிரதிகளில் இருந்தன. இவற்றைப் பரிசோதித்து வருகையில், இந்நூலிலிருந்து வேறு நூல்களுடைய பழைய உரைகளின் இடையிடையே உரையாசிரியர்களால் பூர்த்தியாகவும் சிறிது சிறிதாகவும் எடுத்துக்காட்டப்பட்டிருந்த உதாரணங்கள், சிற்சில பாடல்களிலுள்ள வழுக்களை நீக்கிச் செவ்வை செய்துகொண்டு பொருளுண்மை காணுதற்கும் சிற்சில பாடல்களிற் குறைந்த பாகங்களை நிரப்பிக் கொள்ளுதற்கும், பிறழ்ந்து கிடக்கும் சில பாடல்களை ஒழுங்குபடுத்தி வரையறை செய்துகொள்ளுதற்கும் பெருந்துணையாக இருந்தன.''

[— புறநானூறு, முதற்பதிப்பு, முகவுரை]

ஐயரவர்கள் மிகுந்த முயற்சிசெய்தும், ஐம்பெருங் காப்பியங்களில் "வளையாபதி", "குண்டலகேசி" என்ற இரண்டு நூல்கள் மட்டும்

அகப்படவில்லை. பூச்சிகளுக்கு இரையாகாமல் பல அரிய நூல்களைத் தேடியெடுத்துப் பொற்புறப் பதிப்பித்த இவருக்கு அவை இரண்டும் கிடைக்காதது தமிழரின் துரதிருஷ்டமேயாம். பிள்ளையவர்கள் இருந்த காலத்தில் திருவாவடுதுறை மடத்துப் புத்தகசாலையில் 'வளையாபதி' ஏட்டுச் சுவடியை இவர் பார்த்ததுண்டு; அப்போது ஆராய்ச்சி மனோபாவம் ஏற்படாததால் இவர் அதில் பற்றுக்கொள்ளவில்லை. ஆனால் பின்னர் ஆவலுடன் அதைத் தேடிப் பார்த்தபோது அது அங்கே காணவில்லை. தமிழ்நாடு முழுதும் தேடியும் கிடைக்காமையால் அதிக வருத்தமடைந்தார் இவர்.

இந்தப் பழைய தமிழ்நூல்களின் பிரசுரத்தினால் தமிழர் பல விஷயங்களை நன்கு அறிந்துகொள்ள முடிந்தது; சரித்திரகால நிர்ணயத்திற்கும், முன்னோர் பழக்கவழக்க ஆராய்ச்சிக்கும் இவை பெரிதும் உதவின. "இக்காலத்துத் தமிழறிஞர் சங்கநூல் முதலிய பழைய தமிழ் நூல்களை எளிதிற் பெற்று இன்புறுதற்கு இவர்கள் செய்த பேருதவியே சிறந்த கருவியாகும்" என்கிறார் மஹாமஹோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார்.

நம் ஐயரவர்கள் முன்வந்திரா விட்டால், "நெஞ்சை யள்ளும் சிலப்பதிகாரம்" என்று

டாக்டர் உ. வே. சாமிநாதையர்

தேசியகவி பாரதியார் பாடியிருக்க முடியுமா? சங்க நூல்களைப் படித்து ஆராய்வது சாத்தியமாயிருந்திருக்குமா? பண்டைத்தமிழ் இலக்கியங்களின் அருமை பெருமைகளை நாம் உணர்ந்திருக்கக் கூடுமா? ஆகவே பழைய நிலைமை தெரிந்தவர் தமிழ் என்றால் ஐயரவர்களின் ஞாபகம் தமக்கு உடனே வருகிறது என்று கூறுவதில் யாதோர் ஆச்சர்யமும் இல்லை.

6

பிரஸிடென்ஸி காலேஜ்

1903-ஆம் வருஷ முடிவில் இவர் பிரஸி டென்ஸி காலேஜுக்கு மாற்றலாகிவந்தார். இங்கே சுமார் 16 வருஷ காலம் வேலை பார்த்தார். ராய் பகதூர் பி. ரங்கநாத முதலியார் முன்பே இவரைச் சென்னைக்கு வந்துவிடும்படி இருமுறை வருந்தி யழைத்தார். இவரது கல்விப் பெருக்கைக் கண்டு இவர் தம்மருகே இருக்கவேண்டும் என அவர் ஆசைப்பட்டார். அப்போது இவருடைய பிதா குடந்தையை விட்டு வெளிக்கிளம்ப விரும்பவில்லை. ஆசார சீலரும், வைதிக சிரேஷ்டரும், சிவபக்திச் செல்வருமான அவர் அந்தத் திவ்விய க்ஷேத்திரத் திலேயே தங்கியிருக்கத் தீர்மானித்தார். அவ்வூரி லிருந்து புறப்பட அவர் மறுத்துவிட்டார். ஆகவே தகப்பனர் தேகவியோகத்திற்கு அப்புறந்தான் இவர் சென்னை வந்துசேருவது சாத்தியமாகியது.

கல்லூரியில் ஐயரவர்கள் பாடம் நடத்தியவிதம் சிறப்புக்குரியது. அந்நாளில் தமிழ் வகுப்பென்றுல்

மிகவும் ஏளனத்திற்கு இடமாக இருந்துவந்தது. தமிழ்ப் பண்டிதர்களை மாணவர்கள் கண்டவித மெல்லாம் பரிகஸிப்பது அப்போதெல்லாம் சகஜம். ஆசிரியர்களுக்கு இதனால் கோபம் வந்து மாண வர்பால் தீராப் பகை ஏற்பட்டுவிடும். ஐயரவர்கள் வந்தது முதற்கொண்டு இந்த நிலை மாறியது. மாணவர் மதிப்பு வைக்க முற்பட்டனர். மரியாதை யுடனும் அவர்கள் நடந்துகொண்டனர். இதற்குக் காரணம் ஐயரவர்களது குண விசேஷந்தான். உலகானுபவம் மிகுந்த இவர், கேட்போர் களிக் கும்படி கற்பித்துவந்தார். மாணவரது இயற்கையை நன்கறிந்து அதற்கேற்பத் தமது பாட முறையை அமைத்துக் கொண்டார். நயமான பேச்சு, மிருது வான வார்த்தைகள், இனிமையான நடத்தை என்னும் இவை கலாசாலையில் நம் ஐயரவர்கள் தனிப் பெருமையுடன் திகழ்தற்கு உதவின.

"இளைஞர்களுக்கு விளையாட்டுத்தனம் இருப் பது இயல்பு. வகுப்பில் விளையாட்டுக்களை மாணாக் கர்கள் காட்டுவார்கள். ஆயினும் அவர்களை அடக் கும் முறையில் அடக்கினால் அவர்கள் பெட்டிப் பாம்புபோல் அடங்கி விடுவார்கள். பின்பு தாம் செய்த குற்றத்திற்கு இரங்குவார்கள். அவர்கள் பெரும் குற்றம் செய்தார்களென்றும் அதற்குத் தண்டனை விதிப்பதற்குரிய அதிகாரி தாமென்றும் எண்ணுவது ஆசிரியருக்குத் துன்பத்தையே விளை

விக்கும். உலகியல்பு நன்ருகத் தெரியாத அவர்கள் பேதைமையாற் செய்கின்ருர்கள் என்று எண்ணிப் பிரியமாக நல்லறிவு புகட்டிஞல் அவர்கள் வணங்கி விடுவார்கள்.''

[— நல்லுரைக்கோவை, மூன்ரும் பாகம்,
பக்கம் 40]

ஐயரவர்கள் சென்னை வந்து சேர்ந்ததும் ஒரு சிறு சம்பவம் நிகழ்ந்தது. வகுப்புப் பரீட்சைக்காக மாணவர்கள் காத்துக்கொண்டிருந்தனர். விஞப் பத்திரங்களை அவர்களிடம் கொடுப்பதற்கு முன் அவர்கள் பண்ணிவந்த ஆர்ப்பாட்டம் அனந்தம். ஒரே குழப்பமாயிருந்தது. ஐயரவர்கள் மெல்ல ஒரு மாணுக்கனிடம் சென்று, மிகவும் சாத்விகத் தொனியில், "பேசாமல் இரும், ஏன் சத்தம் போடுகிறீர் ?" என்று கூறிஞர். இந்த வார்த்தையை அந்த மாணவன் சிறிதாவது மதிக்கவில்லை. "நீங்கள் பேசாமல் போங்கள். இங்கே இப்படித்தான் நடக்கும். இது கும்பகோணமல்ல" என்று மிகவும் கம்பீரமாக அவன் விடை அளித்தான். இதற்கப்புறம் மேலும் தொடர்ந்து வாக்குவாதம் நடத்துவது பயன்தராது என்பதை ஐயரவர்கள் அறிந்துகொண்டார்; அவ்விடத்தை விட்டகன்ருர். இம்மாதிரி இவர் மிகவும் வினயமாக நடந்து கொண்டது, மமதை மிகுந்த மாணவனுக்கும் நற்புத்தியைப் புகட்டியது. அநாவசியமாக ஆசிரியரது உள்ளத்தை வருத்திவிட்

டோமே என்ற பச்சாத்தாப உணர்ச்சி அவனுள் உதயமாகியது. இதன் பின்னர், பிறரும் தமிழ்ப் பண்டிதருக்குத் திருப்தி ஏற்படும் வகையில் நடந்து கொண்டனர்.

மற்றுமொரு விசேஷம், ஒவ்வொரு மாண வனும் இவரிடம் நெருங்கிய பிணைப்பைக் கொண் டிருந்ததேயாகும். அவரவர் ஊர், குடும்பம் முதலிய வரலாறுகளைக் கேட்டுக்கொண்டு, அவை சம்பந்த மாகத் தாமறிந்த பல ரஸமான விஷயங்களையும் எடுத்துச் சொல்வார். தாம் சாமான்யமான தமிழ்ப் பண்டிதரல்ல என்பதையும், தமக்குத் தெரியாத விஷயமே கிடையாது என்பதையும் இவர் நிரூபித்து வந்தார். தமது வகுப்பில் எவனுவது ஏதாவது சேஷ்டை செய்தால், அவனை வெகு சுலபமாக இவர் நல்வழிக்குத் திருப்பிவந்தார். இவர் பின்பற்றிய வழி பிறருக்கு எளிதன்று. பழுத்த வாழைப்பழத்தில் ஊசியை ஏற்றுவது போல் இருக்குமாம் இவர் பிரயோகிக்கும் பதங்கள்.

ஒருநாள் ஒருவன் இவர் பாடம் சொல்லிவரும் போது அதிக உபத்திரவத்தைப் பண்ணிவந்தான். அவனைப் பார்த்து, " வகுப்பில் உன் தமையன் வெகு வினயமாய் இருப்பான். ஆனுல் அவன் படித்தவன்" என்று இவர் சொன்னதுதான் தாமதம்,எதிர்பார்த்த பலன் கிடைத்தது. அதற்குப் பிறகு அவன் ஏன் தன் வாலை ஆட்டுகிருன், இவர் முன்னிலையில்?

மற்ருெரு நாள், ஒருவன் பின் பெஞ்சு ஒன்றில் இருந்து கொண்டு, பேனுக்கத்தியால் மேஜையைக் குடைந்துகொண்டிருந்தான். இதை ஐயரவர்கள் பார்த்துவிட்டார். வழக்கம்போல், “ ஐயர்வாள்! அது இயற்கையோ! செயற்கையோ ” என்று கேட்டார். கோபக்குறியின்றிப் புன் சிரிப்புடன் இவ்வார்த்தைகள் வெளி வரவே, பிள்ளைகள் யாவரும் வாய்விட்டுச் சிரித்தனர். சேஷ்டை புரிந்தவனும், தனக்கும் குரங்குக்கும் இவர் கற்பித்த சம்பந்தத்தை உணர்ந்து, மற்றவர்க ளுடன் சேர்ந்து சிரித்தான். அது முதல் அந்தக் காரியம் நின்றது ; பாடத்தை ஆசையுடன் கேட்க அவன் உள்ளத்தில் ஆவல் பிறந்தது.

வேறு ஒரு சம்பவத்தையும் இவ்விடத்தில் குறிப்பிடலாம் : வகுப்பில் ஒரு மாணவன் ஏதோ பேசிக்கொண்டு பாடம் நடப்பதற்குப் பெரும் தடையாயிருந்தான். பலமுறை புத்திபுகட்டிப் பார்த் தார் நம் தமிழ்ப் பண்டிதர். ஒன்றும் ஏறவில்லை. கடைசியில் அவன் செய்வது தீது என்றும், அவ் விதம் செய்பவர்கள் நற்பயன் அடையமாட்டார் கள் என்றும் சில மேற்கோள்களை எடுத்துச் சொன்னர். இதனுடன் இவர் நிற்கவில்லை. அப் புறம் வகுப்பைப்பார்த்து, “ தீயாரைப்பற்றி வேறு ஏதாவது மேற்கோள்கள் உங்களுக்குத் தெரியுமா ?” என்று வினவினர். அந்தச் சேஷ்டைக்கார மாண

வன் உடனே எழுந்திருந்து, "தீயார்சொற் கேட்ப துவுந் தீதே" என்றான். வகுப்பில் எல்லோர் முகத்தி லும் கலவரக் குறி தென்பட்டது. இந்தத் துணிச்ச லுக்கு ஒருவராவது தயாராக இல்லை. இதன் விளைவு என்னாகுமோ என்று அச்சமுற்றனர். பண்டிதருக் குக் கோபம் எப்படிப் பொங்குமோ என்று பயந்தனர். ஆனால் எதிர்பார்த்தபடி நடக்கவில்லை. ஐயரவர்கள் சாந்தமூர்த்தியாகவே சோபித்தார். புன்சிரிப்புத்தான் இவருக்கு! "அஞ்சாத நெஞ்சு படைத்தவர் ஐயா, நீர்!" என்றுமட்டுமே கூறினார். கலக்கம் கடந்தது; புத்துயிர் பிறந்தது; குறும்புக் காரரும் தம் குற்றத்தைக் கண்டுகொண்டார். தமது ஆச்சர்யமான நகைச்சுவை காரணமாக இவர் நற் புத்தி ஏற்படச்செய்தார். இவ்விதம் கலாசாலையில் பிறர் மனத்தைப் புண்படுத்தாமல் பல சமயங்களில் தம் குணச்சிறப்பை இவர் வெளிப்படுத்தியதுண்டு.

கலாசாலையில் ஒவ்வொரு வாரத்திலும் ஒருநாள் மாணவர்கள் ஏதாவது ஒரு விஷயத்தைப் பற்றி வியாசம் சுயமாகவே எழுதவேண்டும் என்பது நியதி. அவற்றைத் தமிழ்ப் பண்டிதர் திருத்தி, மதிப்புக்குத் தக்கபடி 'மார்க்கு'கள் தருவார். இரண்டு வருஷப்படிப்புப் பூர்த்தி பெற்றதும், ஐய ரவர்கள் இந்த 'வியாஸ நோட் புக்'குகளை அவரவ ரிடம் சேர்ப்பித்துவிடுவார். வகுப்பில் இருக்கும் ஒவ் வொருவனுடைய தன்மையையும் வன்மையையும்

இவர் நன்கு அறிந்தவர். "நோட் புக்"குகளைத் திருப்பிக் கொடுக்கும் போது, ஒவ்வொருவராக அழைத்து, ஒன்றிரண்டு வாக்கியங்களுக்குள் தமது கருத்தை இவர் மிகவும் சங்கிரகமாக வெளியிடுவார். அதை எந்த அளவுக்கு அவசியமோ அந்த அளவுக்கு வியாக்கியானம் பண்ணிக் கொண்டே போகலாம். "ஐயங்கார்வாள், இந்தப் பணத்தை நிலத்தில் போட்டிருந்தால் பலன் கிடைத்திருக்கும்!" என்று சொல்லிக்கொண்டே ஒரு மாணவனிடம் அவன் எழுதிய வியாச புத்தகத்தை அளித்தார்; அதிகம் கூறவில்லை. ஆனால் அடங்கியிருந்ததோ அளவிட இயலாதது. மற்றுமொருவனைக் கூப்பிட்டார். "தீக்ஷிதர்வாள், சம்ஸ்கிருதம் கற்றுக் கொண்டிருக்கலாம்!" என்றார் இவர். தமிழில் திறம்பட எழுத அவனால் முடியவில்லை என்பதை வெகு நயமாக அவனுக்கு எடுத்துக் காட்டிவிட்டார். அவனுடைய சக்தியைக் குறைத்துக் கூறி அவன் வருத்தமடையச் செய்யவில்லை.

எல்லாவற்றிலும் மிகவும் ஸ்வாரஸ்யமான சம்பவம் ஒன்று இவர் சென்னையில் பதவியேற்றவுடன் நிகழ்ந்தது. ஒருநாள் இவர் வகுப்பில் பாடஞ் சொல்லிக்கொண்டிருந்தபோது, முதல் வரிசையில் அமர்ந்திருந்த ஒரு மாணாக்கன், வலது காலைத் தூக்கி இடது துடைமேற் போட்டு, அந்த வலது முழங்காலை இரண்டு கைகளாலும் கட்டி மேலே

உயர்த்திக் கொண்டும், இடையிடையே காலை அசைத்துக் கொண்டும் இருந்தான். பாடத்தையோ பண்டிதரையோ அவன் கொஞ்சமும் கவனித்தானில்லை. இவர்மட்டும் அதைப் பார்த்து விட்டார். அப்பொழுது நடந்த பாடம் கம்ப ராமாயணம்: ஹனுமானைப் பற்றிய சந்தர்ப்பம். ராவணனுடைய தர்பாரில், அவர் ராக்ஷஸேந்திரனுக்கும் மேலான ஸ்தானத்தில் உட்கார்ந்திருந்ததைக் குறிக்கும் இடம். "ராவணனுடைய சிங்காதனத்திற் கருகில் தம் வாலைச் சுற்றிச் சுற்றி அந்தச் சிங்காதனத்தைவிட உயரமான ஓர் ஆசனத்தை உண்டாக்கி அதன்மேல் ஹனுமான் தாவினார். கால்மேல் காலைப் போட்டு முழங்காலை உயர்த்திக் கையால் கட்டிக்கொண்டு பேச ஆரம்பித்தார். அவர் உட்கார்ந்திருந்த நிலையை எப்படி நான் தெளிவாகச் சொல்ல முடியும்? இதோ இவர் உட்கார்ந்திருக்கிறாரே இப்படித்தான்!" என்று இவர் அந்த மாணாக்கனைச் சுட்டிக் காட்டினார். மற்றவர் யாவரும் வாய்விட்டுச் சிரித்தனர். தவறாக நடந்து கொண்டவனும் நெறிமுறையைக் கண்டுகொண்டான். வெட்கமும் அவமானமும் அவனைப் பிடுங்கித் தின்றன. பாடம் முடிந்ததும், அவன் தனது அகம்பாவத்தை அடக்கிய ஐயரவர்களிடம் போய், தனிமையில் மன்னிப்புக் கோரினான்.

கலாசாலையில் ஐயரவர்கள் மற்ற ஆசிரியர்களுக்குச் சமமாகவே இருந்தார். வித்தியாசம் சம்பளத்தில்தான் இருந்ததேயொழியக் கௌரவத்தில் இல்லை. கலாசாலைப் பிரின்ஸிபால்கள் ஒவ்வொருவரும் இவரிடம் நன்மதிப்புக் கொண்டு தனி அன்பு காட்டினர். பிரின்ஸிபால் மிஸ்டர் பில்டர்பெக் இவரது தமிழாராய்ச்சியைப் பாராட்டினார். 'சிந்தாமணி'ப் பிரதிகளை வாங்கி மேனாட்டுக் கலா நிலையங்களுக்கு அவர் அனுப்பிவைத்தார். இவரால் கலாசாலைக்குப் பெயர் விளங்குவதாகவும் அவர் ஒரு சமயம் கூறினார்.

3342

சென்னைக்கு வந்ததும் ஒருநாள் பிரின்ஸிபாலான மிஸ்டர் பில்டர்பெக் இவரைத் தம்மிடம் அழைத்து, எது வேண்டுமோ அதைச் சொன்னால் தாம் செய்துதருவதாகத் தெரிவித்தார். பிரஸிடென்ஸி காலேஜில் பாடம் சொன்ன முதல் நாளே இவருக்கு வகுப்பில் காணப்பட்ட ஏற்பாடுகள் அதிருப்தியை அளித்தன. அங்கே ஒரு பழைய மேஜையும் பழைய நாற்காலி ஒன்றும் பண்டிதருடைய உபயோகத்துக்காக இருந்தன. மேடை இல்லை. இருந்த நிலைமை இவர் எண்ணியதற்கு மாறாகவே காணப்பட்டது. அவற்றைப் பார்க்க இவர் ஸஹிக்கவில்லை. இவ்வாறு இவர் உள்ளத்தே உருகிக்கொண் டிருக்கும்போது, வழக்கமாகப் பிரதி தினமும் காலேஜைச் சுற்றிப்

பார்வையிடும் பிரின்ஸிபால், தமிழ் வகுப்புக்கு வந்துசேர்ந்தார். அவர் இவரிடம் வந்து, "எல்லாம் சௌகர்யமாக இருக்கின்றதா?" என்று வினவினர். "இங்கே சௌகர்யங்களுக்கு என்ன குறை? இதோ இந்த மேஜையைப் போல வேறென்றை எங்கும் பார்க்கமுடியாது. ஏறக்குறைய நூறு வருஷ சரித்திரத்திற்குச் சாட்சியாக இது விளங்குகிறது. அக்காலத்துப் பண்டிதர்கள் கற்பலகையையும் பலப்பத்தையும் உபயோகப்படுத்தி வந்தனர் என்பதை இந்தப் பள்ளங்கள் தெரிவிக்கின்றன. இதனேடு பழகிய புலவர்களைப் பற்றிய செய்திகள் எனக்குத் தெரியும். அவர்களுடைய ஞாபகத்தை இம்மேஜை உண்டாக்குகிறது. இந்த நாற்காலியும் இதற்கேற்ற 'ஜோடி' யென்றே தோற்றுகிறது. இந்த இரண்டினுடைய பெருமையையும் நான் மட்டும் அறிந்து மகிழ்வதுதான் ஒரு குறை. பல பேர் அறியும்படி ஒரு காட்சிச் சாலையில் இருந்தால் நன்ருக இருக்கும்" என்று இவர் பதில் அளித்தார். இதைக்கேட்டதும் மிஸ்டர் பில்டர்பெக் சிரித்தார்; பிறகு தமது அறைக்கு நேரே போய்விட்டார். பிற்பகல் பாடம் ஆரம்பிப்பதற்குள் பண்டிதருக்குப் பரம திருப்தி உண்டாகும்படிச் செய்துவிட்டார் பிரின்ஸிபால். குறையைத் தீர்க்க உத்தரவைப் பிறப்பித்தார். தமிழ் வகுப்பை நாடக அரங்கம்போல் மாற்றி விட்டார். பார்ப்பவர் பிரமிக்கும்படி

இருந்தது அந்த வகுப்பு. அறை முழுவதும் கீழே பிரப்பம்பாய் விரிக்கப்பட்டிருந்தது. பலகையாலான பெரிய மேடை ஒன்றும் அதன்மேல் அழகிய மேஜை யும் இரண்டு நாற்காலிகளும் போடப்பட்டிருந்தன. உபயோகப்படும் புத்தகங்களை வைத்துக்கொள்ள ஒரு 'பீரோ'வும் அறையின் மூலேயில் காணப் பட்டது. இவ்விதம் தலைவர் தம்மிடம் காட்டிய அன்பு ஐயரவர்களுக்கு அதிக மகிழ்ச்சியை ஊட்டியது.

ஐந்து வருஷங்களுக்கு அப்புறம் (1908-இல்) ஐயரவர்கள் ரஜாவில் அயலூர் போயிருந்தார். அப்போது கலாசாலையில் பிரின்ஸிபாலாயிருந்தவர் மிஸ்டர் ஸ்டோன். புதிதாக வந்திருந்த ஆங்கில ஆசிரியர் ஒருவருக்காக, இவர் ஊரிலில்லாத சமயம் இவருடைய மேஜை நாற்காலிகள் அவருடைய அறையில் அமைக்கப்பட்டு விட்டன. திரும்பி வந்ததும் இவர் தமது அறையில் பழைய மேஜையும் பழைய மேடையும் போடப்பட்டிருப்பதைப் பார்த் தார். இதனால் அதிக மனவருத்தமுற்றார். இதற்கு என் செய்வது என்று யோசித்துக்கொண்டிருந்தார். எவ்விதம் தமது குறையைத் தலைவரிடம் விண்ணப் பித்துக்கொள்வது என்ற எண்ணத்தில் ஊன்றி யிருந்தார்.

அதிருஷ்டவசமாக, அன்று பிற்பகல் பிரின்ஸி பால் இவரது அறைப் பக்கமாக வந்தார். உடனே

இவர் அவரிடம் போனார். பாடஞ் சொல்வதை நிறுத்திவிட்டுத் தம்மிடம் இவர் வருவதற்குக் காரணம் இருக்கவேண்டும் என்பதை மிஸ்டர் ஸ்டோன் கண்டுகொண்டார். "எல்லாம் ஒழுங்காக நடக்கிறதா?" என்று அவர் உடனே இவரை விசாரித்தார்.

உடனே இவர் தம்மை வருத்திவந்த விஷயத்தை அவரிடம் விக்ஞாபித்தார். "பெரிய விஷயம் ஒன்றும் இல்லை. இவ்வளவு காலமாக இங்கிருந்த மேஜை முதலியன இப்போது மாற்றப்பட்டிருக்கின்றன. இந்த மேஜை பழையதாக இருந்தாலும் தோஷமில்லை. இந்த மேடைதான் யோசிக்கக்கூடியதாய் இருக்கிறது. பிள்ளைகளுடைய முகத்தைப் பார்த்துக்கொண்டு பாடஞ் சொல்லும்போது எனக்கு ஞாபகமெல்லாம் நாற்காலியிலேயே இருக்கிறது. இந்த மேஜையோ மிகவும் குறுகியது. பாடஞ் சொல்லிக் கொடுக்கும் உற்சாகத்தில் என் உடம்பு அசையுமானால் நாற்காலி நகரும். உடனே நானும் நாற்காலியும் கீழே விழவேண்டியதுதான். அதனால் பயந்துகொண்டே பாடஞ் சொல்லுகிறேன்" என்று கூறினார் இவர்.

இதைக் கேட்டதும் பிரின்ஸிபாலுக்கு ஒருபுறம் சிரிப்பும், மற்றொருபுறம் கோபமும் கிளம்பவே அவர் ஒன்றும் பேசாமல் போய்விட்டார். மறுநாட்

காலை மேஜையும் மற்றவையும் தமிழ் வகுப்புக்குத் திரும்பிவந்து பழையபடியே அமைக்கப்பட்டன.

"பிரஸிடென்ஸி காலேஜில் மிஸ்டர் ஜெ. எச். ஸ்டோன் இருந்த காலத்தில் ஒரு சமயம், காலஞ் சென்ற தூத்துக்குடி வ. உ. சிதம்பரம் பிள்ளை சிறையிலிருந்து திருக்குறளிற் சில சந்தேகங்களை எனக்கு எழுதியனுப்பி விடையெழுத விரும்பினார். சிறையிலுள்ள அவருக்கு நான் கடிதம் எழுதுவது உசிதமாக இருக்குமா வென்று ஸ்டோன் துரையைக் கேட்டேன். 'கடிதம் எழுதவேண்டும். சிறைச்சாலைக் குள் ஒருவரது பழக்கமும் இல்லாமல் கஷ்டப்படுப வர்களுக்கு நாம் உதவிசெய்வது அவசியம். ஆனால் கடிதத்தை நீங்கள் தேடி, அனுப்பவேண்டாம். எழுதி என்னிடம் கொடுங்கள். நான் சிறையதிகாரி மூலம் அவருக்கு அனுப்பிவிடுகிறேன்' என்றார். நான் அங்ஙனமே செய்தேன்."

[பிரஸிடென்ஸி காலேஜ் நூற்றாண்டு விழா மலர், பக்கம் 85]

சென்னைக் கவர்னர் லார்ட் கார்மைக்கேல் 1911-ஆம் வருஷம் மஹாபலிபுரத்துக்கு விஜயம் செய்தார். ஆகவே அந்த ஸ்தலத்தைப் பற்றிய செய்திகளைத் தெரிவிக்கும்படிச் செங்கற்பட்டு ஜில்லா கலெக்டர் இவரைக் கேட்டுக்கொண்டார். அதற்காக இவர் மிஸ்டர் மிடில்மாஸ்ட் மூலம்

தமக்குத் தெரிந்தவற்றைத் தொகுத்து எழுதி அனுப்பினர். பிறகு ஸர்க்கார் சிற்ப இலாகா காரியாலயத்திற்கு அந்தக் கவர்னர் வந்தபோதும் அங்கிருந்த சிலைகள், விக்கிரகங்கள் முதலியவற்றைப் பற்றிய விஷயங்களை விஸ்தரித்துச் சொல்ல, மிஸ்டர் மிடில்மாஸ்ட் இவரையே அனுப்பினர். கார்மைக்கேல் பிரபுவுக்கு இது மிகுந்த திருப்தியைத் தந்தது. இதற்கப்புறம் 1912-ஆம் வருஷாரம்பத்தில் கவர்னர் பிரபு கலாசாலைக்கும் விஜயம் செய்தார். அப்போது அவர் விஷயமாக இவர் இரண்டு செய்யுட்களை எழுதி வாசித்தார். பின்னர் அவர் தமிழ் வகுப்புக்கும் வந்து, ஐயரவர்களிடமிருந்த சில ஏட்டுச் சுவடிகளையும், அச்சுப்பிரதிகளையும், எழுத்தாணியையும் பார்த்தார். அவர் அந்த வகுப்பில்மட்டும் அரைமணி நேரத்திற்கு அதிகமாகத் தங்கியிருந்தார்.

இவ்வாறு சீருடனும் சிறப்புடனும் வேலை பார்த்து 1919-ஆம் வருஷ ஆரம்பத்தில் இவர்தம் பதவியை விட்டு விலகினர். சுமார் நாற்பது ஆண்டுகள் பாடப்ரவசனம் பண்ணினர். இவர்கீழ்ப் படித்து மேம்பதவி அடைந்தவர் அநேகர்.

7

புகழும் புத்தகங்களும்

இவருக்குப் பல கௌரவங்கள் கிடைத்தன; சன்மானங்களும் வந்து குவிந்தன. இவர் சென்னைப் பிரஸிடென்ஸி காலேஜுக்கு மாற்றப்பட்ட பின் 1903-இல் கௌரவ பத்திரமும், 1905-இல் ஆயிரம் ரூபா சன்மானமும் ஸர்க்காரிடமிருந்து கிடைத்தன. எல்லாவற்றிற்கும் மேலாக 1906-இல் மஹாமஹோ பாத்தியாயப் பட்டம் இவருக்கு வழங்கப்பட்டது.

"ஸ்ரீமான் ஸ்வாமிநாதையர் தமது பாஷாபிமானம், தேசாபிமானம் என்னும் பெரிய ஆயுதங்களைக் கொண்டே அசௌகர்யங்களை வென்று உயர்வுற்றிருக்கிறார் என்பதில் ஐயமில்லை. இவருடைய அருந் திறமையை நன்கு மதித்துக் கவர்ன்மெண்டார் இவருக்குப் புதுவருஷப்பட்டமாக மகாமகோபாத்தியாயர் என்ற உயர்பட்டமளித்திருப்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம். மகாமகோபாத்தியாய ஸ்வாமிநாதையர் அவர்கள் இன்னும் நெடுங்காலம்

இருந்து, அவருக்கு நெடுங்காலம் முன்னரே கிடைத்திருக்க வேண்டியதாகிய மதிப்பு முழுதையும் அடைந்தவராகி, இத்தமிழுலகத்தாருக்குப் புதிய புதிய விருந்துகள் ஊட்டிக் கொண்டிருப்பாரென்று மனப்பூர்த்தியாக விஸ்வசிக்கின்றோம்"

என்று இவரைப் பாராட்டி, "சுதேசமித்திரன்" 1906-ஆம் வருஷம் ஜனவரி மாதம் 2-ந் தேதியன்று எழுதியது. வடமொழியில் பாண்டித்தியம் உள்ளவர்களுக்குத்தான் இந்தப் பட்டம் அளிப்பது வழக்கமாக இருந்தது. இவர் விஷயத்தில் அந்த விதி மீறப்பட்டது.

இதைக் கொண்டாடப் பல கூட்டங்கள் கூடின. அவற்றுள் கும்பகோணம் போர்ட்டர் டவுன் ஹாலில் அவ்வருஷம் பிப்ரவரிமாதம் 10-ஆம் தேதி நடந்தது தனிச்சிறப்புப் பொருந்தியது; கலாசாலை அதிபர் ராவ்பஹதூர் ஸி. நாகோஜிராவ் அக்ராசனம் வகித்தார். பல பிரபலஸ்தர்கள் இவரைப் பாராட்டிப் பேசினர். கலாசாலைத் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீ. வை. மு. சடகோபராமாநுஜாசாரியர் தமது வாழ்த்துப் பிரசங்கத்தில் இப்பட்டம் இவருக்குக் கொடுக்கப்பட்டதற்குப் பொருத்தம் காட்டினர். சம்பிரதாயத்தை மாற்றுவதன் உசிதத்தை உணர்த்தினர். அவர் அச்சமயம் கூறியது வருமாறு:—

"'மகாமகோபத்தியாயப் பட்டமென்பது வடமொழியாளர்க்கே உரியது, தமிழ்ப் பண்டிதர்

முதலியோர்க்கு உரியதன்று' என்று சிலர் ஆக்ஷேபிக்கலாம். அப்பெயர் பெரும்பேராசிரிய ரென்று பொருள் படுவதேயன்றி, அதன் பொருளில் வடமொழி வல்லவர் என்பது விளங்காமையால், அந்த ஆக்ஷேபம் ஏற்றுக்கொள்ளத் தக்கதன்று. அந்தப்பெயர் சம்ஸ்கிருத பதமாயிருப்பது மாத்திரங் கொண்டு, அது அவர்களுக்கே உரியதென்று ஆகாது. தமிழ் முதலிய தேசபாஷை நூல்களுக்குச் சிந்தாமணி, மணிமேகலை முதலாகவும், அந்நூல்களின் உட்பிரிவுகளுக்குக் காண்டம், படலம், அத்தியாயம், அதிகாரம், லம்பகம் முதலாகவும் வடசொற்களாற் பெயரிடும் வழக்கம் தொன்றுதொட்டு உள்ளதனுல், அவ்வழக்கின்படியே இவ் வடமொழிப் பெயரும் தென்மொழியாளர்க்கும் உரியதாம். ஆனுல் 'இதுவரை வடநூலார்க்கே வழங்கப்பட்டதேயன்றித் தமிழர்க்கு வழங்கியதில்லையே' என்ருல், ராமாயணம், பாரதம், பாகவதம், ஸ்காந்தம் முதலியன ஆதியில் வடமொழியில் உண்டாகிப் பிற்காலத்தில் தமிழிலும் ஏற்பட்டவையாதலால், அந்த நியாயத்தின் படியே இப்பட்டமும் முதலில் வடமொழியில் வழங்கிப் பின்பு தென்மொழியில் வழங்குதல் தகுதியேயாம். இதுவன்றி வேதம், வேதத்திற்கு அங்கமும் உபாங்கமுமான தர்க்கம், வியாகரணம், மீமாம்ஸை, தர்க்க சாஸ்திரம் முதலிய சாஸ்திரங்கள், வேதாந்தம், இவை தமிழில் இல்லை என்று கொண்டு, இவைகளெல்லாம் வல்லவர்க்கு வழக்கமாய்க் கொடுக்கப்பட்டுவருகிற இப்பட்டம்

தமிழ் வித்துவானுக்கு உரியதன்று என்று வேறோர் ஆக்ஷேபம் உண்டாகலாம். இவையெல்லாம் வடமொழியில் போலவே தென்மொழியிலும் உள்ளனவாதலால் இவை வல்லார்க்கும் அப்பட்டம் சிறக்குமென்பதே அதற்குத் தக்க சமாதானம். வடமொழியில் அதர்வண வேதம் நீங்கலாக மற்றை மூன்று வேதங்களும் 'த்ரயீ' என்று சிறப்பித்துப் பாராட்டப்படுதல் போலவே தமிழிலும் திருக்குறள், தேவார திருவாசகங்கள், திவ்வியப் பிரபந்தங்கள், இம்மூன்றும் வேதமென்று கொண்டாடப்படுகின்றன. ஸம்ஸ்கிருதத்தில் ப்ராசீனமாகவும், நவீனமாகவும் வழங்குகிற தர்க்கத்திலும் மிகவும் அதிகமான தர்க்க சாஸ்திரம் தமிழில் வழங்கியதென்பது ஸ்ரீமத் சாமிநாதையரவர்கள் தாம் இயற்றிய அரும் பதவுரையுடன் அச்சிட்டிருக்கிற 'மணிமேகலை' எனும் மகா காவியத்தில் 'தவத்திறம் பூண்டு தருமங் கேட்ட காதை' ஒன்றினாலேயே விளங்கும். வடமொழி வியாகரணத்தினும் தமிழ் வியாகரணம் பரந்ததும், அருமையானதும், சிரமசாத்தியமுமாகுமென்பது பாணினீயம் முதலிய ஸம்ஸ்கிருத வியாகரணங்களையும், தொல்காப்பியம் முதலிய தமிழிலக்கணங்களையும் ஒப்புநோக்குவார்க்குத் தானே தெரியலாம். இப்படியே தரும நூல்களும், வேதாந்த நூல்களும் தமிழில் மிகப் பலவென்பது இவற்றைப் பயில்வார்க்கு எளிதில் விளங்கும். இதிகாச புராணங்களும் அப்படியே."

[—"சுதேசமித்திரன்", 13-2-1906.]

இதற்கு முன்பு எந்தத் தமிழ் வித்வானுக்கும் கிடைத்திராத ஒரு கௌரவத்தை இவருக்குத் தந்து, இந்திய ஸர்க்கார் இவரது சேவையின் தரத்தை மெச்சினர். அச்சமயம் தேசீய கவி ஸ்ரீ ஸி. சுப்பிரமணிய பாரதியார் இவரை வாழ்த்திப் பின் வருமாறு பாடினுர்.

" செம்பரிதி யொளிபெற்றுன் பைந்நறவு
சுவைபெற்றுத் திகழ்ந்த தாங்கண்
உம்பரெலாம் இறவாமை பெற்றனரென்
றெவரேகொல் உவத்தல் செய்வார் ?
கும்பமுனி யெனத்தோன்றும் சாமிநா
தப்புலவன் குறைவில் கீர்த்தி
பம்பலுறப் பெற்றனனேல் இதற்கென்கொல்
பேருவகை படைக்கின் றீரே ?'' 1

" அன்னியர்கள் தமிழ்ச்செவ்வி யறியாதார்
இன்றெம்மை யாள்வோ ரேனும்
பன்னியசீர் மஹாமஹோ பாத்தியா
யப்பதவி பரிவி னீந்து
பொன்னிலவு குடந்தைநகர்ச் சாமிநா
தன்றனக்குப் புகழ்செய் வாரேல்
முன்னிவனப் பாண்டியர்நா ளிருந்திருப்பின்
இவன்பெருமை மொழிய லாமோ ?'' 2

" நிதியறியோம் இவ்வுலகத் தொருகோடி
யின்பவகை நித்தந் துய்க்கும்
கதியறியோம் என்றுமனம் வருந்தற்க
குடந்தைநகர்க் கலைஞர் கோவே

பொதியமலை பிறந்தமொழி வாழ்வறியும்
காலமெலாம் புலவோர் வாயில்
துதியறிவாய் அவர்நெஞ்சின் வாழ்த்தறிவாய்
இறப்பின்றித் துலங்குவாயே !'' 3

இவரது கீர்த்தி பரவாத இடமே இல்லை. கவி ரவீந்திரநாத் டாகுர் போன்ற பெருமக்கள் இவரை வீட்டில் வந்து பார்த்தனர்.

1924-இல் ராஜா ஸர் அண்ணுமலைச் செட்டியார் வேண்டுகோளின்படி சிதம்பரம் ஸ்ரீ மீனாட்சி தமிழ்க்கலாசாலை அதிபர் பதவியையேற்று மூன்று வருஷங்கள் திறம்பட நிர்வகித்துவிட்டுச் சென்னைக்குத் திரும்பினார். சிதம்பரத்தில் இவரிடம் பாடம் கேட்டவர்கள் அதைத் தங்கள் பாக்கியமாகவே இன்னும் கருதி வருகின்றனர். அந்தக் காலத்தை மறக்க இயலாது என்றும் அவர்கள் கூறுகின்றனர். அந்நாளில் இவர்கீழ் படித்த ஒருவர், "ஐயரவர்கள் சங்க நூல்களையும் பிற நூல்களையும் பாடஞ் சொல்லுகையில் நம் வாழ்வு முழுவதும் நாம் மாணவர்களாகவும் இவர்கள் ஆசிரியராகவும் இருந்து நாள்தோறும் பாடம் நடைபெற்றால் அதனினும் வேறு இன்பம் உண்டோ என்று தோன்றும்" என்றெழுதி இருக்கிறார். ஐயரவர்களுக்கும் இது பேரின்பத்தைப் பயந்தது.

"நான் காணும் கனவுகளில், கலாசாலையிற் பல மாணுக்கர்களிடையே இருந்து, அவர்களுடைய

உத்ஸாகமான செயல்களையும் அவர்கள் பேசும் பேச்சுக்களையும் அறிந்து மகிழுங் காட்சிகளே பல. தம்முடைய குடும்பத்தையே மறந்துவிட்டுக் கல்வி கற்றல் ஒன்றையே நாடிப் பறவைகளைப் போலக் கவலையற்றுப் படித்து வந்த மாணாக்கர்களுடைய கூட்டத்திடையே பழகுவதைப் போன்ற இன்பத்தை வேறு எங்கும் நான் அனுபவித்ததில்லை. அவர்களுடைய அன்பை நினைத்தாலே என் உள்ளத்தில் ஒரு புதிய ஊக்கம் உண்டாகும். அந்தக் காலம் போய் விட்டதானாலும் அக்காலத்து நிகழ்ச்சிகளின் நினைவு இன்னும் என் மனத்தை விட்டு நீங்கவில்லை. அதனால், நான் நினைக்கும் போதெல்லாம் உள்ளத்தால் மீண்டும் கலாசாலையிலிருந்து பாடஞ் சொல்லுகிறேன் ; இன்புறுகிறேன்''.

[— நல்லுரைக்கோவை, மூன்றும் பாகம்,
பக்கம் 391]

மதுரைத் தமிழ்ச்சசங்கம் தோன்றிய காலம் முதலாகவே நம் மஹாமஹோபாத்யாயருக்கு அதனுடன் நெருங்கிய தொடர்பு உண்டு. அதன் சாசுவத அங்கத்தினராகவும் சங்க நிர்வாக சபை உறுப்பினராகவும் இருந்து வந்தார். மேலைச் சிவபுரிச் சன்மார்க்க சபையில் மூன்றுமுறை ஐயரவர்கள் அக்ராசனம் வகித்தார். மஹாமஹோபாத்யாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் அழைப்புக் கிணங்கி இவர் செட்டிமார்

நாட்டுக்கும் சென்று, தம் கல்வியால் அங்கிருந்த தனவணிகர்களை இன்புறச் செய்தார்.

1917-ஆம் வருஷம் பிப்ரவரி மாதம் பாரத தர்ம மகா மண்டலத்தார் "திராவிட வித்யாபூஷணம்" என்னும் பட்டத்தையும், காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் 1925-ஆம் ஆண்டில் "தாக்ஷிணாத்ய கலாநிதி" எனும் பிருதையும் இவருக்கு மனமுவந்து அளித்தனர். இதற்கிடையில் இவ்வருஷம் ஜூன் மாதம், மதுரைத் தமிழ்ச்சங்க ஆண்டு விழாவில் ஐயரவர்களுடைய அபிமானிகள் பலர் சேர்ந்து அளித்த 5000 ரூபா கொண்ட பணப்பை ஸ்ரீ டி. ஸி. ஸ்ரீநிவாஸையங்காரால் இவரிடம் சமர்ப்பிக்கப்பட்டது. சென்னை, மைசூர், காசி, சிதம்பரம், திருவாங்கூர் ஆகிய இடங்களிலுள்ள ஸர்வகலா சாலைகளுக்கும் இவருக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது.

1931-ஆம் வருஷ ஆரம்பத்தில் கும்பகோணம் கலாசாலையின் வைர விழா கொண்டாடப்பட்டது. அச்சமயம் திருப்பனந்தாள் ஆதீனத் தலைவராகிய ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாதத் தம்பிரான் அவர்கள் இவரது உருவப்பட மொன்றை அக்கலாசாலைக்கு அளித்தார். அதை ஜஸ்டிஸ் திவான்பஹதூர் கே. சுந்தரம் செட்டியார் திறந்துவைத்து இவரது ஊக்கத்தையும் உழைப்பையும் புகழ்ந்து பேசினார்.

மறுவருஷம் ஆகஸ்ட் மாதம் சென்னை ஸர்வ கலாசாலையின் விசேஷப் பட்டமளிப்பு விழா நடை

பெற்றது. பன்னிரண்டு பிரமுகர்களுக்குக் கௌரவப் பட்டம் வழங்கப்பட்டது. உலகப் பிரசித்திபெற்ற மஹாகனம் ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார், ஜகம்முழுதும் போற்றப்படும் விஞ்ஞானியான ஸர் ஸி. வி. ராமன், சட்ட சாஸ்திர நிபுணரான ஸர் பி. எஸ். சிவஸ்வாமி ஐயர், சமஸ்தான நிர்வாகிகளுள் சிறந்து விளங்கிய மஹாகனம் ஸர் அக்பர் ஹைதரி, திருவாங்கூர் ராஜ்யத்தைத் திறம்படப் பரிபாலித்த மூத்த மஹாராணியாரான ஸேது லக்ஷ்மிபாய் அவர்கள், தென்னாட்டு வள்ளலெனத் திகழும் செட்டிநாட்டு ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார், கல்வி அபிவிருத்தியில் சிரத்தை காட்டிய ஸர் ஹென்ரி ஸ்டோன்,—இந்தப் பெரியார்கள் கோஷ்டியில் நம் தமிழ்ச் செல்வரும் ஸ்தானம் பெற்றார். "இலக்கிய டாக்டர்" பட்டம் இவருக்குக் கொடுக்கப்பட்டது. உப அத்தியக்ஷகர் ஸர் கே. ராமுண்ணி மேனன் இந்த உன்னத கௌரவம் இவர் தமிழுக்காற்றிய தொண்டை உத்தேசித்தே தரப்பட்டதெனத் தெரிவித்தார். டாக்டர் ஐயரவர்கள் இதைப் பற்றி வேடிக்கையாகப் பேசுவதுண்டு. "டாக்டர் என்றால், வைத்தியருக்குப் பெயர். 'பண்டிதர்' என்றால் தமிழில் வைத்தியரையும் குறிக்கும்" என்பார் இவர் ஹாஸ்யமாக.

அல்பாயுஸே அதிகரித்திருக்கும் நம் பரத நாட்டில், ஸஹஸ்ர சந்திரர்களைக் காணக் கொடுத்து

வைப்பது பெரும் பாக்கியமல்லவா? எண்பதாம் ஆண்டு பூர்த்தியான பின்பு சாஸ்திரோக்தமான சாந்தி யொன்றைச் செய்துகொள்ளவேண்டியது நம் சம்பிரதாயம். 1935-ஆம் வருஷம் மார்ச்சு மாதம் 5-ஆம் தேதியன்று இவரது சதாபிஷேகம் சிறப்பாக நிறைவேறியது. பல புண்ணிய தீர்த்தங்களால் அபிஷேகம் நடந்தது; பலவகையான தானங்களும் வழங்கப்பெற்றன. தமிழ் நாடு முழுதும் குதூகலித்தது. இதற்கு மறுநாள் மாலை சென்னை ஸர்வகலாசாலை ஸெனட் தோட்டத்தில் தேநீர் விருந்தளிக்கப்பட்டு, ஏராளமான பேர் இப்பெரியாரை நேரில் வாழ்த்தக் கூடினர். இதற்கப்புறம் ஒரு பொதுக் கூட்டமும் நடந்தது. ஸர் மஹம்மது உஸ்மான் தலைமை வகித்தார். திருப்பனந்தாள் காசி மடாதிபதிகள் மனமுவந்து அளித்த நம் ஐயரவர்களது உருவப்படம் ஸெனட் மண்டபத்தில் திறந்து வைக்கப்பட்டது. கொண்டாட்ட சபையின் சார்பில் அதன் தலைவர் ஸர் பி. டி. ராஜன் இவரிடம் 3000 ரூபாய்கள் அடங்கிய பணப் பையைச் சமர்ப்பித்தார். பல உபசாரப்பத்திரங்கள் படித்துக் கொடுக்கப்பட்டன. தருமபுர ஆதீன கர்த்தர் தம் சார்பில் தம்பிரான் ஒருவரை இவ்விழாவில் கலந்துகொள்ள அனுப்பியிருந்தார்.

தமிழ்நாடு தம்மிடம் கொண்ட நன்றியை ஐயரவர்கள் இந்த வைபவத்தின் மூலம் உணர்ந்து

கொண்டார் ; உள்ளமும் பூரித்தார். விழா முடியும் போது இவர் சில வாக்கியங்களைப் பேசினார் ; " இப்பொழுது என்னுடைய மனம் சந்தோஷ சாகரத்தில் மூழ்கியிருக்கின்றது. இறைவன் தரிசனம் அளித்ததைச் சொல்லும்போது, 'சொல்லுவதறியேன் வாழி தோற்றிய தோற்றம் போற்றி' என்று சேக்கிழார் கூறியது நினைவுக்கு வருகிறது. மீண்டும் இளமை வந்தாற்போன்ற ஊக்கம் உண்டாகிறது. இன்னும் நான் செய்ய எண்ணியிருக்கும் பல தமிழ்ப்பணி இடையூறின்றி நிறைவேறும், தமிழர் ஆதரவு கிடைக்கும் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது" என்ருர். அச்சமயம் உணர்ச்சிப் பெருக்குக் காரணமாக அதிகம் பேச முடியவில்லை. சங்கிரகமான பதில் : ஆனால் சாரம் மிகுந்தது,

இவருக்கு இசையில் இருந்த ஞானம் மட்டிலாதது. 1929-ஆம் வருஷம் மே மாதம் சென்னை மாநகரில் " பண்டைத் தமிழ் இசையும் இசைக்கருவிகளும் " என்ற விஷயமாகப் பேசினார் ; அருமையான விஷயம் ; ஆச்சர்யகரமான பிரசங்கம் ; அனுபவ பூர்வமான விளக்கம். தம் கருத்துக்கு இசைந்த ஆதாரங்கள் பலவற்றை எடுத்துக் காட்டினார். இசைப்பெருமை, தமிழர் இசை, இசை வகை, இசைக் கருவிகள், பிற்காலச் சங்கீதம் என்ற ஐந்து பகுதிகளாகப் பிரித்துக்கொண்டார். பண்களுக்கும் திறங்களுக்கும் உள்ள வேற்றுமையை

விளக்கினர். நெடில் ஏழும் சப்த ஸ்வரங்களுக்குரிய எழுத்துக்கள் என்பதைப் புலப்படுத்தினர். பாடுங்கால் இருக்கவேண்டிய இலக்கணங்களை எடுத்துச் சொன்னர். சம்பவிக்கும் குறைகளையும் சுட்டிக் காட்டினர். நடுவில் தாமே பாடவும் பாடினர்.

சமீபத்தில் சில வருஷங்களாக இவர் "கலைமகள்" பத்திரிகையில் சங்கீத வித்வான்கள், புலவர்களை ஆதரித்த பெருமக்கள், தமிழ் நாட்டின் அறிவு வளர்ச்சி, தமிழை வளர்த்த உத்தமர்கள் ஆகியவை சம்பந்தமாகத் தாம் கேட்டும் நேரில் அறிந்தும் உள்ள பல விஷயங்களை எழுதி நமக்குப் பேருபகாரம் புரிந்துவந்தார். பின்பு இவை யாவும் தொகுக்கப்பட்டுப் புத்தக ரூபத்தில் வெளிவந்தன. இப்போது இவை நம் சாசுவதமான பொக்கிஷமாயிருக்கின்றன.

"சங்கீத மும்மணிகள்" என்ற புத்தகத்தில் கனம் கிருஷ்ணையர், கோபாலகிருஷ்ண பாரதியார், மஹா வைத்தியநாதையர் ஆகியவர்களுடைய சரித்திரங்கள் அடங்கியிருக்கின்றன. கர்நாடக சங்கீதத்தின் வகையாகிய கனம், நயம், தேசிகம் என்னும் மூன்றினுள் கன மார்க்கத்தை அப்யசித்துப் புகழ் பெற்றவர் கனம் கிருஷ்ணையர். இந்த வரலாற்றில் உடையார்பாளைய சமஸ்தானத்தில் அவர் வித்வானுக இருந்த விவரங்களை மிகவும் ரஸமான முறையில் எழுதியிருப்பதுடன், அவர் இயற்றிய அறுபது

கீர்த்தனங்களையும் இதில் வெளிப்படுத்தியிருக்கிறார். சங்கீத அபிமானிகளுக்கு இது சந்தோஷத்தைத் தருகிறது.

தமிழ்நாடு முழுதும் பிரசித்திபெற்ற "நந்தன் சரித்திரக் கீர்த்தனத்"தின் ஆசிரியரான கோபால கிருஷ்ண பாரதியாரின் சரித்திரத்தை ஆதியோடந்தமாக இவர் எழுதியிருப்பது பெரிதும் போற்றத் தக்கதாகும். பாரதியாரிடம் இவர் சிறிது காலம் சங்கீதப் பயிற்சி செய்து வந்தார். தாம் நேரில் அறிந்தவையும், பிறர் மூலமாய்க் கேட்டவையும் இதுவரையில் வெளிவராதவையுமான பல அரிய செய்திகள் இதில் உள்ளன. பாரதியார் இயற்றிய தனிக் கீர்த்தனங்களும் இதில் தொகுத்து வெளியிடப்பட்டிருக்கின்றன. தமிழ் இசையைக் குறித்து அலக்ஷியமாகப் பேசுவோர்க்கு இப்புத்தகங்கள் அதன் உயர்வைக் காட்டுகின்றன.

முந்திய இருவரைக் காட்டிலும் மஹா வைத்தியநாதையரை இவர் நன்கறிந்தவர். அந்தச் சிறந்த சங்கீத வித்துவானிடம் நீண்ட காலம் ஐயரவர்கள் பழகினர். அவரைப் பற்றிய புத்தகத்தில், அவருடைய சங்கீதத் திறமையையும், ஆத்ம குணங்களையும், கல்வியாற்றலையும், அவருடைய தமையனராகிய ராமஸ்வாமி ஐயரின் தமிழ்ப் புலமையையும் இயல்புகளையும் பற்றி விரிவாகப் படிக்கலாம். வைத்தியநாதையர் 'மகா' என்னும்

பட்டம் பெற்றது, திருவாவடுதுறை யாதீனகர்த்த ராகப் பிரசித்திபெற்ற மேலகரம் ஸ்ரீ சுப்ரமணிய தேசிகரால் ஆதரிக்கப்பெற்றது, தலைவருடன் ஒற்றுமையாக இருந்து பழகியது முதலிய பல செய்திகளும் சம்பவங்களும் மிகவும் சுவை பயக்கும் படி இதில் எழுத்து மூலம் சித்திரிக்கப்பட்டுள்ளன. இவை "கலைமகள்" மூலம் வெளிவந்தன.

"புத்த சரித்திரம், பௌத்த தருமம், பௌத்த சங்கம்" என்ற புத்தகம் பௌத்த மதத்தைப் பற்றிச் சுருக்கமாகத் தெரிந்துகொள்வதற்கு உபயோகமானது. "மணிமேகலைக் கதைச்சுருக்கம்" எளிய வசனநடையில் எழுதப்பட்டிருப்பதுடன், மூலத்தைப் படிப்பதற்கு வழிகாட்டுகிறது.

"உதயணன் சரித்திரச் சுருக்கம்" பண்டைக் காலத்து அரசாட்சி முறை, நாடு நகரங்களின் அமைதிகள், நீதிகள், சிற்பம் முதலிய பலவகைக் கலைகளின் நுட்பங்களை உணர்த்துகிறது. உதயணனுடைய வீரம், யூகியின் தந்திரங்கள், வாஸவதத்தை, பத்மாவதி முதலிய பெண்மணிகளின் சிறந்த குணங்கள் ஆகியவை வெகு அழகாக வர்ணிக்கப்பட் டிருக்கின்றன. 'பெருங்கதை' முன்னும் பின்னும் குறையாக இருப்பதால், பிற நூல்களிலிருந்து கிடைத்த செய்திகளைப் பயன் படுத்தி இப்புத்தகம் எழுதப்பட்டது.

"நான் கண்டதும் கேட்டதும்", "புதியதும் பழையதும்", "நல்லுரைக்கோவை" (நான்கு பாகங்கள்), "நினைவு மஞ்சரி" (முதல்பாகம்) இவற்றில் சென்ற சில வருஷகாலமாகப் பிரதிமாதமும் "கலைமகள்" பத்திரிகையில் இவர் எழுதிவந்த கட்டுரைகளும், மற்றுமுள்ள பத்திரிகைகளில் அவ்வப்போது வெளியிட்டுவந்த வியாசங்களும் அச்சிடப்பட்டுள்ளன. இந்தப் புத்தகங்களில் காணப்படும் ஒவ்வொரு கட்டுரையும் அதிஸ்வாரஸ்யமானது; படித்து இன்புறத்தக்கது; நற்சுவை பொருந்தியது. ப்லதரப்பட்டவர்களைப் பற்றிய வரலாறுகள் பல அடங்கிய இப்புத்தங்களில் வாசகர்களது உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் விதமாய் வர்ணிக்கப்பட்ட பல கதைகளைக் காணலாம்.

"நல்லுரைக் கோவை"யின் நான்கு பாகங்களும், "நினைவு மஞ்சரி"யின் முதல் பாகமும், சரித்திரம், கதை, குணசித்திரம், ஜீவிய வரலாறு ஆராய்ச்சிக் கட்டுரை முதலியன அடங்கியவை அரியிலூர், உடையார்பாளையம் ஆகிய இடங்களின் சரித்திரம், அறிஞர் திலகமெனை விளங்கிய ஸ்ரீ பூண்டி ரங்கநாத முதலியாரின் வாழ்க்கை விவரம், ஸ்ரீ முத்துசாமி தீக்ஷிதரின் சிறப்பு, ஜஸ்டிஸ் ஸர் டி. முத்துசாமி ஐயரைப் பற்றிய ஒரு சம்பவம், தமிழ்நாட்டுப் பெண்பாலார், திவான் ஸர் ஏ. சேஷையா சாஸ்திரியாரின் பெருமை ஆகிய பல

விஷயங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இப்புத்தகங்களில் ஐயரவர்கள் தாம் ஏடு தேடியபோதும் அவற்றை ஆராய்ச்சிசெய்தபோதும் தமக்கேற்பட்ட அனுபவங்கள் சிலவற்றையும் குறிப்பிட்டிருக்கிறார்.

"மாணாக்கர் விளையாட்டுக்கள்" என்ற கட்டுரையில் கும்பகோணத்திலும் சென்னையிலும் தமிழ் ஆசிரியராக இருந்த நாளில் நிகழ்ந்த இருபது நிகழ்ச்சிகளைக் குறிப்பிட்டெழுதியிருப்பது நம்மைத் திரும்பத் திரும்பப் படிக்கத் தூண்டுகிறது; நம் உள்ளத்திலும் இன்பகரமான உணர்ச்சி உதயமாகிறது; ஆசிரியருடன் நாமும் சேர்ந்து அனுபவிக்கும் நிலையை எய்துகிறோம். வித்துவான் தியாகராஜ செட்டியாரின் சரிதத்தைக் "கலைமகள்" பத்திரிகையில் இவர் எழுதினார்.

1936-ஆம் வருஷம் ஜூன் மாதம் சென்னையில் நடைபெற்ற திருவள்ளுவர் திருநாள் கொண்டாட்டத்தில் இவர் தலைமை வகித்து, தமது கல்விப் பரப்பையும் விஷய ஞானத்தையும் புலப்படுத்தும் பிரசங்கமொன்றைப் புரிந்தார். இதுவும் புத்தக வடிவத்தில் வெளியாகியது.

"ஆனந்த விகடன்" பத்திரிகையில் 1940-ஆம் வருஷம் முதற்கொண்டு ஐயரவர்கள் தமது சுய சரிதத்தை எழுதிவந்தார். "என் சரித்திரத்"தில் 122 அத்தியாயங்களே வெளிவந்தன. தமிழர் ஆவலுடன் படித்து வந்த இந்த வரலாறு பூர்த்தி

பெறுவதற்குள் நம் பெரியார் சிவபதமடைந்தார். பூர்விகம், பிறப்பு முதல், பிதா பரலோக ப்ராப்தி வரைதான் நாம் படிக்கும் பாக்கியம்பெற்ருேம்.இந்த விவரங்களையும், அவர் எழுதிய மஹாவித்வானின் ஜீவிய சரிதத்தையும் நாம் படித்தோமாஞல், சென்ற நூற்ருண்டில் நம் தமிழ்நாடு இருந்த நிலைமையை யும், தமிழ்மொழி பெற்றிருந்த ஸ்தானத்தையும், வெகு சுலபமாக நாம் கண்டுகொள்ளலாம்.

மேற்குறிக்கப்பட்ட இந்தப் புத்தகங்கள் தமிழ் வசன நடை எவ்விதம் அமைந்திருக்க வேண்டும் என்பதைத் தமிழருக்குச் சுட்டிக் காட்டுகின்றன. தாம் பதிப்புத்துறையில் புகுந்த காலம் முதலேயே வசன நடையை இவர் கையாண்டிருக்கிருர். "சிந்தாமணி", "சிலப்பதிகாரம்", "மணிமேகலை", "பெருங்கதை" முதலிய நூல்களில் இவர் எழுதியிருக் கும் கதைச்சுருக்கம் இதற்கு அத்தாக்ஷி. ஆயினும் பல வருஷங்களுக்குமுன்னர். இவர் அனுசரித்த நடைக்கும், சமீப காலமாக அனுஷ்டித்துவந்த நடைக்கும் அதிக வித்தியாசம் இருக்கிறது. ஆரம் பத்தில் எழுதிய தமிழ் நீண்ட வாக்கியங்கள் அமைந்ததாக இருக்கிறது. சென்ற சில வருஷங்க ளாக எழுதி வந்த தமிழ் சர்வ சாதாரணமானது: ஆயினும் அழகும் இனிமையும் சிறப்பும் பொருந்தி யது. மிகவும் லகுவான நடை. படிப்பவர் திகைப் பதற்கு இடங்கொடாத வசனம். சிறு சிறு வாக்கி

யங்கள் ; மிகவும் எளிய வார்த்தைகள் : இவற்ருல் அலங்கரிக்கப்பட்டது இவரது தற்காலத் தமிழ். ஆகவே அபிமானிகள் அதிகரித்தனர் ; இலக்கிய வளர்ச்சிக்கும் இடமேற்பட்டது ; தமிழும் அபி விருத்தி அடைந்தது. முன்பு தமிழைப்பற்றிக் குறை கூறியவர்களும் அப்பாஷையினிடத்தில் குணமிருக்கிறது என்பதைக் காண ஹேது உண்டாகியது. ஆங்கிலத்திலேயே ஊன்றி இருந்தவர் களுக்கும் தாய்ப் பாஷையில் ஆர்வம் பிறக்கச் செய்தது இவருடைய தமிழ்தான்.

திருமலை திருப்பதி தேவஸ்தானக் கமிட்டியார் செவ்வைச் சூடுவார் என்ற மாதவபட்டர் எழுதிய "பாகவத"த்தைக் குறிப்புரையுடன் தயாரித்துக் கொடுக்கும்படியும் அதைத் தாங்கள் பிரசுரிக்கப் போவதாகவும் இவரிடம் தெரிவித்தனர். சுமார் நாலாயிரம் செய்யுட்களைக் கொண்ட இந்தக் கிரந்தத்தை இவர் அவர்களது விருப்பப்படியே பரிசோதித்துக் கொடுத்தார். இந்த நூல் இன்னும் வெளிவரவில்லை ; அச்சில் இருக்கிறது.

8

தினசரி அலுவல்

இருபதாம் பிராயத்தில் தொடங்கிய நம் தாக்ஷிண்ணத்ய கலாநிதியின் தொண்டு எண்பது ஆண்டுகளுக்கு அதிகமாகவே சிறப்பாக நடந்து வந்தது. உழைப்பே இவருக்கு உயிராக இருந்தது. உழைக்காவிட்டால் உற்சாகம் இல்லை. உழைக்க உழைக்கப் பரம திருப்தி. உழைப்புத்தான் இவருக்கு உணவு. உழைப்பே உள்ளத்தில் உறைந்திடும் உண்மைப் பொருள். உலகத்தில் இவரை எண்பத்தெட்டாண்டு வரையில் நிறுத்திவைத்த ஜீவநாடி உழைப்பு தான்!

இவ்விதம் ஆயுட்கால முழுவதும் உழைத்து வந்த இப்பெரியாரின் தினசரி வாழ்க்கை அபூர்வமானது. காலத்தின் அருமையை அறியாதவர்களுக்கு நல்ல அறிவு ஊட்டுவது. வாழ்நாளை வீணாக்குவோர்க்கு நல்வழி காட்டுவது.

விடியற்காலை சுமார் ஐந்து மணிக்கு ஐயரவர்கள் எழுந்துவிடுவார். பிறகு பல் தேய்த்து, ஸந்தியாவந்தனத்தை முடித்துவிட்டு, ஜபத்தில் அமர்ந்திருப்பார். இதற்கப்புறம் காபி அருந்திவிட்டு, வீட்டின் மெத்தையேறி, உட்கார்ந்து கொண்டு தேவாரத்தை மெல்லப் படிப்பார். படிக்கும்போதே குறிப்பெடுத்துக் கொள்வது இவரது இயல்பு. பிறகு அச்சாபீஸிலிருந்து வரும் "புரூப்கள்" முதலியவற்றைத் தம் மாணவர் ஒவ்வொருவரிடமும் கொடுத்து அவற்றைப் பரிசோதிக்கப் பண்ணுவார். கடைசியில் தாமும் அவற்றைப் பரிசீலிப்பார். இதற்கிடையில் சில சந்தேகங்களையும் தீர்த்துவைப்பார்.

பிறர் "ப்ரூப்" பார்க்கும்போது தாமும் வேலை செய்துகொண்டே இருப்பார். இதற்குள் காலை எட்டரை மணி ஆகிவிடும். அடுத்தபடியாகப் பதிப்பித்தற்குரிய வேறு நூல்களை வைத்துக் கொண்டு உடனிருப்பவர்களுடன் படித்து ஆராய்வார். 10 மணிக்கு ஸ்நானம் பண்ணி, தமது வேஷ்டிகளைத் தாமே தோய்த்து உலர்த்துவது வழக்கம். இடையில் யாராவது தம்மைப் பார்க்க வந்தால் அவர்களுடன் சற்றுநேரம் பேசிவிட்டு அவரை அனுப்பிவிடுவார். ஸ்நானம் முடிந்ததும் சிவபூஜை. தெய்வ வழிபாட்டுக்குப்பின் உணவு

அருந்துவார். சாப்பிடும்போது சுவையறிந்து நிதானமாக உண்ணுவதுடன், உணவு வகைளின் பக்குவத்தைச் சில சமயம் பக்கத்தில் இருப்பவரிடம் எடுத்துக் கூறுவதுண்டு. பதினேரு மணிக்குமேல் மறுபடியும் மாடியேறி நாலடியார், குறள் முதலிய நீதிநூல்களைப் படிக்கச்செய்து அதைக் கேட்டுக் கொண்டே இருப்பார்; அப்போது சிறிது நேரம் நித்திரையில் ஆழ்ந்துவிடுவார்.

பிறகு மாணுக்கருக்குப் பாடஞ் சொல்லுவார். பிற்பகல் ஒரு மணிக்குத் தூங்கியெழுந்ததும் காபி அருந்திவிட்டு, கம்பராமாயணத்தைப் படித்து ஆராய்வார். மூன்று மணிவரை இந்த வேலைதான் நடைபெறும். இதன் பின்னர் நற்றிணை முதலிய சங்க நூல்களைப் படிக்கச் செய்து, சதா கேட்டுக் கொண்டே குறிப்பெடுப்பார். மாலை 5 மணிக்குச் சரித்திரக் குறிப்புகள் எழுதுதலும், வருபவர்களுடன் சற்று அளவளாவுதலும் நடைபெறும். ஆறரை மணிக்கு ஸந்தியாவந்தனத்தை முடித்துக் கொள்வார். சில சமயம் கோவிலுக்குச் சென்று வருவதுண்டு. பிறகு இரவு ஏழு மணி முதல் எட்டரை மணி வரை மாணவர்களுக்குப் பாட போதனையை நடத்துவார். ஒன்பது மணியானதும் சாப்பிட்டுவிட்டுத் தாயுமானவர் பாடல் முதலியவற்றைப் படித்துவிட்டு உறங்கப்போவார். படுக்கப்

போகும்போது பக்தி நிறைந்த பாடல்களை இசையுடன் பாடுவதுண்டு.

இவர் புரிந்துவந்த தொண்டின் தன்மையை இவருடன் நெருங்கிப் பழகியவர்கள்தான் விவரிக்க முடியும். அத்தகையவர்களுள் தலைசிறந்து விளங்கும் "கலைமகள்" ஆசிரியர் வித்வான் கி. வா. ஜகந்நாதையர், தாம் நேரில் கண்டறிந்தவற்றைக் குறிப்பிட்டிருப்பது இவ்விடத்தில் இடம் பெறுவது அதி அவசியமாகும்.

"எந்தப் புஸ்தகத்தை எப்பொழுது படித்தாலும் பென்ஸிலும் குறிப்புப் புஸ்தகமும் இல்லாமல் படிப்பது அவர்கள் வழக்கமன்று. ஒரு பாட்டைப் படிக்கும்போது அதற்குள் ஆழ்ந்து முழுகி அதிலுள்ள விஷயங்களைத் தனியே பார்த்துக் குறிப்பதும், ஒரே மாதிரிக் கருத்துப் பிற நூல்களில் வந்திருந்தால் அதைக் குறித்துக்கொள்வதும், சந்தேகமாக இருந்தால் அதைத் தனியே குறித்துக் கொள்வதும் அவர்கள் வழக்கம். சந்தேகங்களைப் பின்னும் பின்னும் ஆராய்ந்து யோசித்து முடிவு செய்வார்கள். இல்லையானல் யாரேனும் வந்தால் கேட்பார்கள். உடனிருக்கும் எங்களுக்குச் சில சமயங்களில் மனத்துக்குள் கோபங்கூட உண்டாகும். 'இவருக்கு என்ன தெரியும்? இவரிடம் போய்ச் சந்தேகம் கேட்கிறார்களே!' என்று எரிச்சல் எரிச்சலாக வரும். ஐயரவர்களோ மிகவும் விநயமாக

வந்தவருடைய மனசுக்கு உவப்பான விஷயங்களைப் பேசிச் சந்தேகத்தைக் கேட்பார்கள். வந்தவருக்கு அந்த விஷயத்தின் வாசனை கூடத் தெரியாமல் இருக்கலாம். ஆனால் கௌரவத்தை விட்டுக் கொடுக்காமல் எதையாவது சொல்வார். ஐயரவர்கள் அதைக் குறித்துக் கொள்வார்கள். அந்தப் 'பரமகுரு' போனவுடன் நாங்கள் 'இவரிடம் சந்தேகம் கேட்பதில் என்ன லாபம் உண்டாயிற்று?' என்றால், 'லாபம் உடனே தெரியாது, லாபம் இல்லாவிட்டால் என்ன? நமக்கு நஷ்டம் ஒன்றுமில்லையே' என்பார்கள்."

[— கலைமகள், 1942 ஜூன் இதழ்]

அந்திய காலத்தில் இவர் நடந்துவந்தது இவ்விதம். தேகத்தில் வலிமை அதிகமிருந்த காலத்தில் இவர் இன்னும் எவ்வளவு அதிகம் உழைத்திருக்கக் கூடும் என்பதை இதிலிருந்து நாம் ஊஹிக்கலாம். கடைசி வரையில் இவர் தமது காரியத்திலேயே கண்ணாயிருந்தார்.

மாணவர்களுக்குப் பாடம் சொல்லிய முறையும் கவனிக்கத்தக்கது. இலக்கிய நூல்களைப் படிக்கும்போது, பாட்டைப் படிக்கச் சொல்லி, சீர் பிரிக்கச்செய்து, ஒவ்வொரு சீருக்கும் இலக்கணக் குறிப்பும் பொருளும் கேட்டுப் பிறகு தாமே கூறுவார். பிறகு அந்வயம் செய்யும்வகை கூறுவார். பதப்பொருள் கூறியபின்பு, சில அரிய பதங்களுக்கு விசேஷவுரை கூறுவார். இன்ன சொல் இவ்வாறு

ஆயிற்று என்று ஆதாரம் கூறுவார். ஒத்த கருத்துக்களுக்கு வேறு நூல்களிலிருந்து பாடல்களை எடுத்துக் கூறுவார். ஐயமான இடங்களில் சந்தேக அடையாளம் செய்யச் சொல்வார். பிறகு, எழுவாய் பயனிலை கேட்டு, முடிபுகூறச் செய்வார்; அப்பால் கருத்தைக் கூற வைப்பார். மீண்டும் ஒருமுறை பாட்டைப் படிக்கச்செய்து கேட்பார். நல்ல பாடல்களை மனனம் செய்யவேண்டும் என்று வற்புறுத்துவார்.

இலக்கண நூல்களைப் படிக்கும்போது, தாமே, முதலில் இலக்கண விஷயங்களை எடுத்துக் கூறிப் பிரசங்கம் செய்வது போல் விளங்கச் சொல்வார். பிறகு, சூத்திரங்களுக்குப் பொருள் கூறி உதாரணங்களுக்குள்ள பொருத்தத்தையும் விளக்குவார். உடனே கேள்விகள் கேட்டுப் பதில் கூறுவார், விசேஷவுரைகளுக்குத் தாமே புதிதாகச் சில நயங்களை எடுத்துக் கூறுவார். அரிய இலக்கண அமைப்புக்களை அவ்வப்பொழுது பாகுபடுத்திச் சொல்லிவருவார். சுவடியையோ புத்தகத்தையோ படித்துக்கொண்டு வரும்போது, நடுவில் சட்டென்று நிறுத்தி, "இது பிழையாக இருக்கிறது. இதைப் பரிசோதிக்கவேண்டும்" என்பார். பிறகு கவனம் செலுத்திப் பார்த்தால் சந்தேகத்தின் காரணத்தைக் காணமுடியும். இவருக்கிருந்த 'தமிழ் வாஸனை' ஆச்சர்யமான விசேஷமாகும்.

தம்மை வந்து பார்ப்பவர்பால் மிகுந்த மரியாதையோடு பேசிப் பழகுவார்; அவர்களுடன் அதிசயமாகப் பேசுவார்; குலம், கோத்திரம், பூர்வோத்திரம் முதலிய யாவற்றையும் விசாரிப்பார். தமக்குத் தெரிந்தவற்றையும் அவரிடம் எடுத்துச் சொல்வார். வந்தவர் தம்முடைய பூர்விகத்தைப் பற்றி அதிகம் அறிந்த சந்தோஷத்துடன் திரும்பிப் போவார். இவர் செய்திக் களஞ்சியம் எனச் சோபித்தார். மற்றுமொரு சிறப்பும் இவரிடம் உண்டு. அவசியமான அளவுக்குத்தான் அளவளாவு வார். அதிகம் பேசி, தமது காலத்தை விரயமாக்க மாட்டார். பேச்சில் ஒருபுறம் ஈடுபட்டிருந்தாலும் இவருக்குத் தமது வேலையில் இருந்த ஞாபகம் மறையாது. ஆதலால் இவருடன் பழகியவர் இவரைப் போற்றினர்; புகழைப் பாராட்டிப் பரப்பினர்.

9

நோக்கங்கள்

1933-ஆம் வருஷம் டிசம்பர் மாத இறுதியில் நம் மஹா மஹோபாத்தியாயர் சென்னை மாநகரில் நடந்த தமிழன்பர் மகாநாட்டின் வரவேற்புச் சபைத் தலைவராயிருந்தார். கல்வி மந்திரி ஸர் எஸ். குமாரசாமி ரெட்டியார் இதற்கு அக்ராஸனம் வகித்தார். அச்சமயம் இவர் சில உயர்தரக் கொள்கைகளை வெளியிட்டார். குறுகிய நோக்கம் ஒழிவதை விரும்பினார். இதில் இவருடைய குணாதிசயங்களை நாம் காணலாம்.

"மொழிபெயர்க்கும்போது பண்டைத் தமிழ் இலக்கியங்களில் கலைஞருக்கு உரியனவாக உள்ள சொற்களை இயன்ற வரையில் உபயோகித்துக் கொள்ளலாம். பிற பாஷைச் சொற்களை எடுத்தாளும்பொழுது தமிழுக்கேற்றபடி அவற்றின் உருவத்தை மாற்றிக்கொள்ளலாம். ஈரங்கி, உயில், பாதிரி, வங்கி முதலிய வார்த்தைகள் இங்ஙனமே

அமைக்கப்பட்டனவாகும். 'சுதேசமித்திரன்' முதலிய பத்திரிகைகளின் ஆசிரியர்களும், தனவைசியர்களும், யாழ்ப்பாணத்தார்களும் இவ்வகையில் கொண்டிருக்கும் முறையில் சிலவற்றை நாம் மேற்கொள்ளலாம்.

"பண்டைக்காலப் புலவர்கள் வடமொழிப் புலவர்களோடு மனங்கலந்து பழகி, அவர்களுடைய கருத்துக்களையும் சொற்களையும் தங்கள் நூல்களில் ஆண்டிருக்கிறார்கள். வடமொழியின் தொடர்பினால் தமிழ் மக்கள் எவ்வளவோ அரிய கருத்துக்களை அறிந்து பயனுற்றிருக்கிறார்கள். ஒரு பாஷை வேறு பாஷையின் தொடர்பினால் விரிவுறும். அதனால் அப்பாஷையின் அழகு ஒருபோதும் குறையாது."

என்ன உன்னதமான மன நிலை! பிற பாஷையைத் தூஷிக்கக் கூடாது என்பதற்கு எத்தகைய அத்தாக்ஷி! பிறகு இதே பிரசங்கத்தில் பாஷாபிமானம் குறைவு பட்டதற்குத் திண்ணைப் பள்ளிக்கூடங்களில் முறைப்படி பாடம் கேட்காததுதான் என்பதையும் இவர் குறிப்பிட்டார். தமிழ்ப் பாஷாபிமானிகளுக்கு அடியிற் கண்ட வாக்கியங்கள் உபயோகமாயிருக்கும் :

"தமிழ் வசன நடையை ஒருவகைப் படுத்த விரும்பும் அன்பர்கள் 'எழுதும் பாஷை வேறாக இருக்கிறதே' என்று எண்ணுவதிற் பயனில்லை. இயன்றவரையில் பிழையின்றி யாவருக்கும் விளங்கும் சொற்களையே எழுதும் பழக்கத்தை மேற்கொள்

வதே நல்ல முறையாகும்........பேசினாலும் எழுதினாலும் கருத்தை அறிவிக்கும் நோக்கத்தை முக்கியமாகக் கொள்ளவேண்டுமேயன்றிக் கடினநடையைக் கைக்கொள்ளுதல் கூடாது. கொண்டால் 'தமிழே கடினமானது' என்ற எண்ணம் தமிழ் மக்களுக்கு உண்டாகிவிடும்.

"தமிழ் நாட்டார் பேசும் போதும் எழுதும் போதும் தமிழ்ப் பாஷையையே உபயோகிக்கவேண்டும். ஆங்கிலம் அறிந்தவர்களிற் பெரும்பாலோர் ஆங்கிலத்திலே நினைக்கிறார்கள். அவர்களால் ஆங்கிலச் சொற்கள் கலவாமல் பேச முடியவில்லை. இத்தகைய நிலை ஒரு பெருங் குறையல்லவா?"

இக்குறையை நீக்கவே மஹா மஹோபாத்தியாயர் வாழ்நாள் முழுதும் உழைத்தார். காலத்தின் குறிகள் இவருக்குத் திருப்தி தந்தன. மனோரதமும் சித்திபெற்றது.

1937-ஆம் வருஷம் மார்ச்சு மாதம் பாரதீய ஸாஹித்ய பரிஷத்தின் முதலாவது மகாநாட்டில் இவர் வரவேற்புப் பிரசங்கத்தைப் புரிந்தார். இலக்கிய வளர்ச்சி எவ்விதம் உருப்பெற வேண்டும் என்பதைச் சூசிப்பித்தார்; பாதையை வகுத்துக் கொடுத்தார்.

"பிற்காலத்து நூல்களில் வரவர உயர்வு நவிற்சியும் ஸ்வபாவ விரோதமாகிய வருணனைகளும், அளவுக்கு மேற்பட்ட சிருங்காரமும், விரோத உணர்ச்

சியை உண்டாக்கும் மத விஷயங்களும் புகுந்து ஒற்றுமைக்குப் பங்கம் விளைவித்தன. இனி நூல் செய்யப் புகுபவர் அவற்றை நீக்கவேண்டும். பழைய நூல்களில் இருந்தால் அவற்றை இலக்கிய இன்பத் துக்காகப் பாதுகாத்துக் கற்றல் வேண்டும்.

"புது இலக்கியங்கள் இயற்றுவதற்கு எவ் வளவோ துறைகள் இருக்கின்றன. பல பாஷை களிலுள்ள விஷயங்களை அறிவதனுல் இத்துறைகள் இன்னும் விரிவடையும். நாளடைவில் மனிதர்க ளுடைய வாழ்க்கை நிலை மாறுபடுகின்றது. அதற் கேற்பக் கொள்கைகளும் மாறுபடுகின்றன. அக் கொள்கைகளுக்கேற்றபடி இலக்கியங்களும் நல் வழியில் மாறவேண்டியது இயல்பேயாகும்."

சிறப்புக்குரிய காரியத்தைச் செய்து வைத்த இப்பெரியார் தமது வாழ்க்கையில் கொண்ட நோக் கங்கள் மிகவும் உயர்ந்தவை. இவர் மேன்மையுற் றதன் சூட்சுமத்தையும் அவை சூசிப்பிக்கின்றன. 1935-ஆம் வருஷம் ஏப்ரல் மாதம் தமது சதாபிஷேக விழாவின்போது "கலைமகள்" வாயிலாக இவர் தம் நோக்கங்களை உலகத்தோருக்கு வெளிப் படுத்தினர்.

"என்னுடைய வாழ்வின் நோக்கமெல்லாம் பெரும்பாலும் தமிழ்த் தொடர்புடையதுதான். தமிழ் நூல்களை ஆழ்ந்து பயிலவேண்டும். பலமுறை பயின்றுல்தான் உண்மை புலப்படும். முதலிலே

கடினமாகத் தோன்றினாலும் பலகால் பயின்றால் வரவரத் தெளிவுண்டாகும். ஒரு நூலிலுள்ள சொற் சுவை பொருட்சுவைகளை அனுபவித்துப் படிக்க வேண்டும். அவற்றைப் பிறரும் அறியும்வண்ணம் எளிய நடையிற் சொல்லவும் எழுதவும் வேண்டும்.

"பழைய நூல்களையும் உரைகளையும் தெளி வாக ஆராய்ந்து உண்மைக்கருத்தை அறியவேண் டும். தெரியாதவற்றைத் தெரிந்தவையாகக் காட்ட லாகாது. அவற்றைப் பாதுகாக்க வேண்டும். புதிய கருத்துக்களை அவற்றில் ஏற்றிவிடலாகாது. அவசிய மில்லாத கருத்துக்களை மேற்கொண்டு நூலையோ உரையையோ எழுதிப் பிறரை வற்புறுத்தி மகிழச் செய்தல் நலமன்று. பழைய நூல்களில் சொற் குற்றம் இருப்பதாகத் தோற்றினால் அங்ஙனம் அமைந்ததற்குக் காரணம் என்னவென்று ஆராய வேண்டும். நமக்கு விளங்காததனால் ஒன்றைக் குற்ற மென்று துணிந்துவிடுவதால் பயன் இல்லை. நாமே நன்றாக அறிந்துவிட்டோமென்று மதித்து அய லாரைத் தாழ்வாக நினைத்தலும் பேசுதலும் கூடா. பிறர் எழுதியுள்ளவற்றை அவமதியாமல்,குணமான பாகங்களை அறிந்து உபயோகித்துக் கொள்ள வேண்டும்.

"கற்றவர்களிடத்தில் முறையாகப் பாடங் கேட்கவேண்டும். கேட்டவற்றைச் சிந்தித்து முறை யாகப் பாடஞ் சொல்லவேண்டும். அதைவிடப் பெரிய உபகாரம் வேறு இல்லை. எப்பொழுதும் படித்துக்கொண்டு இருக்கவேண்டும்.

"முன்னோர் ஒழுகிவந்த முறையைப் பெரும்பாலும் பின்பற்றுதலே மன ஒருமைக்கு வழியாகும்" புதுக்கொள்கைகள், புதிய மதங்கள். புதிய தெய்வ வழிபாடு முதலியவற்றை ஆராய்ச்சியின்றி மேற்கொண்டால் அவை நம் மன இயல்போடு பொருந்துவதற்குப் பலகாலம் செல்லும்; ஜனங்களிடை ஒற்றுமையும் கடைப்பிடியும் தவறிவிடும். பிறமதங்களையும் தெய்வங்களையும் தூஷித்தல் கூடாது. அயல் மதக் கொள்கைகளையும் வேறு பிற வழியிலுள்ள அரிய செய்திகளையும் அறிந்துவைத்தல் அறிவை விரிவுறச் செய்யும்.

"எந்தச்சமயத்தாரோடும் எந்தத் தேசத்தாரோடும் சகோதர பாவத்துடன் ஒற்றுமையாயிருந்து காலங் கழிக்கவேண்டும்.

"மேற்கொண்ட காரியத்தைச் சிறிது சிறிதாகப் பல நாள் ஆராய்ந்து திருத்தமாக நிறைவேற்ற வேண்டும். முயற்சியிடையே யாரேனும் அவமதிக்க நேர்ந்தால் அதனைப் பொருட்படுத்தாமல் காரியத்தைச் செய்துவரவேண்டும். நம்முடைய நெஞ்சறிய நற்காரியத்தை மேற்கொண்டு கடமையைச் செய்து வந்தால் இறைவன் அருளால் முடிவில் நன்மையே கிடைக்கும் என்பதில் ஐயமில்லை. செய்யும் காரியத்தைப் பயனுல் தெரிவிக்க வேண்டுமேயன்றித் தொடங்கியது முதல், 'இப்படிச் செய்தேன், அப்படிச் செய்தேன்' என்று தாமே பாராட்டிப் பேசுதல் உயர்வன்று.

"பிறர் செய்த குற்றத்தை மறந்துவிடுதலும் பலரிடையே எடுத்துக்கூருமையும் நன்மை பயக்கும். சிற்றுதவி செய்தாரையும் மறவாமல் என்றும் நன்றி பாராட்டுதலினின்றும் தவறலாகாது. மனிதனை மனிதனுகச் செய்வது நன்றியறிவேயாகும்.

"முதியவர்கள் படியாதவர்களாயினும் அவர்களுடைய பழக்கம் நன்மைகளை உண்டாக்கும். திருவாவடுதுறை யாதீன கர்த்தராக விளங்கிய மேலகரம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரவர்கள் இதனை அடிக்கடி வற்புறுத்திக் கூறுவார்கள்.

"நன்மையும் தீமையும் கடவுள் நம் வினைக்கேற்ப அமைப்பன வென்று எண்ண வேண்டும். ஆதலின் தீமை செய்தா ரென்று நெஞ்சிற் பகையுற்று யாரையும் கடிதல் ஆகாது. தெய்வம் நன்மையையே உண்டாக்கும் என்ற நம்பிக்கையை உறுதிப்படுத்த வேண்டும். அது பல விதமான இடையூறுகளை எளிதில் வெல்லும் வன்மையை அளிக்கும்.

"பெரியோர் வாயிலாகவும் அனுபவத்தினுலும் அமைந்த நோக்கங்கள் பலவற்றுள் இவை சில. இவற்றின்படி நடக்கவே நான் முயன்றுகொண்டு வருகிறேன்.

" இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
துன்பந் துடைத்தூன்றுந் தூண்."

இவை உன்னதமான நோக்கங்கள். இந்த நோக்கங்களைக் கடைப்பிடித்து இவர் நடந்தார் என்பதற்கு இவரது வாழ்க்கை பிரகாசித்ததைவிட

வேறு என்ன அத்தாக்ஷி வேண்டும்? தமிழ்நாட்டின் தவப்பயனுய்ப் பிறந்த இவர்களது உபதேசம் எல்லோரும் பின்பற்றக் கூடியது. எவ்வளவு தூரம் பின்பற்றுகிருர்களோ அவ்வளவுக்கு வாழ்க்கை பயன்பெறும். கருத்தைக் காரியத்தில் காட்டுவதுதான் மஹாபுருஷரின் லக்ஷணம். தமிழ்ப் பாஷையைச் சிறப்பிக்கவே உதித்த இவ்வுத்தமர் மஹா புருஷர்தான். மஹாபுருஷரின் மூல மந்திரம் மக்களுக்கு மேலான ஹிதோபதேசம்.

"இருந்தமிழே உன்னுல் இருந்தேன் இமையோர்
விருந்தமிழ்தம் என்ருலும் வேண்டேன் - திருந்த
உதிப்பித்த பன்னூல் ஒளிர அடியேன்
பதிப்பிக்க வேகடைக்கண் பார்."

இச் செய்யுளைத் தமது ஜீவாதாரமாகக் கொண்டு, அந்தியகாலம் வரை தமிழ்த்தாயின் சேவையில் ஈடுபட்ட இத் தனிப்பெருந் தமிழரைத் தமிழ்நாடு எந்நாளும் மறக்கமுடியாது.

மேலும் சில ஆண்டுகள் வாழ்ந்து, தம் மஹத்தான முயற்சி காரணமாகச் சேகரித்துக் குவித்து வைத்திருந்த பழையஏட்டுச்சுவடிகள் முழுவதையும் அச்சிட ஐயரவர்கள் விரும்பினுர். காலக்கிரமத்தில் இவரது தேகக்கட்டு தளர்ந்து வந்ததாயினும் அதைக் கொஞ்சமும் பொருட்படுத்தவே இல்லை. சிவபக்தியென்னும் பெருஞ் செல்வம் படைத்த நம் ஐயரவர்கள் காலனைக் கண்டும் கதி கலங்கவில்லை.

சில மாதங்களுக்குமுன் ஒரு நாள் பிற்பகல் திராவிட வித்யாபூஷணத்தைத் தரிசிக்கத் திருவேட்டீசுவரன்பேட்டை, "தியாகராஜ விலாஸ்"த்திற்குப் போயிருந்தேன். கொஞ்ச நேரம் இருவரும் பேசிக்கொண்டிருந்தோம். மிகுந்த ப்ரீதியோடு என்னுடன் அளவளாவினர். குடும்ப சௌக்கியத்தைப் பற்றி விசாரித்தார். என் பாட்டனரான திவான் பஹதூர் ஸ்ரீநிவாஸ ராகவையங்காரைப் பற்றிச் சில விஷயங்களைக் கூறி என்னை மிகவும் மகிழ்வித்தார்: எங்கள் சொந்த ஊராகிய இன்னம்பூரின் மான்மியத்தையும் விவரித்தார். கடைசியில் நான் ஐயரவர்களை ஒரு கேள்வி கேட்டேன்: "தங்களுக்கு மறு பிறவி வாய்த்தால் என்ன செய்வீர்கள்? எந்தக் காரியத்தை நீங்கள் பிரதானமாக மேற்கொள்வீர்கள்?" என்றேன். தாமதமின்றிப் பதில் கிடைத்தது. "நீங்கள் கேட்ட கேள்வி மிகவும் சரியானதுதான். மீண்டும் இம் மண்டலத்தில் பிறக்க நான் ஆசைப்படுகிறேன். பிறவியை மறுமுறை ஒருவர் வேண்டுவாரா என்று நீங்கள் ஆச்சர்யப்படலாம். காரணம் இதுதான்: எனக்கு இப்போது வயது எண்பத்தாறுக்குமேல் ஆகிவிட்டது. எனக்கு மிஞ்சியிருக்கும் காலத்தில் நான் உத்தேசித்திருக்கும் காரியம் பூராவையும் பூர்த்தி பண்ணமுடியாது. ஆகையால் திரும்பவும் ஜன்மம் எடுத்து நான் இப்போது விட்டுவிட்டுப் போகும் பணியை நிறைவேற்றி வைக்க

ஆவலுள்ளவனுயிருக்கிறேன். தமிழுக்காகவே தான் நான் மறு பிறவியை விரும்புகிறேன்." இவ்விதம் தம் மனநிலையை என்னிடம் எடுத்துக் கூறிவிட்டு தம்முள் தோன்றிய ஒரு சிறிய சந்தேகத்தையும் எனக்குத் தெளிவுபடுத்தினுர். "நான் ஓர் இடத்தில் பிறந்து இதுகாறும் எழுதிவைத்திருக்கும் குறிப்புகள் வேறோர் இடத்தில் சிக்கிவிட்டால் என்ன செய்வது?" என்ருர் இப்பெரியார். "பூர்வ ஜன்மவாஸனை கட்டாயம் தங்களுக்கு உதவி செய்யும். உங்கள் மனோபீஷ்டம் வீண்போகாது" என்று நான் கூறினேன். ஐயரவர்களுக்கு உள்ளம் குளிர்ந்தது. இதேமாதிரி சில நிமிஷநேரம் சம்பாஷித்துவிட்டு நானும் ஆத்மத் திருப்தியுடன் திரும்பினேன்.

இப்பெரியாரின் ப்ரத்தியக்ஷ சொரூபம் மறையலாம்; ஆனல் புகழ் மறையாது. தமிழ் மொழியின் உத்தாரணத்திற்காகவே உதித்தவர் இவர்; ஆகவே இவர் சிருஷ்டித்துள்ள சக்தி தாய்ப் பாஷைக்கு நீடூழிகாலம் ஆக்கமளித்துக் கொண்டேபோகும்: துருப்பிடித்துக் கெட்டிருந்த யந்திரத்திற்கு விசையூட்டிவிட்டார்; இனி நாம் கவலைப்பட இடமில்லை - இவ்வாறெல்லாம் உடனே எண்ணினேன். ஒரே ஒரு நோக்கத்துடன் தமது வாழ்க்கையை நடத்திவந்த இப்பெரியார் திரும்பவும் அவதரிப்பார்! தாம் பாதுகாத்த தமிழ்மொழி பாதகமடையாமல் இருக்கச்

செய்வார்! அது க்ஷீணிக்காமல் க்ஷேமமுற வழி காட்டுவார்! கலாநிதியாயிருப்பவர் கர்மயோகியாக வும் இருப்பாரானுல் இதைக்காட்டிலும் மேலான அதிருஷ்டம் நாட்டிற்கு உண்டோ? இவ்விரு சிறப்புகளும் அமைந்து சிகரத்தின் மேலிருக்கும் ஜோதிபோல் சாமிநாதையரவர்கள் சோபித்தார்.

"அவர்கள் 87 வருஷங்கள் வாழ்ந்தார்கள். 870 வருஷங்கள் முயன்ருலும் செயற்கரிய செயல்களை அவர்கள் நிறைவேற்றியிருக்கிருர்கள். தமிழ்மொழி யின் சரித்திரத்தில் அவர்களுடைய வாழ்க்கைக் காலம் ஒரு தனியுகமாகக் கணிப்பதற்குரியது" என்கிருர் "கலைமகள்" பத்திரிகாசிரியர். மிகவும் பொருத்தமாயமைந்த வாக்கியங்கள்; உள்ளத்து உணர்ச்சியை உண்மையாய்ப் பிரதிபிம்பிக்கின்றன!

தமிழ்க் களஞ்சியம்

மஹா மஹோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் இளமையிலேயே நூற் பதிப்புத் தொண்டைத் தொடங்கி விட்டார். பழைய நூல்களைத் தேடி எடுத்துப் பதிப்பிக்கும் முயற்சியை 1887-ஆம் வருஷம் மேற்கொண்டா லும் அதற்கு ஒன்பது வருஷத்திற்கு முன்பே அவ ருடைய முதல் வெளியீடு பிரசுரமாயிற்று. திருவா வடுதுறை யாதீனத்தில் இருந்தபோதே, 1878-ஆம் வருஷத்தில் **வேணுவனலிங்க விலாஸச் சிறப்பு** என்ற நூலை இவர் அச்சிட்டார். அதில் பல வித்வான்களுடைய பாடல்கள் அடங்கியுள்ளன. அதன்பின் 1883-ஆம் வருஷம் **திருக்குடந்தைப் புராணம்** வெளிப்பட்டது.

இவர் பதிப்பித்த நூல்கள் பலவகைப்படுவன. சங்க நூல்கள், தமிழ்ப் பழங் காவியங்கள், புராணங் கள், பிரபந்தங்கள், இலக்கணங்கள் என்று ஒரு வாறு அவற்றை வகைப்படுத்தலாம்.

சங்க நூல்களில் **பத்துப்பாட்டு** முழுவதும் நச்சி னார்க்கினியருடைய உரையோடு 1889-ஆம் வருஷம் இவராற் பதிப்பிக்கப்பெற்றது. பல்வேறு புலவர் களால் இயற்றப்பட்ட பெரிய பாட்டுக்கள் பத்து இதில் உள்ளன. இதன் முதற்பாட்டுத்தான் **திருமுருகாற்றுப்படை**. இந்தப் பத்துப்பாட்டை இவர் வெளியிடும்போது மூலமுள்ள ஏட்டுச் சுவடி கிடைக்கவில்லை. உரையிலே கண்ட மூலத்தின் பகுதிகளைச் சேர்த்துச் சேர்த்து ஒழுங்குபடுத்திக் கொண்டார். இப்போது இந்தப் பத்துப் பாட்டி லிருந்து ஒவ்வொரு பாட்டை, பி. ஏ., முதலிய வகுப்புக்களுக்குப் பாடமாக வைக்கிறார்கள்.

எட்டுத்தொகை யென்னும் தொகுதி சங்க காலத்து நூல்கள் எட்டு அடங்கியது. அந்த எட்டில் ஐந்து இவரால் வெளியிடப்பட்டன. 1894-ஆம் வருஷம் **புறநானூறு** தமிழுலகத்திற்குக் கிடைத்தது. சங்க காலத்தில் தமிழ்நாடு எப்படி இருந்ததென்பதைத் தெரிந்து கொள்ளுவதற்கு ஏற்ற கண்ணாடியாக இருப்பது அந்த நூல். அதனை வெளியிட்ட பின்னர்த் தமிழ் நாட்டில் அதிலிருந்து கிளைத்த புஸ்தகங்கள் பல. பள்ளிக்கூடப் பிள்ளை களுக்கு வேண்டியபடி அந்நூலிற் கண்ட செய்தி களைக் கோத்துப் பலர் பல புஸ்தகங்களை எழுதி னர். இவ்வளவுக்கும் ஸ்ரீ சாமிநாதையர் எழுதிய ஆராய்ச்சிக் குறிப்புக்கள் மிகவும் உபயோகமாயின

வென்று சொல்ல வேண்டுவதில்லை. புறநானூற்றில் பெரும் பகுதிக்குப் பழைய உரை ஒன்று உண்டு. மேலேயுள்ள பகுதிக்கு ஐயரவர்கள் எழுதிய குறிப்புரை வழிகாட்டியாக உதவுகிறது.

ஐங்குறுநூறு என்பது எட்டுத் தொகையில் மற்ெறாரு நூல். அதில் ஐந்து புலவர்கள் தனித்தனியே இயற்றிய நூறு நூறு பாடல்கள் இருக்கின்றன. தமிழ் இலக்கணத்தில் வியவகரிக்கப்பட்ட அகப் பொருள் சம்பந்தமான நூல் அது. அதற்குப் பழைய உரை ஒன்று உண்டு. மூலமும் உரையும் சேர்ந்த புஸ்தகம் 1903-ஆம் வருஷம் பதிப்பிக்கப் பட்டது.

பதிற்றுப்பத்து என்பதும் எட்டுத்தொகையைச் சேர்ந்தது; இவரால் வெளியிடப்பட்டது. சேர அரசர்கள் பத்துப்பேர்கள் விஷயமாகப் பத்துப் புலவர்கள் பாடிய நூறு பாடல்கள் அடங்கியது. இதற்கும் பழைய உரை ஒன்று இருக்கிறது. 1904-ஆம் வருஷம் இது பதிப்பிக்கப்பட்டது. சென்ற வருஷம் தெளிவான குறிப்புரையுடன் இதன் மூன்றும் பதிப்பு வெளிவந்திருக்கிறது.

பரிபாடல் என்னும் தொகைநூல் பல துதிப் பாடல்களை உடையது. பிரஸித்தரான பரிமேலழகர் இதற்கு உரை எழுதியிருக்கிறார். தமிழ் நாட்டில் தெய்வ உணர்ச்சியும், வழிபாட்டு வகைகளும், ஸ்தலங்களின் பெருமையும் எப்படி இருந்தன

என்பதை இந்த நூலால் உணரலாம். 1918-ஆம் வருஷம் முதல் முதலாக வெளிவந்தது ; இந்த நூலின் இரண்டாம் பதிப்பில் இத்தமிழ்ப் பெரியார் பாடல்களின் பொருட் சுருக்கத்தையும் சேர்த்து வெளியிட்டிருக்கிறார்.

குறுந்தொகை என்ற நூலை 1937-ஆம் வருஷத்தில் இவர் வெளியிட்டார். மிகவும் விசேஷமான உழைப்பை மேற்கொண்டு அப்பதிப்பை இவர் ஸித்தம் செய்தார். இவர் தம் முதுமைப் பிராயத்தில் செய்த மகோன்னதமான வேலைகளில் குறுந்தொகை வெளியீடும் ஒன்று. தமிழை ஓரளவு படிக்கத் தெரிந்த யாரும் அந்தப் புஸ்தகத்தைப் படிக்கலாம் ; படித்து மேலும் பல புஸ்தகங்களைப் படித்தறியும் உணர்ச்சியைப் பெறலாம். பதவுரை, விசேடவுரை, ஒப்புமைப் பகுதி முதலிய பலவகை அங்கங்களோடு நூறு பக்கமுள்ள ஆராய்ச்சியும் அப்பதிப்பில் உள்ளன. அதன் உரையிலிருந்து, ஐயரவர்கள் பழங்காலத்து உரை யாசிரியர்களோடு சேர்த்து எண்ணுதற்குரியவ ரென்பதும், நவீன ஆராய்ச்சியாளர்களில் முன்னணியில் நிற்கும் திறமை வாய்ந்தவரென்பதும் புலப்படும்.

பழங் காவியங்கள் நான்கை இந்தத் தாக்ஷிணாத்ய கலாநிதி நமக்குத் தானம் செய்திருக்கிறார். தமிழில் ஐம்பெருங்காப்பியங்களென்று சொல்லப் படுபவை **சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம்,**

மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்னும் ஐந்துமாகும். இவ்வைந்தில் பின்னவை இரண்டும் கிடைக்கவில்லை. முன்னவை மூன்றையும் இவர் வெளியிட்டார்.

சீவக சிந்தாமணி இவருடைய புகழை அரும்பச் செய்தது. ஜைன காவியமாகிய அந்தப் புஸ்தகத்தைப் பார்த்த ஜைனர்கள் இவரை மிகவும் விசேஷமாகப் பாராட்டினார்கள். அந்த நூலைப் பின்பற்றிக் கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர் சில மார்க்கங்களைத் தம் காவியத்தில் அமைத்துக் கொண்டாராம். நச்சினார்க்கினியர் உரையோடுள்ள அந்த நூலின் நான்காம் பதிப்பு நடைபெற்று வரும் போது இவர் உலக வாழ்வை நீத்தார். சீவக சிந்தாமணியில் ஆரம்பித்த இவரது தமிழ்த் தொண்டு சீவகசிந்தாமணியிலே முடிவுபெற்றது விதியினாற் கூட்டுவிக்கப்பெற்ற ஒற்றுமைபோலும்.

சீவகசிந்தாமணியின் சுருக்கங்கள் ஆங்கிலத்திலும் பிரஞ்சு பாஷையிலும் வெளிவந்திருக்கிறதாகத் தெரிகிறது. இந்த நூலைப் பதிப்பிக்கும் விஷயத்தில் இவர் பட்ட பாடு மிகவும் ரஸமாக இவருடைய ஜீவியசரித்திரத்தில் பல அத்தியாயங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

1892-ஆம் வருஷத்தில் **சிலப்பதிகாரமும்** *1898*-இல் **மணிமேகலையும்** தமிழர்களுக்குக்

கிடைத்தன. இவ்விரண்டும் இப்போது ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப் பட்டிருக்கின்றன.

சிலப்பதிகாரத்தில் இயல், இசை, நாடகம் என்னும் மூன்று தமிழ்களையும் பற்றிய அருமையான விஷயங்கள் இருக்கின்றன. இந்த நூல் வெளிவந்த பிறகுதான் கடைச்சங்க காலத்தை நிச்சயிக்கும் வழி பிறந்தது. இதற்கு அரும்பதவுரை யொன்றும் அடியார்க்கு நல்லார் எழுதிய உரையொன்றும் இருக்கின்றன. அந்த உரைகளில் வரும் மேற்கோள்களிலிருந்து தமிழில் எவ்வளவு கலை நூல்கள் பழங்காலத்தில் இருந்தனவென்பதை உணரலாம். சங்கீதம், நாட்டியம், யோகம், ஜோதிஷம் முதலியவை சம்பந்தமான பல மேற்கோள்களை அடியார்க்கு நல்லார் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

இந்தப் புஸ்தகத்தை வெளியிடும்போது வெளிப்படாமலுள்ள பல தமிழ் இசைநூல்களையும் இவர் ஆராய்ச்சி செய்தார்.

மணிமேகலை பௌத்தமத நூல். அதன் பொருளைத் தெரிந்து கொள்வதற்கு ஐயரவர்கள் பல பௌத்தமத நூல்களை ஆராய்ந்தறிய வேண்டியிருந்தது. தமிழில் வெளிவந்த பௌத்த காவியம் அந்தப் புஸ்தகம் ஒன்றே.

பெருங்கதை யென்பது ஒரு சிறந்த தமிழ்க் காவியம். அதன் நடை சிறிது கடினமானது.

கொங்குவேள் என்ற ஜமீன்தார் அதை இயற்றியிருக்கிறார். அது முதலும் கடைசியும் இல்லாமல் ஐயரவர்களிடம் கிடைத்தது. அதைச் செப்பஞ் செய்து 1924-ஆம் வருஷம் வெளியிட்டார். அதற்கு ஒரு குறிப்புரையும் எழுதியிருக்கிறார்.

இவை தமிழ் நாட்டின் பழங்காலத்து நாகரிகத்தை விளக்கும் நூல்கள்.

ஐயரவர்கள் பல புராணங்களை வெளியிட்டிருக்கிறார். தமிழ் நாட்டில் நெடுங்காலமாக வழங்கி வரும் பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணத்துக்கு முன்பு ஒரு **பழைய திருவிளையாடல்** உண்டு. பெரும்பற்றப் புலியூர் நம்பியென்பவர் அதன் ஆசிரியர். ஐயரவர்களால் மீட்டும் உயிர் பெற்ற நூல்களில் அதுவும் ஒன்று. அதன் முகவுரை ஸ்தல சம்பந்தமான பல விஷயங்களை எடுத்துக் கூறுவது.

வில்லைப் புராணம் என்பது வில்வநல்லூர் என்னும் க்ஷேத்ரத்தைப் பற்றியது. அதைப் பதிப்பிக்கும்போது பிரெஞ்சு தேசத்திலிருந்து ஒருவர் ஓர் ஏட்டுப் பிரதியை அனுப்பினார்.

திருத்தணிகைக் கந்தப்பையர் இயற்றிய **தணிகாசல புராணமும், பழைய திருக்காளத்திப் புராணமும்** முதல் முறையாக இப்பெரியார் கைப்பட்டு விளங்கலாயின.

இவர் தம்முடைய குருவாகிய ஸ்ரீ மீனுட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய பல புராணங்களை அச்சியற்றியிருக்கிறுர். 1883-ஆம் வருஷத்திலேயே திருக்குடந்தைப் புராணம் வெளியாயிற்று. திருப்பெருந்துறைப் புராணம், வீரவனப் புராணம், சூரைமாநகர்ப் புராணம், தனியூர்ப் புராணம், மண்ணிப்படிக்கரைப் புராணம், விளத்தொட்டிப் புராணம், ஆற்றூர்ப் புராணம், தியாகராச லீலை என்னும் புராணங்கள் பின்பு வெளிவந்தவை.

தமிழ்ப் பிரபந்தங்களை யாவரும் படித்துப் பயனடைய வேண்டுமென்பது இவர் அபிலாஷை. இவர் பதிப்புமுறை பிரபந்தத்தில் பிரியமில்லாதவர்களுக்கும் ஒரு பிரியத்தை உண்டாக்கும். நூற் கருத்தையும் விசேஷங்களையும் வெளிப்படுத்தும் அழகான முகவுரை, நூலாசிரியர் வரலாறு, குறிப்புரை முதலியவற்றை அங்கமாக இணைத்துப் பல வகையான சிறு நூல்கள் இவர் வெளியீடுகளாக வந்திருக்கின்றன.

கவிச் சக்கரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தர் இயற்றிய தக்கயாகப்பரணியும் அதன் பழைய உரையும் பலவகை ஆராய்ச்சிக் குறிப்புக்களோடு இவரால் வெளிவந்தன. இவர் பதிப்பித்த மற்ருெரு பரணி பாசவதைப் பரணியாகும். அந்தாதிகளில் திருமயிலைத்திரிபந்தாதி, திருமயிலை யமக அந்தாதி, சங்கர நயினர் கோயிலந்தாதி என்னும் மூன்று

அந்தாதிகளும், திருக்காளத்தி நாதருலா, திருப் பூவண நாதருலா, தேவையுலா, திருவாரூருலா, மதுரைச் சோக்கநாதருலா, சங்கரலிங்க உலா, திருஇலஞ்சி முருகனுலா, திருக்கழுக்குன்றத்துலா, கடம்பர்கோயிலுலா, தஞ்சைப் பெருவுடையாருலா என்னும் பத்து உலாக்களும், திருவாவடுதுறைக் கோவை, சீகாழிக்கோவை, திருவாரூர்க்கோவை, பழமலைக் கோவை, கலைசைக்கோவை, சிராமலைக் கோவை, கோடீச்சுரக் கோவை என்னும் ஏழு கோவைகளும், கச்சி ஆனந்த ருத்திரேசர் வண்டு விடு தூது, மதுரைச் சொக்கநாதர் தமிழ்விடு தூது, பத்மகிரிநாதர் தென்றல்விடு தூது, மான்விடு தூது, அழகர் கிள்ளைவிடு தூது, புகையிலைவிடு தூது என்ற ஆறு தூதுகளும், சரபேந்திர பூபாலர் குறவஞ்சி, திருமலையாண்டவர் குறவஞ்சி, சிவசிவ வெண்பா, திருக்கழுக்குன்றச் சிலேடை வெண்பா, திருக்குற்றாலச் சிலேடை வெண்பா, திருப்பாதிரிப் புலியூர்க் கலம்பகம், திருக்காளத்திநாதர் இட்ட காமிய மாலை, மகரநெடுங்குழைக்காதர் பாமாலை, வலிவல் மும்மணிக்கோவை, மதுரைச் சொக்க நாதர் மும்மணிக்கோவை, பழனிப் பிள்ளைத்தமிழ் என்னும் பிரபந்தங்களும், ஸ்ரீ குமரகுருபர ஸ்வாமி கள், ஸ்ரீசிவக்கொழுந்து தேசிகர், ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள், ஸ்ரீ தியாகராச செட்டியார் ஆகியோர் இயற்றிய பிரபந்தத் திரட்டுக்களும், உதயண குமார காவியமும் வெளிப்படுத்தினர்.

இவர் சில இலக்கண நூல்களையும் பதிப்பித்திருக்கிறார். தமிழ்நாட்டில் நெடுங்காலமாகத் தமிழ் வித்தியார்த்திகளால் அடிப்படையான இலக்கணமாகப் படிக்கப்படும் புத்தகம் நன்னூல். அதைச் சங்கரநமச்சிவாயருரையோடும் விசேஷக் குறிப்புக்களோடும் இவர் வெளியிட்டார். அந்நூலுக்கு மிகவும் பழைய உரையாகிய மயிலைநாதருரையையும் இவரே முதல் முதலில் அச்சிட்டார். புறப்பொருள் வெண்பா மாலையென்பதைப் பழைய உரையுடனும் பொருட் சுருக்கத்துடனும் பிரசுரித்திருக்கிறார்.

தமிழ் நெறி விளக்கம் என்னும் அருமையான தமிழ் நூல் அழிந்தொழியும் நிலையில் இருந்தது. அதைத் தேடி ஆராய்ந்து வெளிப்படுத்தினார். இந்த இலக்கணங்கள் வித்துவான் பரீட்சைக்குப் பாடங்களாக இருக்கின்றன.

இதுவரையில் சொன்ன கிரந்தங்கள் இந்தத் தமிழ்ப் பெரியாருடைய அரிய பதிப்பு நூல்கள்.

இவர் பல செய்யுட்களை இயற்றியிருக்கிறார். அவை புஸ்தகரூபமாக வெளிப்படவில்லை. ஆனாலும் 1891-ஆம் வருஷத்தில் தண்டபாணி விருத்தம் என்னும் சிறு நூல் வெளிவந்தது. அதில் பல தோத்திரப் பாக்களும் கீர்த்தனைகளும் இருக்கின்றன. இவருடைய சங்கீத சாகித்திய வித்பத்திக்கு அந்தக் கீர்த்தனைகள் நல்ல சாக்ஷியாக விளங்குகின்றன.

புது எழுத்தாளர்களுக்கு வழி காட்டியாக இவர் வசன நடையில் எழுதிய புஸ்தகங்கள் தமிழுக்கு நிதிகளைப்போலப் பயன்படுபவை. இவருடைய வசன முயற்சி இவருடைய 30-ஆம் பிராயத்திலே ஆரம்பமாகிவிட்டது. 1885-ஆம் வருஷம் **மத்தியார்ஜ்ஜுன மான்மியம்** என்ற புஸ்தகத்தை வெளியிட்டார். அதில் திருவிடைமருதூரென்னும் சிவஸ்தலத்தின் பெருமைகள் சொல்லப்பட் டிருக்கின்றன.

அதற்குப் பிறகு 1898-ஆம் வருஷத்தில் **பௌத்தமத மும்மணிகள், மணிமேகலைக் கதைச் சுருக்கம்** இரண்டும் வெளிவந்தன. 1924-இல் **உதயணன் கதைச் சுருக்கம்** வந்தது. அதன்பின் ஒன்றன்பின் ஒன்ருகப் பல ஜீவிய சரித்திரங்களும் கட்டுரைக் கொத்தும் பிரசுரமாயின. **ஸ்ரீ மீனுட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம், கோபால கிருஷ்ண பாரதியார், கனம் கிருஷ்ணையர், மகா வைத்தியநாதையர்** என்ற நான்கும் இவர் தனியாக வெளிப்படுத்திய ஜீவிய சரித்திரங்கள். கலைமகளில் இவர் எழுதிய **வித்வான் தியாகராச செட்டியார் சரித்திரம்** வெளியாகிக் கொண்டிருக்கிறது. '**என் சரித்திரம்**' என்ற பெயரோடு இவர் ஆனந்த விகடனில் எழுதிவந்த சுய சரித்திரம் 122 அத்தியாயங்களோடு நின்றுவிட்டது. தமிழ் மக்கள் அதை மிகவும் ரஸித்துப் படித்துவந்தார்கள்.

டாக்டர் உ. வே. சாமிநாதையர்

இவருடைய கட்டுரைத் தொகுதிகள் வருமாறு:— நான் கண்டதும் கேட்டதும், புதியதும் பழையதும், நல்லுரைக்கோவை - நான்கு பாகங்கள், நினைவு மஞ்சரி. திருவள்ளுவரும் திருக்குறளும் என்பது ஒரு சிறிய ஆராய்ச்சிப் பிரசங்கம்.

இவை புஸ்தக உருவாக வெளிவந்தவை. இவற்றை யன்றி இவருடைய பதிப்பு நூல் ஒவ்வொன்றிலும் காணப்படும் ஆராய்ச்சிகள், கவி சரித்திரங்கள் முதலியனவும் இவர் தமிழ் வசன இலக்கியத் துறையில் உதவிய மணிகளாகவே கருதற்கு உரியன.

இப்பெரியார் தமிழ்நாட்டில் அவதரித்துப் பதிப்பித்தும் எழுதியும் வழங்கிய இந்தக் கிரந்தங்களெல்லாம் தமிழ்க் களஞ்சியமாக எக்காலத்தும் தமிழ் நாட்டாரால் பாராட்டிப் போற்றப்பெறும்.

3342

முற்றும்

கதைக் கோவை - அல்லயன்ஸ் பிரசுரங்களின் சிகரம்
—ஹிந்துஸ்தான்

கதைக் கோவை

முதல் தொகுதி

40—எழுத்தாளரின் சிறு கதைகள்—40

இரண்டாம் தொகுதி

50—எழுத்தாளரின் சிறு கதைகள்—50

மூன்றும் தொகுதி

60—எழுத்தாளரின் சிறு கதைகள்—60

நான்காம் தொகுதி

75—எழுத்தாளரின் சிறு கதைகள்—75

நான்காம் தொகுதியைப்பற்றிய அபிப்பிராயங்களில் சில

The Hindu :—None of the writers presented in this volume has appeared in the earlier volume of stories. * the present volume maintains a high standard.

பாரத தேவி.—*ஒவ்வொரு கதையும் ஒவ்வோர் அம்சத்தில் மிகவும் சிலாக்கியமாகவே விளங்குகிறது.

சக்தி.—*ஒவ்வொரு கதையிலும் ஒவ்வொரு விதமான நடையழகும், புதுப்புதுக் கருத்துகளும் வெவ்வேறு வகையான வர்ணனைகளும், விதம் விதமான சுவைகளும் விரவி நிற்கின்றன.

தினமணி.— * 4-ஆம் தொகுதியில் சிறந்த சிறுகதைகள் அடங்கி யிருக்கின்றன.

சந்திரோதயம்.—*பல ஆசிரியர்களுடைய பலதரமான கதைகள் இந்தக் கோவையில் அடங்கியிருக்கின்றன. அமைப்பு அழகாக இருக்கிறது.

(எழுத்தாளர்கள் விலை விவரங்களுக்கு எழுதுக)

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

3342

என் சரிதம்

மகாத்மா காந்தி
எழுதியது

மகாதேவ தேசாய், ஹரிபாவு உபாத்தியாய ஹிந்தியில் சுருக்கியதை இனிய எளிய நடையில் கா. ஸ்ரீ. ஸ்ரீ. மொழிபெயர்த்தது.

விலை ரூ. 3-8-0

பத்திரிகைகளின் அபிப்பிராயங்களில் சில

பாரத தேவி.—*எளிய வாழ்க்கையும், உயரிய சிந்தனையும் நிறைந்த காந்திஜியின் சரிதம், தூய்மையான துணிவு நிறைந்த வாழ்வுக்கு ஒரு வழிகாட்டியாகும்.

ஹனுமான்.—*மாணவர் மட்டுமின்றி, தேசிய ஆர்வங்கொண்ட எல்லா இளைஞர்களுக்கும் பயன்படும் என்பதில் சந்தேகமில்லை.

Indian Express :—We trust that the students and youths will make the best use of this attractive publication.

The Hindu :—The necessity for every reader in Tamilnad to be informed and inspired by Gandhiji's life needs no emphasis and this excellent translation will provide him a good introduction.

Sunday Times :—Is pre-eminently fit to be included as a text-book in our Educational Institutions.

ஆனந்த விகடன்.— *மிகவும் உயர்ந்த முறையில் பிரசுரித்திருக்கிறார்கள் அல்லயன்ஸ் கம்பெனியார். *இந்நூல், பள்ளிக்கூடங்களில் பாட புத்தகமாக வைக்கத்தகுந்தது.

கல்கி.— * ஓர் அதிமதுர பொக்கிஷம் என்று சொல்லலாம்.

ஹிந்துஸ்தான்.— * இந்த அற்புதமான சரித்திரத்தைப் படித்தால் புனிதமடைவதுடன் பயனும் பெறலாம்.

சக்தி.—*முன்பு இல்லாத புது விஷயங்கள் பல இதில் சேர்க்கப் பெற்றுள்ளன.

தினசரி.— * மாணவர் மாத்திரமல்ல; ஒவ்வொருவரும் அவசியம் படிக்கவேண்டும். வாழ்வுக்கோர் நல்ல வழிகாட்டி 'என் சரிதம்'. இது ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்கவேண்டிய புஸ்தகம்.

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை